பக்கங்கள்:20+VIII=இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 04ஞாயிற்றுக்கிழமை (17.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 052

# பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் அந்தப் பதவியிலிருந்து தூக்கப்பட்டார்

## விடயங்களை அமைச்சர் சிதம்பரம் தமக்கேற்பக் கையாள வசதியாக



புதுடில்லி, ஜனவரி 17

இதுவரை இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகப் பதவி வகித்து வந்த எம்.கே.நாராயணன் அந்தப் பதவியிலிருந்து திடீரெனத் தூக்கப்பட்டு மாநிலம் ஒன்றின் ஆளுநராக நியமிக்கப்படுகின்றார் எனப் புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

இந்திய மத்திய உள்துறை அமைச்சரான ப.சிதம்பரம், நாட்டின் தேசிய பாதுகாப்பு உட்பட்ட விவகாரங்களை தமக்கேற்ற முறையில் கையாளுவதற்கு வசதியான சூழலை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கிலேயே இந்த அதிரடி மாற்றம் செய்யப்படுவதாகப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. (20ஆம் பக்கம் பார்க்க)



# எந்தவிதமான நிதி சேகரிப்புகளிலும் குடாநாட்டுப் பொலிஸார் ஈடுபடவில்லை

## மோசடிக்காரர்கள் குறித்து ஏ.எஸ்.பி. மாரப்பன எச்சரிக்கிறார்

யாழ்ப்பாணம்,ஜன.17

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்றோ அல்லது வேறு எந்தவொரு நிகழ்ச்சிகள், தரும காரியங்களுக்கு என்றோ யாழ்.குடாநாட்டில் பொலிஸார் நிதி சேகரிப்பு எதிலும் ஈடுபடவில்லை. இந்த விதமான நிதிசேகரிப்பில் ஈடுபட்டு வரும் மோசடிக்காரர்கள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும்.

குடாநாட்டில் பொலிஸாரின் பெயரைப் பயன்படுத்தி நிதி சேகரிக்கும் நடவடிக்கைக்கும் காவல்துறைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று யாழ்.மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.மாரப்பன அறிவித்திருக்கிறார்.

நேற்றைய உதயனில் *'பொலிஸார் எனக் கூறி குடாநாட்டில் பொதுமக்களிடம் பணம் கறக்கும் கும்பல்'* என்ற தலைப்பில் வெளியாகி இருந்த செய்தி தொடர்பாக குறிப்பிடுகையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.மாரப்பன தெரிவித்த விளக்கம் வருமாறு:-

இது போன்ற நிதி சேகரிப்பில் ஈடுபடு (20ஆம் பக்கம் பார்க்க)

**கண்ணிவெடி கவனம் இரண்டு பக்க இணைப்பு நாளை வெளிவரும்**

## தேர்தல் வன்முறைகள் குறித்து 'கபே' அமைப்பு கடும் விசனம்

கொழும்பு, ஜன. 17

தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அமைதி மற்றும் சுதந்திரமான தேர்தலை நடத்துவதில் தடையேற்படக் கூடும் என தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட் (20ஆம் பக்கம் பார்க்க)

# புனர்வாழ்வு முகாம்களில் தங்கியிருந்த முன்னாள் புலிகள் 566 பேர் நேற்று விடுதலை

கொழும்பு,ஜன.17

பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களில் 566 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை அவர்களது உறவினர்கள் மற்றும் பெற்றோரிடம் வவுனியாவில் வைத்து ஒப்படைத்ததாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத கம்லத் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு நிலையங்களில் இவர்களின் மனநிலையை விருத்தி செய்யும் விசேட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

# மதுரங்குளியில் தேர்தல் கூட்டத்திற்கு முன்னதாக நடைபெற்ற துப்பாக்கச் சூட்டில் ஒருவர் பலி!

## மாத்தறையில் 10 பேர் காயமுற்றனர்

கொழும்பு, ஜன. 17

புத்தளம் மாவட்டத்தில் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுரங்குளி நகரில் நேற்று நடைபெறவிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றுக்கு முன்பாக இரண்டு பிரதான கட்சி ஆதரவாளர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதல்களில் அருண சமன்குமார என்ற 19 வயது இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளரான இந்த இளைஞனுடன் ஏனைய ஐந்து பேரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாக பொலிஸார் தெரிவித்தனர். (20ஆம் பக்கம் பார்க்க)

தைத்திருநாளை முன்னிட்டு SINGER Plus

அள்ளி வழங்கும் மாபெரும் விலைக்கழிவுகளும் சிறப்பு வெகுமதிகளும்

யாழ், நெல்லியடி, சுன்னாகம், சாவகச்சேரி மற்றும் மானிப்பாய் சிங்கர் பிளஸ் காட்சியறைகளில்

தைப்பொங்கல் கொண்டாடும் அனைவருக்கும் விசேட தைத்திருநாள் விலைக்கழிவுகளும் சிறப்பு வெகுமதிகளும்

5 % வரை

தை 14 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை

கதிரவன் நல்லொளி வீச நாற்திசையிலும் நற்பயிர் விளைய உலகெலாம் இன்பம் சூழ...

SINGER Plus

தெரிந்து வாங்க பரந்த வகைகள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



"இலங்கையின் எதிர்காலம் எங்கே செல்கிறது?" எனும் தலைப்பில் குடிமக்கள் குரலுக்கான மேடை எனும் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக்கூட்டம் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்தக் கூட்டத்தில் விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சர் பேராசிரியர் திஸவிதாரண, அரசமைப்பு விவகார, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் டியூ.குணசேகர, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணி) செயலாளர் சிறீதரன், ஜனநாயக இடது சாரி முன்னணியின் பிரதிநிதி மோகன், யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சுதந்திர ஊடகவியலாளர் மனோரஞ்சன் ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவதை படங்களில் காணலாம். *(படங்கள்:உமா, தயாளன்)*

## வன்னிக்குச் செல்ல இயலாத ஆசிரியர்களை ஆவணங்களுடன் நாளை வருமாறு அழைப்பு

வன்னிப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று பணியாற்ற இயலாத நிலையிலுள்ள ஆசிரியர்களுக்கான அவசர கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு ஆரியகுளம் உயர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பிரஸ்தாப ஆசிரியர்களின் விடயம் குறித்து மனிதாபிமான ரீதியில் பரிசீலிப்பதற்குத் தயாராக இருப்பதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஐ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

எனவே, ஆசிரியர் விவரங்களை தொலைநகல் செய்வதற்குத் தேவையான சான்றுப்படுத்தல் மூல ஆவணங்களுடன் நாளை திங்கட்கிழமை ஆரியகுளம் உயர் கல்வி நிலையத்திற்கு தவறாது சமுகம் தருமாறு சம்பந்தப்பட்ட இணைப்பு ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(ஒ-50-14)

**விற்பனைக்கு**

QJ - XXXX தொடரிலக்க Butter Colour ஓட்டோ 2 STROKE விற்பனைக்கு.
M.M.V Road,
Nellidy. தொடர்பு : 021 2264875

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்
A/L 2012 CHEMISTRY
ENG MED
Tue, Thurs 6.15 a.m
M.A.NIROJAN B.Sc.
- A/L 2012 கலை, வர்த்தக, கணிதப்பிரிவுகள்
- Gr.1 முதல் O/L வரை
- Gr.6 To 11 Eng. Med.
- I.C.T., G.I.T.

ESWARRAN Business class
Experience five star bus Service
Daily and Direct
Colombo to Jaffna
Rs1200/-
#201B, Dam street, Colombo 12, Sri lanaka.
Tel: +94 112 433 889
Fax: +94 112 435 247
#115, Kasthuriyar Road Jaffna, Sir Lanka.
Tel: +94 21 222 2813
Fax: +94 21 222 4317
CONVENIENT TIMINGS
COLOMBO - DEP 08.00PM | JAFFNA - ARR - 06.30AM
JAFFNA - DEP 08.00PM | COLOMBO - ARR - 06.30AM
CALL ESWARRAN
077 6122876, 077 6136911, 077 3865439
No Bookings After 2p.m
Make Early Booking for Avoid Rush

திருச்செந்தூர் முருகன் துணை
இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் ஜோதிடர்கள் சக்தி ஈஸ்வரன் சாமிராஜா இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் புகழ் பெற்ற ஜோதிட மாமணிகள் உங்கள் ஜாதகம், கைரேகை, திருமணத்தடை, குழந்தையில்லா குறைபாடுகள், கோர்ட் வழக்கு, தொழில் சம்பந்தமான சகல பிரச்சினைகளுக்கும், பில்லி சூனிய பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண நேரில் சந்திக்கவும். குறுகிய கால விஜயம் நேரில்சந்திக்கவும்.
லவநாதன் தங்குமிடம் 67/42,சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். T.P &07779266027 & 0778711687

**அறை/வீடு வாடகைக்கு**

கொழும்பு வெள்ளவத்தையில் AC/NON AC அறைகள், 2 அல்லது 3 அறைகளுடன் கூடிய வீடுகள் நாள் அல்லது மாத வாடகைக்குண்டு. தொலைபேசி மூலம் பதிவுகள் மேற்கொள்ளலாம்.
Suriyan Rest,
18/3, Station Road, Wellawatta.
T.P.0112581441, 0112556175

**தவறிவிட்டது**

38/4, இந்து பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த ஜெயகாந்தராஜா மணிமலர் என் பவருடைய தேசிய அடையாள அட்டை (758223914V) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஆரியகுளம் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்துதவவும் (சன்மானம் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு: T.P NO : 021 300 7528

**மணமகள் தேவை**

யாழ்.உயர் இந்து 1979 இல் பிறந்த 5'4'' உடைய நவாலியில் கோயில் பூசகராக பணிபுரியும் அத்த நட்சத்திரமுடைய செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கு மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு : 021 7914647

**கடை வாடகைக்கு**

மணிக்கூட்டு வீதியில் 320 சதுர அடி கடையொன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு : 0771547595

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 36 வயதுடைய 12 இல் செவ்வாயுடைய பட்டதாரி ஆசிரியருக்கு மணமகள் தேவை.
தொடர்பு : 0774129826

**தேவை**

சுகாதார தொழிலாளிகள் ஆண்/பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்.
நியூ யாழ் வைத்தியசாலை, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. T.P : 222 3533 ,1011

**காணி விற்பனைக்கு**

நவாலி தெற்கில் பாதையோரமாக கிணறு அடங்கிய 5 ¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 0771547595

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் மேற்கு காங்கேசன்துறை வீதிக்கு சமீபமாக உள்ள முத்தட்டு மட வீதிக்குள் நாற்புற ... கூடிய 9½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. ... எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.
0773102225 (நாதன்).

## திலக நர்த்தனாலயத்தின் கண்ணீர் அலைகள்



### அமரர் கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

(Rtd.S.P.H.I, A.M.C, Jaffna, ஸ்தாபகர் திலக நர்த்தனாலயம், முன்னாள் தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், தென்மராட்சி, முன்னாள் தலைவர், இளைப்பாற்று ஓய்வூதியம் பெறுவோர் சங்கம், தென்மராட்சி) (இ/564173)

*திலக நர்த்தனாலயத்தை ஸ்தாபித்த தந்தையே!*
*திக்கெட்டும் கலை பரவ வழிசமைத்த*
*தெய்வமே - நீங்கள்*
*தில்லைக் கூத்தன் திருவடியோடிணைந்த*
*செய்தி கேட்டு*
*திலக நர்த்தனாலய சமூகம் தேம்பி இங்கு*
*அழுகுதையா!*

திலக நர்த்தனாலய மாணவர்கள்
இலங்கை, கனடா, லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா.

## மரண அறிவித்தல்

### செல்வி இராசநாயகம் சிவகௌரி

தாவடியைச் சேர்ந்த செல்வி இராசநாயகம் சிவகௌரி நேற்று (16.01.2010) சனிக்கிழமை இறைவன் அடிசேர்ந்தார்.

அன்னார் இராசநாயகம் - கமலேஸ்வரி தம்பதியினரின் ...க புத்திரியும், சர்வானந்தா, சடாஷ்ஷரா ஆகியோரின் சகோதரியும், திருமதி பு. சர்வானந்தனின் மைத்துனியும், கிருசாந், தர்சி, குணசாந்தி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.01.2010) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெ. இராசநாயகம்.
(தொ.பே. இல 021 321 8772)
தாவடி. (93958)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை வெற்றிகரமாக மஹிந்த ராஜபக்ஷ அரசு கையாண்டமை எங்ஙனம்?

தமிழகத்தில் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்று மத்தியில் ஆட்சியமைப்பதற்கு ஸ்ரீலங்கா அரசதலைவர் மஹிந்த ராஜபக்ஷ உதவி செய்தார் என்று கூறியுள்ளார் ஸ்ரீலங்கா அரச தலைவரின் செயலர் லலித் வீரதுங்க. இந்தியாவின் தேர்தல் இடம்பெற்ற சமயத்தில் அந் நாட்டு அரசினால் ஸ்ரீலங்காவின் மீது பிரயோகிகப்பட்ட அழுத்தத்தை மஹிந்த ராஜபக்ஷ லாவகமாக முறியடித்தார் என்றும் ஸ்ரீலங்கா அரச தலைவரைப் புகழ்ந்திருக்கிறார் அவரது செயலர்.

இந்தியாவுடனான ஸ்ரீலங்காவின் புதிய அணுகுமுறை மற்றும் பல விடயங்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா அரச தலைவரின் செயலர் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றில்



எம்.கே.நாராயணன்

கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

### இந்தியாவைக் கையாண்ட விதம்

ஸ்ரீலங்காவின் வரலாற்றில் முதன்முறையாக இந்தியாவுடனான அணுகுமுறைக்கும் எமது நாட்டின் வெளிவிவகாரக்கொள்கைக்கும் மஹிந்த ராஜபக்ஷவினால் புதிய உருவம் கொடுக்கப்பட்டது. ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பிரச்சினையில் இந்தியா தலையிடும் போதெல்லாம் ஸ்ரீலங்காவின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து இந்தியாவுக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை. இதுவே, கடந்த 30 வருடங்களாக ஸ்ரீலங்கா பிரச்சினையில் இந்தியாவை சிக்கலான நிலைக்கு உட்படுத்தி. இந்தியாவும் ஸ்ரீலங்காவைப் பிழையாகப் புரிந்துகொண்டது.

இதனை மாற்றியமைத்து, இந்தியாவுக்குத் தெளிவான புரிதல்களை எற்படுத்தி, எமது நடவடிக்கைகள் குறித்த உடன் தகவல் பரிமாற்றங்களை இந்தியாவுடன் மேற்கொள்வதன் மூலம் இதற்குத் தீர்வு காண மஹிந்த தீர்மானித்தார். இதன் பிரகாரம், இரு நாடுகளின் மத்தியிலும் இந்த விடயத்தினைக் கையாளுவதற்கு உயர்மட்டக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. இது மஹிந்தவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட ஏற்பாடு ஆகும்.

கடந்த 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் எமது முதலாவது சந்திப்பு இடம்பெற்றது. அதன்பின்னர் தொடர்ச்சியாக ஸ்ரீலங்காவிலும் இந்தியாவிலும் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றன. இருநாடுகளுக்கும் இடையில் தீர்க்கமுடியாத சில பிரச்சினைகள் காணப்படுவதாக எமது குழுக்கள் இனம்காணுகையில், நாம் இருதரப்பினரும் நாட்டுத் தலைவர்களிடம் அந்த விடயங்களைத் தீர்ப்பதற்கான பொறுப்பினைக் கையளித்தோம். இந்திய தரப்பில் மன்மோகன் சிங்கும் ஸ்ரீலங்காவில் மஹிந்த ராஜபக்ஷவும் அந்த சிக்கல்களைப் பேசித் தீர்த்துக்கொண்டார்கள். இந்தச் செயன்முறையானது மிகத்திறமையான, பயனுள்ள பெறுபேற்றைப் பெற்றுத்தந்தது.

இருநாடுகளுக்கும் இடையில் கடந்த கால வரலாற்றினை எடுத்துப்பார்த்தால், தமக்கு ஏதோவொன்றைக் கூறிவிட்டு ஸ்ரீலங்கா வேறொன்றைச் செய்வதாக இந்தியா எண்ணியிருக்கிறது. இதனால், இரு நாடுகளுக்கும் இடையில் ஒருவித சந்தேகம் வலுப்பெற்றது. 1970 களை பார்த்தால் அப்போது இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையில் வலுவான உறவுநிலை இருந்து வந்தது. இந்திரா காந்தியினதும் பண்டாரநாயக்கவினதும் பிள்ளைகள் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். இருநாடுகளின் தலைவர்களின் குடும்பங்களுக்கும் இடையில் நெருங்கிய உறவு இருந்து வந்தது. ஆனால், 1977 ஆம் ஆண்டு தேர்தலுக்கு பின்னர், சில அரசியல்வாதிகள் வெளியிட்ட சில கருத்துக்களால் இருநாடுகளின் தலை வர்களுக்கும் இடையில் காணப்பட்ட உறவு நிலை முறிய ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து, இருநாடுகளின் உறவும் பாதிப்படைந்தது.

இதுபோன்ற பல சம்பவங்களை 40 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து அவதானித்து வந்த மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவுடன் எவ்வாறான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும், இந்தியாவை எவ்வாறு கையாளவேண்டும் என்றும் மிகத்தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார். அதனடிப்படையில், அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் கடந்த நான்கு வருடங்களில் இருநாடுகளுக்கும் இடை யில்

சிறந்த உறவைப் பேணி, மிகப்பெரிய பிரசினைகளையும் சுமுகமாகத் தீர்ப்பதற்கு உதவின.

### விடுதலைப் புலிகளைக் கையாண்ட விதம்

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வரும் போது விடுதலைப் புலிகளின் பலம் உச்சத்தில் இருந்தது.

விடுதலைப் புலிகளின் கடற்பலம் மிக மிக வலுவாகக் காணப்பட்டது. அப்போதெல்லாம் அவர்கள் தொடர்ச்சியான ஆட்சேர்ப்பு மற்றும் ஆயுதக் கொள்வனவுகள் மூலம் தம்மைப் பலப்படுப்படுத்திக்கொண்டே இருந்தார்கள். அவர்களுக்குரிய பல வளங்கள் ஸ்ரீலங்காவின் சுங்கத் திணைக் களத்தின் ஊடாகவே சென்றன. யாழ்ப்பாணத்தில் நின்ற சிப்பாய்கள் ரவைகளற்ற துப்பாக்கிகளை வைத்திருக்கவேண்டிய நிலைக்கு, கொழும்பின் ஊடாக அரசியல் மாற்றத்தினை சம்பந்தப்பட்டோர் ஏற்படுத்தி வைத்திருந்தார்கள்.

இந்த நிலையை மாற்றியமைப்பதற்குத் தேசிய பாதுகாப்புச் சபை ஊடாக பல மாற்றங்களை மேற்கொள்வதற்கு மஹிந்த தீர்மானித்தார். இராணுவம், கடற்படை, வான் படை, காவல்துறை ஆகியவற்றுக்கு மேலதிகமாக மக்கள் பாதுகாப்புப் படையையும் உருவாக்கினார். இவற்றைவிட முக்கியமானது, புலனாய்வுப் பிரிவு. விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவு அப்போது அரச புலனாய்வுப் பிரிவைவிட பலம்வாய்ந்ததாகக் காணப்பட்டது. ஆகவே, விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைவிடப் பலம்வாய்ந்த அரச புலனாய்வுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு மஹிந்த தீர்மானித்தார்.

சகல திட்டங்களையும் ஒருங்கமைத்து, அவற்றுக்குரிய உத்தரவுகளை வழங்கி, நேர்சீரான பாதையில் படைகளை கொண்டு நடத்தியவர் மஹிந்த ராஜபக்ஷ. அவரது ஆட்சிக்காலத்தில்தான் ஸ்ரீலங்காவின் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் ஒவ்வொரு புதன்கிழமையும் தவறாமல் கூடியது. போர் நடவடிக்கைகள் குறித்த முழுமையான - விரிவான - கலந்தாலோசனைகள் அங்கு இடம்பெற்றன. உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. ஒன்றை நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன். முதலில் கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்ற வேண்டும் என்று முடிவெடுத்தவர் அரச தலைவர் மஹிந்த ஆவார். அவர்தான் அந்தத் திட்டத்தை முன்வைத்து அதற்கேற்ப களப் பணிகளை முன்னெடுக்க உத்தரவிட்டார்.

### சர்வதேச சமூகத்தைக் கையாண்ட விதம்

ஸ்ரீலங்காவில் இவ்வாறான ஒரு முழுமையான நடவடிக்கையை மேற்கொள்ள ஆரம்பிக்கும்போது சர்வதேசத்திடமிருந்து வந்த அழுத்தங்களைச் சமாளிக்கவேண்டியது அரசதலைவருக்கான அடுத்த சவாலாகக் காணப்பட்டது. விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் மிகவும் பலமாக உள்ளனர். கடந்த 30 வருடங்களாக வெளிநாடுகளில் விடுத லைப் புலிகள் மிகப் பலமான அமைப்பாக உருவெடுத்துள்ளனர். அவர்களின் வளர்ச்சி எனப்படுவது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. அவர்களது பிரசார தேர்ச்சி மிகவும் உச்சத்தில் காணப்படுகிறது.

### பலமான செய்தி ஊடகங்கள்

குறிப்பாக வானொலிகள், தொலைக் காட்சிகள் என அவர்கள் மிகப்பலமான ஒரு கட்டுமானத்தை வெளிநாடுகளில் பேணி வருகிறார்கள். இவற்றை முறியடிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசுக்கு கடந்த காலங்களில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் இந்தப் பலமான கட்டமைப்பு மூலம் ஸ்ரீலங்கா என்பது படு பயங்கரமான நாடு என்று வெளிநாடுகள், வெளிநாட்டு அமைப்புகள் ஆகியவை நம்பவைக்கப்பட்டிருந்தன. விடுதலைப் புலிகளின் இந்தப் கட்டமைப்புக்கள் பரப்பியுள்ள பிழையான பிரசாரத்தின் மூலம் பிரிட்டன் முதல் ஏன் இந்தியா வரை பிழையாக நம்பவைக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்தியா தனது தவறைப் பின்னர் உணர்ந்து கொண்டது.

2005 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும்போது மஹிந்த சிந்தனை என்று மஹிந்த ராஜபக்ஷவினால் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது. அதில் அவர், இந்த நாட்டில் அமைதியை உருவாக்குவேன் என்று கூறியிருந்தார். அதை நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாட்டில் அமைதியை உருவாக்குவதற்கு அவர் இரண்டு வழிகளைப் பின்பற்றியிருக்கலாம். ஒன்று - விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியிருக்கலாம். மற்றையது - இராணுவ ரீதியில் அவர்களைத் தோற்கடித்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தலாம். விடுதலைப் புலிகளுடன் மஹிந்த பேச்சு நடத்தியிருந்தால் இரண்டு, மூன்று ஆண்டுகள் பேச்சு நடந்திருக்கும். அந்தக் காலப்பகுதியில், விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டிருப்பார்கள். அமைதி நாட்டில் திரும்பியிருக்காது. 20 வருடங்களுக்கு முன்னர், அரச பணிக்கு நான் சென்றபோது, உயிருடன் திரும்ப வருவேனா என்பது எனக்குத் தெரியாது. அவ்வளவுக்கு நாட்டில் வன்முறைகள் மலிந்திருந்தன. ஆனால், இன்று அந்த நிலை இல்லை. அதற்குக் காரணம் மஹிந்த மேற்கொண்ட உறுதியான முடிவு.

தனது முடிவுக்கு முன்னால் தடையாக இருந்த சர்வதேச அழுத்தத்தை மஹிந்த எவ்வாறு முறியடித்தார் என்பதற்கு நான் இரண்டு சம்பவங்களை இங்கு குறிப்பிடுகிறேன். கடந்த மே மாத நடுப்பகுதியில் நடைபெறவிருந்த தமிழ்நாட்டுத் தேர்தலினால், இந்திய மத்திய அரசு மிகவும் சிக்கலுக்கு உள்ளானது. தமிழர்களின் ஆதிக்கம் உள்ள தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவுகள் தமக்குப் பாதகமாக அமையுமோ என்று இந்திய அரசு அஞ்சியது. ஸ்ரீலங்காவுக்குத் தனது உயர்மட்டக் குழுவை அனுப்பியது. இங்கு வந்த அவர்கள், தயவுசெய்து போரை நிறுத்துங்கள் - என்றார்கள். ஆனால், அரச தலைவரோ அதற்கு மறுத்துவிட்டார். ''இல்லை. என்னால் முடியாது. முப்பது வருடங்களுக்குப் பின்னர் எனது நாட்டை மீட்பதற்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை யாருக்காகவும் விட்டுக் கொடுக் கமாட்டேன்'' - என்றார். தமது நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல்களையெல்லாம் இந்தியத் தரப்பினர் விளக்கினார்கள். காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் வெற்றிபெறுவதற்கு வேறு என்ன வகையில் தான் உதவ முடியும் - என்று மஹிந்த கேட்டார். அப்படியானால், கனரக ஆயுத பாவனையையாவது நிறுத்துங்கள் என்று இந்தியக் குழுவினர் கேட்டார்கள். அதற்கு

உடனடியாகவே சம்மதித்த மஹிந்த, அதற்கான அறிவிப்பையும் விடுத்தார். இந்தியத் தரப்பினர் திருப்தியோடு நாடு திரும்பினார்கள்.

இன்னொரு சம்பவத்தையும் நான் குறிப்பிடுகிறேன். கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி பிரிட்டன் வெளிவிவகார செயலர் டேவிட் மில்லிபான்ட் மற்றும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குஷ்னர் ஆகியோர் ஸ்ரீலங்காவுக்கு வந்தார்கள். உடனடியாக இந்த இராணுவ நடவடிக்கையை நிறுத்துங்கள் என்றார்கள். அவர்களுக்கு அரச தலைவர் கொடுத்த பதிலால் நான் உண்மையிலேயே பூரிப்படைந்தேன். அந்தச் சந்திப்பில் நானும் இருந்தேன் என்பதில் பெருமை கொள்கிறேன். ''ஸ்ரீலங்கா எந்த நாட்டினதும் காலனித்துவ தேசம் அல்ல. ஸ்ரீலங்கா எனப்படுவது இறைமையும் ஆட்புல ஒருமைப்பாடும் உடைய சுதந்திர குடியரசு. எமக்கென ஒரு கௌரவம் இருக்கிறது; எமக்கென பெருமை இருக்கிறது; எமது நாட்டுக்கு ஒரு முழுமை இருக்கிறது. இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கு இந்த நாட்டு மக்கள் என்னைத் தெரிவு செய்திருக்கிறார்கள். அவர்களையும் இந்த நாட்டையும் காப்பாற்றவேண்டியது எனது பொறுப்பு. இங்கு நடக்கும் சம்பவங்கள் உங்களுக்கு வெறும் செய்தி. ஆனால், எமக்கு மரண வேதனையும் தீராத துயரும் ஆகும். முப்பது வருடங்களுக்குப் பிறகு கண் முன்னே தெரியும் விடிவையும் வெற்றியையும் என்னால் கைவிடமுடியாது'' - என்று அடித்துக்கூறினார் மஹிந்த.

இப்படியாகவே அரசதலைவர் மஹிந்த சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை முறியடித்து நாட்டுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்தார். அதனை நாங்கள் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

### சரத் பொன்சேகா விவகாரம்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போரின் வெற்றியில் பங்களித்திருக்கிறார். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், தானும் பங்களித்திருக்கிறார் என்ற [illegible] கூறாமல் தான்தான் பங்களித்திருக்கிறார் என்று அவர் கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. கடற்படை, வான் படை, காவல்துறை, ஏன் நீங்கள், நான் எல்லோரும்தான் இந்தப் போருக்குப் பங்களித்திருக்கிறோம். முப்பது வருடங்களாக இந்தப் போரைப் பொறுத்திருக்கிறோம் என்றால் அது வெற்றி கொள்ளப்பட்டபோது, அதில் எமக்கும் பங்கிருக்கிறது. போரில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் கண்டிக்கத்தக்கவை.

ஐக்கிய நாடுகள் சபையும் அதன் அதிகாரி பிலிப் அல்ஸ்டொனும் இவ்வளவு கால மும் மிகுந்த புரிந்துணர்வுடன் ஸ்ரீலங்கா விட யத்தில் மௌனமாக இருந்தார்கள். ஆனால், பொறுப்புள்ள அதிகாரியின் பொறுப்பற்ற பேச்சினால், பிலிப் அல்ஸ்டொன் கடிதங்களை அனுப்பத் தொடங்கியுள்ளார். அரசியலிலோ வேறு எந்தத் துறையிலோ இருப்பவர்கள் முதலில் கருத்து வெளியிடும்போது பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண் டும். தாங்கள் வெளியிடும் கருத்தினால் இந்த நாட்டை எங்கே இழுத்துச் செல்கிறார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

### ஸ்ரீலங்காவின் வெளிவிவகாரக் கொள்கை

லிபியாவுடன் ஸ்ரீலங்கா நெருக்கமாக உள்ளது என்ற குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. ஏன் லிபியாவுடன் அமெரிக்கா நெருக்கமான உறவை பேணவில்லையா? ஈரானுடன் ஸ்ரீலங்கா நெருக்கமாக உள்ளது என்கிறார்கள். கச்சாய் எண்ணையின் பரல் ஒன்று 147 டொலர்களாகச் சென்று 200 டொலர்களாகவும் அதிகரிக்கும் நிலை காணப்பட்டபோது, பொறுப்புள்ள அரச தலைவராக ஈரானுடன் பேசி, நாட்டுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மஹிந்த நடவடிக்கை எடுத்தார்.

தற்போது, 'ஜி.எஸ்.பி. பிளஸ்' என்ற வர்த்தக வரிச் சலுகையை ஸ்ரீலங்காவுக்கு வழங்கமுடியாது என்று ஐரோப்பிய ஒன்றியம் அடம்பிடிக்கிறது. அதனை வழங்குவதாயின் மனித உரிமைகள் காப்பு உட்பட எத்தனையோ விடயங்களை அது நிபந்தனைகளாக முன்வைக்கிறது. 'ஜி.எஸ்.பி.பிளஸ்' பெற்றுக்கொள்ளும் மற்றைய நாடுகளிடமெல்லாம் இவ்வாறான நிபந்தனைகள் முன்வைக்கப்படவில்லை. ஆனால், சிறிலங்காவுடன் மட்டும் அவர்கள் அடம்பிடித்துக் கொண்டுநிற்கிறார்கள். இந்த வரிசலு



லலித் வீரதுங்க

கையைத் தடுப்பதன் மூலம் அவர்கள் யாரைத் தண்டிக்கப் போகிறார்கள். ஆட்சியாளர்களையா? இல்லை. நாட்டு மக்களை.

இதனால்தான், பொதுநலவாய மாநாட்டில் அரசதலைவர் அதிபர் மஹிந்த, பாகிஸ்தானுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பொருளாதாரத் தடை யோசனையைக் கண்டித்தார். அந்தத் தடை மூலம் பாதிக்கப்படப் போகிறவர்கள் பொதுமக்களே தவிர, ஆட்சியாளர்கள் அல்லர் என்று கூறினார். ஆளும் அரசுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமாயின் அவர்களை சர்வதேச நீதிமன்றமோ, சர்வதேச விசாரணைகள் ஆணைக்குழுவோ எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லட்டும். ஆனால், நாட்டு மக்களுக்கு தீங்கு இழைக்காதீர்கள்.

**-காவியன் -**

ஐக்கிய நாடுகள் சபை இதுவரை ஸ்ரீலங்காவுக்கு எதிராக எந்தத் தடையையும் கொண்டுவரவில்லை. ஐ.நா. பாதுகாப்புச் சபை மிகுந்த புரிந்துணர்வைக் கொண்டுள்ளது. அதில் அங்கம் வகிக்கும் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் ஸ்ரீலங்காவின் நிலைப்பாட்டினை நன்கு தெரிந்துகொண்டுள்ளன.

மியான்மாருடன் ஸ்ரீலங்கா நெருக்கமாக இருப்பது ஏன் என்கிறார்கள். உலகிலேயே தேரவாத பௌத்த மதம் உள்ள நாடுகளில் ஒன்று தாய்லாந்து. மற்றையது மியான்மார். அந்நாட்டுடன் எமக்குக் கலாசார உறவுகள் உள்ளன. இந்தியாவுடனும் அப்படியான கலாசார உறவுகள் உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

(நன்றி: 'ஈழவிஷன்')

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு, கண்டி தற்பொழுது யாழில்.....

**DIPLOMA IN ENGLISH**

**SPOKEN ENGLISH** (Full/Part time) Duration 2-3 Months

அனுபவமிக்க திறமைவாய்ந்த ஆசிரியர்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேச எழுத வாசிக்க பயிற்சி வழங்கப்படும்

To Whom:- After O/L, A/L, etc..

Grammar... Speaking & Pronunciations.........
Reading..Listening...Writing...Vocabulary...etc

Free Audio CD & Handouts

Batch 1 2 3 0 4

UK VISA

உங்கள் காலடியிலே UK visa வசதிகள் செய்து தரப்படும்.

Call:-011 459 4 104

தனிப்பட்ட ... அனுமதி.... பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவும் தனித்தனி ஆசிரியரால் நடாத்தப்படும்

பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள். Tel: 0774032051

**INTERNATIONAL CITY COLLEGE PVT LTD**

NO 21, Stanly Road (People bank Lane), JaffnaTel: 0214 901 464
Email: www.icclanka@gmail.com Web: www.icclanka.com.

Impossible is nothing Experience the different


## தவறிவிட்டது

மட்டுவில் கிழக்கைச்சேர்ந்த செந்திவேல் செல்லம்மா என்பவரின் 1¾ பவுண் தங்கச் சங்கிலி கடந்த 13ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி பொதுச் சந்தைக்கும், பிரதேச செயலகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோப் சிற்றி விற்பனை நிலையத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (93957)

## வேலை வாய்ப்பு

**இலங்கை சிப்பாயா மிஷன்**
**( சிப்பாயா அபிவிருத்தித் திட்டம்**

வெளிக்கள உத்தியோகத்தர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் (21.01.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.33, அம்மன் கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது. ஆர்வம் உள்ளோர் நேரில் வரவும்

மேலதிக விவரங்களுக்கு- 0776770416, 0777187296

சிவசக்தி பரமானந்தம்
36, Temple Road,
Kokuvil East.

(93936)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சிவக்கொழுந்து



செட்டியகுறிச்சி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவக்கொழுந்து நேற்று (16.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசலிங்கம் (ராஜன் ரெக்ஸ், பண்டத்தரிப்பு), யோகலிங்கம் (மின்சார சபை, யாழ்ப்பாணம்), புஸ்பராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயராணி, நிலாவதனி, இராசமலர், ஈஸ்வரபாலன் ஆகியோரின் அன்பு மாமியும் தவசுதன், பிரதீபன், ஜெயந்தினி, நிறோஜனா, கீர்த்தனா, விநோஜன், தர்சிகா, சுஜிந்தன், தனுசிகா, கஜிதரன், சயானி, தவறூபி, கஜீபா, யசிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சம்பில்துறை மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.இராசலிங்கம்
(ராஜன் ரெக்ஸ், பண்டத்தரிப்பு),
சி.யோகலிங்கம்
(மின்சாரசபை, யாழ்ப்பாணம்)
(மகன்மார்).

செட்டியகுறிச்சி,
பண்டத்தரிப்பு.

(93950)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பூதத்தம்பி சரஸ்வதி



தோற்றம்
12.09.1938

மறைவு
27.01.2009

எங்கள் அன்பான அம்மாவே!
எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு ஆனாலும்
ஆறுதல் தந்திட ஆயிரம் உறவுகள்
தேறுதில்லை எங்கள் உள்ளம், தேடுகிறோம்
உங்களையே
எத்தனை பிழைகள் எத்தனை செய்திடினும்
பெற்றவர் நீர் அம்மா.
பொறுப்பதும் உங்கள் கடனே அம்மா!

இன்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை ந.ப 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

பூதத்தம்பி குடும்பத்தினர்
(கண்[illegible])

(93940)

## தேவை

புறொய்லர் கோழிகள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும.

தொடர்பு: புறொய்லர் விற்பனை நிலையம்
தும்பளை வீதி, பருத்தித்துறை.
0774366704 (564103)

## வேலைக்கு ஆள் தேவை

றொட்டி தயாரிப்பாளரும் தேநீர் தயாரிப்பாளரும் உணவு பரிமாறுபவரும் (Waiter) உடன் தேவை. தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: ஜ.சுரேஷ்
288, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0771751495

## மணமகள் தேவை

இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த 1977ஆம் ஆண்டு பூராடம் 26 கிரக பாவம் கொண்ட சிங்கப்பூர் தனியார் கம்பனியில் எக்கவுண்டனாக தொழில் புரியும் அழகிய படித்த ஆண் மகனுக்கு அழகிய படித்த பெண் தேவை.

தொடர்பு: 0775138186

(93955)

## காணி விற்பனைக்கு

யாழ். K.K.S. ROAD, CHAMPION LANE சந்தியில் (6 ½) பரப்புக் காணி மற்றும் யாழ்.பருத்தித்துறை வீதியில் சுபாஷ் ஹொட்டல் சந்திக்கு அருகாமையில் (4) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (MAC TRAVELS BUILDING)

தொடர்புகளுக்கு:
0777320051, 021 - 2222336

## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் யாழ். இந்து கௌரவ குடும்பம், UK Citizen 28, B.Sc. 35,(M.Sc.) Canada Citizen 29 (B.Com), 31, 33 வயது அவுஸ்திரேலியா citizen 26 (Doctor) ஆகிய மணமகள்மார் உள்ளனர். 24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக்கட்டணம் இல்லை.

லண்டன் தொடர்பு:- 00447508295863, 00447404120188,
Fax No: 00442086810707
E. mail: www ayngaran wedding @ yahoo.com

## கல்விச் சேவை

விவேகானந்த அக்கடமி, பலாலி வீதி, இல 3, 2ஆம் ஒழுங்கை, யாழ் நகரில் ஜேர்மன் டொஜ், நெதர்லாந்து டச், பிரெஞ், ஆங்கில மொழி வகுப்புக்களுக்கான பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விவரங்களுக்கு: 0213216928, 0771040805, 0779927117.

(93872)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே, சுயதெரிவு முறைபற்றிய வரன்முறையை தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ் பூத்த - சுயதெரிவு முறை முன்னோடி - தனிமனித நிறுவுநர் - சர்தேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி
2360488, 2360694, 4873929

### கால்நடை வைத்திய நிலையத் திறப்புவிழா

உடுவில் பிரதேச கால்நடை வைத்திய நிலையத் திறப்புவிழா திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் தெற்கு புன்னாலைக் கட்டுவன் வீதியில் திறந்து வைக்கப் படவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வக்சலா அமிர்தலிங்கமும், சிறப்பு விருந்திர்களாக உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், யாழ்ப்பாண கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகனேசன் ஆகியோரும் [illegible].

(50-86)


**O/L & A/L School Leavers**

புத்தாண்டில் உங்கள் முதல் ஆரம்பம் Computer கல்வியில் தொடங்கட்டும்

Diploma in MS Office Application | Diploma in Web Design & Development | Diploma in Desktop Publishing

Pay 4900/- only

அனைத்து பாடநெறிகளுக்கும் காலம்: 3 மாதங்கள்

Application - Programming - Graphic Design

| | |
|---|---|
| Advanced Diploma in Digital Pre-Press | 3 Months |
| Diploma in Digital Video Production | 3 Months |
| Advanced Diploma in Java Programming | 4 Months |
| Diploma in Office Automation | 4 Months |
| Adv. Diploma in Macromedia Application | 4 Months |
| Diploma in PC Professional | 4 Months |

யாழ்மாவட்டத்தில் எமக்கு வேறு கிளைகள் கிடையாது

**ASIAN COMPUTER EDUCATION**

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088


## விற்பனைக்கு

★ பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபி துணிகள்
★ சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சப்பாத்து, பந்து வகைகள்.
★ பான்சி வகைகள்
★ மலைநாட்டுத் தேயிலை
★ ஆண்களுக்கான ஜீன்ஸ், ஜம்பர் வகைகள்.

குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :
0775271806

சாபி மேக்கர்ஸ்,741/1, கே.கே.எஸ். வீதி,
இந்துக் கல்லூரி முன்பாக, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0775081775

(564172)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு இராசலிங்கம்



கோண்டாவில் புகையிரத நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராசலிங்கம் 14.01.2010 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா-தங்கச்சியம்மா தம்பதியரின் மருமகனும் அருளம்மாவின் அன்புக் கணவரும் புஸ்பலதா(இத்தாலி), சரவணபவன் (இத்தாலி), இராஜேஸ்வரி, மதுசுதன்,கிருஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், இராசையா (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), சிவஞானம், சிவராசா (ஜேர்மனி), தவமலர் (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திராணி, இரட்ணகுமாரி, வசந்தி(ஜேர்மனி), இலட்சுமணன் (இளைப்பாறிய தொழில் திணைக்கள உதவி அத்தியட்சகர்), சிவபாக்கியம்-சற்குணம், சறோஜினி, பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), அமரர் ஜீவரேகா ஆகியோரின் மைத்துனரும் ஐயாத்துரை, வேலும்மயிலும், துரைராசா, றஞ்சினி, குமாரசாமி ஆகியோரின் சகலனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.01.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்குச் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(இ-564168)

### அச்சலிங்கம் கந்தையா

(ஓய்வு பெற்ற நிர்வாக முகாமையாளர் - Heyleys Groups of Companies)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், தற்சமயம் கந்தர்மடத்தில் வசித்துவந்தவருமான அச்சலிங்கம் கந்தையா நேற்று (16.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக்கணவரும், கலாதேவி, கங்காதரன் (Retired Senior Assistant Director of Central Bank) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சோதி லிங்கம் (பௌதிகவியல் ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி), மலர்மதி (Deputy Director, Department of National Budjet) ஆகியோரின் மாமனாரும், குணாகரன், யாதவன், கீதாஞ்சலி, மயூரதி ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.2, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021222 7976

தகவல்:
சொ.சோதிலிங்கம்
(மருமகன்).

(93941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் ஓர் அங்கமாக சுதந்திர அரசை நிறுவுவதே எமது குறிக்கோள்

**அறுபது வருடங்களுக்கு முன்னர் நிலவிய அதே அரசியல் பின்னடைவு நிலையிலேயே இன்றும் - தனக்குரிய உரிமைகளை இழந்து - நிற்கிறது இலங்கைத் தமிழினம். அன்று பெரியார் சா.ஜே.வே.செல்வநாயகம் தீர்க்கதரிசனத்துடன் வெளியிட்ட கருத்துக்கள் இப்போதும் பொருந்துவனவாக அமைகின்றன. அவற்றின் பெறுமதிகருதி இன்றைய சந்ததியினரும் தெரிந்து கொள்ளும் முகமாக உதயனின் ஞாயிறு வெளியீட்டில் வெளிவருகிறது.**

இனி தமிழ் பேசும் மக்கள் சென்ற காலங்களில் அரசியல் உலகிலே தங்களை ஆபத்து எதிர்நோக்கிக்கொண்டிருப்பதாக எண்ணியது சரியோவென்று கவனிப்போம். தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட இன்றைய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறிது காலம் தான் ஆகின்றது. இதற்கிடையில் அரசாங்கமோ எடுத்துச் செல்லமுடியாத தொகையினவாய் நமக்குப் பாதகமான சட்டங்களை ஒன்றன்மேல் ஒன்றாக நிறைவேற்றியும் பரிபாலனத்துறையில் நம்மைப் பாதிக்கக்கூடிய கருமங்களை ஆற்றியும் கொண்டு வருகின்றது. தெளிவாகப் புலப்படுகின்ற சில உதாரணங்களை மாத்திரம் இங்கே எடுத்துக்காட்டினால் போதும் என்று கருதுகின்றேன். இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களில் அரைப் பங்கினரைப் பிரஜாவுரிமையற்றோராகச் செய்யும் ஒரே நோக்குடன் அரசாங்கம் பிரஜாவுரிமைச் சட்டங்களை நிரவேற்றியிருக்கின்றது. அந்நியர்களுக்கு எதிராகவே இச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று வெளிக்குக் கூறிக்கொள்கின்றனர். இது ஒரு போலி நியாயமாகும். இலங்கையின் மத்திய பாகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் 7 இலட்சம் தமிழ்த் தொழிலாளர்களுடைய பிரஜாவுரிமையைப் பறிப்பதே இச்சட்டங்களின் உண்மை நோக்காகும். இவர்களில் பெரும்பாலானோர் வேறு நாட்டையே அறியமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் இந்தியர்கள் அல்லர். இலங்கையர்களே. தமிழ் பேசும் மக்களாக இருப்பதே அவர்களுடைய ஒரேயொரு குற்றம். அரசியல் அதிகாரம் எண்ணுத்தொகையினையே பொறுத்திருக்கிறது. இந்த மலைநாட்டு தமிழர்களைச் சேர்த்து எண்ணினாலும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அரசியல் அதிகாரம் அற்றவராகவே இருக்கிறார்கள். இவர்களுள் மலைநாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் மக்களை நீக்கி விட்டால் எஞ்சியிருக்கும் தமிழ் பேசும் மக்கள் தொகையில் குறைந்த அரசியல் அநாதைகளாய் விடுவார்கள். இது போதாதென்று இந்த மலைநாட்டு தமிழ்த் தொழிலாலர்களின் வாக்குரிமையைத் பறிப்பதற்கு சட்டம் இயற்றிவிட்டார்கள். இது கொடுமையிற் கொடுமையாகும். அரசாங்கத்தின் நோக்கம் இந்நாட்டில் வசிப்பதற்கு பூரண உரிமையுடைய இம் மக்களை இந்நாட்டை விட்டுத் துரத்துவது, அல்லது அவர்களைப் பலவந்தமாக சிங்களம் பேசும் மக்களாக மாற்றுவது என்பது எவருக்கும் எளிதில் புலனாகும்.

தேசியக்கொடி விஷயத்தில் அரசாங்கம் நடந்துகொண்ட விதம். தமிழ்பேசும் மக்களுடைய உணர்ச்சிகளையும் உரிமைகளையும் உதாசீனம் செய்வதாக இருக்கின்றது. சிங்கக்கொடி - சிங்கள மன்னரின் கொடியேயாகும். இன்று, அது சிங்களவருடைய அதிகாரத்தின் சின்னமாக விளங்குகின்றது. அந்தக் கொடியே நடைமுறையில் இலங்கையின் தேசியக் கொடி எனக் கொள்ளப்படுகின்றது. பல்வேறு இனங்கள் வாழும் நாட்டின் தேசியக்கொடியாக, ஒரு இனத்தவரின் கொடியைக் கொண்ட நாடு வேறு எதுவும் உலகிலில்லை. தேசியக்கொடி விஷயத்தில் அரசாங்கத்தின் கொள்கை, தமிழ் பேசும் மக்களிடம் அவர்கள் நடந்துகொள்ளும் முறைக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. அரசாங்கம், அவர்கள் இங்கு வசிப்பதைச் சகித்துக்கொண்டிருக்கின்றது. அவ்வளவுதான்.

அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையானது, இவையெல்லாவற்றிலும் பார்க்கத் தமிழ்பேசும் மக்களுக்குக் கூடிய ஆபத்து விளைவிக்கக்கூடியதாய் இருக்கின்றது. இக்கொள்கையின் ஆரம்பத்தைத்தான் கல்லோயாவில் காண்கின்றோம். கல்லோயாத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாய்ச்சப்படும் பிரதேசம் தமிழ் பேசும் பகுதியாகிய கிழக்கு மாகாணமேயாகும். தமிழ்பேசும் இப்பிரதேசத்திலே, அரசாங்கம், சிங்கள மக்களைக் குடியேற்றத் திட்டமிட்டுள்ளது என்பதற்குச் சான்றுகளுள. இது உண்மையாயிருந்தால், இன்றைய தமிழ்பேசும் பிரதேசத்தைக் குறைப்பதற்கே அரசாங்கம் அநீதியாக முறையில் தன்அதிகாரத்தை உபயோகிக்கின்றதென்பது தெளிவு. தடுப்பாரின்றி இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், சில வருடங்களுக்கிடையில் இந்நாட்டில் தமிழ்ப்பிரதேசம் இல்லாதொழியும்.

*சமஷ்டி ஆட்சி*

நிதி மந்திரியவர்கள் விளக்கியபடி, அரசியல் மொழி விஷயத்திலே தமிழ் பேசும் மாகாணங்களைப் பரிபாலன முறையிற் பிரித்து விடுவதும், மற்றைய ஏழு மாகாணங்களிலும் சிங்களத்தையே அரசாங்க மொழியாகச் செய்வதும்தான் அரசாங்கத்தின் கொள்ளையாகும். இவ்வேழு மாகாணங்களிலே, குறைந்தது இரண்டு மாகாணங்களிலாவது, தமிழர்கள் செறிந்து பெரும்பான்மையோராக வாழும் பிரதேசங்கள் இருக்கின்றன. இவர்களிடம் அரசாங்கம் நீதியாக நடந்து கொள்ள விரும்பினால், அவர்களுடைய பிரதேசத்தில் பரிபாலன விஷயங்களில் அவர்களுடைய மொழியை உபயோகிக்க வேண்டும். ஆனால், இது நடைபெறப்போவதில்லை. இப்படியான செயல்களினால் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களை ஆளுவதற்கு, இன்றைய அரசாங்கம் தர்ம நீதிப்படி அருகதையற்றதாகிவிட்டது. அவர்கள் அப்படி ஆளுவதற்கு அதிகார வலிமையொன்றே உரிமையளிக்கின்றது. இரண்டேயிரண்டு வருடச் சுயாட்சியில், தமது சொந்த நாட்டிலேயே இவ்வளவு கீழ்நிலையடைந்து விட்டார்கள். இன்றைய அரசாங்கம் தங்களுடையதென்று தமிழ்பேசும் மக்கள் கருதவில்லை. இந்தச் சூழ்நிலையில் யாம் செய்யவேண்டுவதென்ன? நடப்பது நடக்கட்டுமென்று வாளாவிருப்பதா? அவ்விதம் இருத்தல் நமக்கோ - நமது நாட்டுக்கோ நன்றன்று. நாம் ஆண்மையுடன் முயன்று இப்பிரச்சினையைத் தீர்க்க ஒருவழி காணுதல் வேண்டும். அவ்வழிதானென்ன? கூடுதலான பிரதிநிதித்துவம் கோரினோம்! அது கிட்டவில்லை. வேறோர் பரிகாரம் தேடியாக வேண்டும். இதற்காக, பல மொழிகளைப் பேசும் மக்கள் வாழுகின்ற பிறநாடுகளைப் பார்ப்போம். இலங்கையில் இருப்பது போலவே, அந்நாடுகளிலும் பல்வேறு மொழிகளைப் பேசும் இனம் ஒவ்வொன்றும் தத்தம் உரிமைகளைக் கவனமாகப் பேணிவந்தன. சிறிய மொழிவாரி இனங்கள் பெரியமொழிவாரி இனங்களால் விழுங்கப்படாமல் தங்களைப் பாதுகாத்துக் கொண்டன. இவ்விதம், மொழிவாரி இனங்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவுகள் பல தடவைகளில் யுத்தத்தில் முடிந்து பெரிய தேசிய இனங்களும் மோதிக்கொள்ள நேரிட்டதுண்டு. இவ்வித சச்சரவுகளை நீக்குவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று, மொழி வாரியாகப் பிரிக்கப்பட்ட பூரண சுதந்திர அரசுகளை அமைப்பது; இதிலும் பார்க்கத் தீவிரம் குறைந்ததுதான் மற்றைய வழி. மொழிவாரிச் சுயாட்சி மாகாணங்களை அமைத்து, அவற்றை இணைக்கும் ஒரு மத்திய அரசாங்கத்தையுடைய சமஷ்டி அரசை ஏற்படுத்துவதே. இவ்விரு முறைகளையும் கையாளுவதற்கு, வெவ்வேறு மொழிபேசும் இனங்கள் பிரிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் வாழுதல் வேண்டும். சமஷ்டி அரசியலானது உலகிற் பல பாகங்களிலும் இவ்வித பிரச்சினைகளை வெற்றிகரமானத் தீர்த்து வைத்திருக்கிறது. பிரெஞ்சு - ஆங்கில மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட கனடா தேசமும், பலவாய, ஜேர்மன், பிரெஞ்சு - இத்தாலிய சுயாட்சி மாகாணங்களைக் கொண்ட சுவிற்சர்லாந்து தேசமும் இதற்கு நல்ல உதாரணங்களாகும். ரஷ்யா தேசத்திலும் சுயாட்சி கொண்ட மொழிவாரி மாகாணங்களே அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ஒரு தனியான பிரதேசத்தில் வாழும் ஒவ்வொரு மொழிபேசும் மக்களும், ஒரு தனித்தேசிய இனத்தினராகக் கருதப்படுகின்றனர். இந்தியாவிலும், இந்திய தேசியக் காங்கிரசும் இந்திய அரசாங்கமும் மொழிவாரி மாகாணங்களை அமைக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு, அப்படியே அமைத்தும் வருகின்றார்கள். தனி ஆந்திர மாகாணமொன்று உருவாகின்றது. கன்னடர் தமக்கொரு மாகாணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றனர். இவையெல்லாம் ஒவ்வொரு மொழிவாரி இனமும் தன்னைத் தானே பாதுகாக்க விரும்பும் இயற்கையுணர்ச்சியின் பயனாக ஏற்பட்டவையேயாகும்.

யாம் கோருவதும் இதுதான். ஒரு சுயாட்சித் தமிழ்மாகாணமும் ஒரு சுயாட்சி சிங்கள மாகாணமும் அமைத்து, இரண்டுக்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள - சமஷ்டி அரசு - இலங்கையில் ஏற்படவேண்டும். தமிழ்பேசும் தேசிய இனம். பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமேயானல் இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாயிருக்கிறது. தமிழ்பேசும் பிரதேசங்களை இலகுவாகப் பிரித்துவிடலாம். இடையிடையே இருமொழிகளைப் பேசும் மக்களும் கலந்துவாழும் பிரதேசங்களும் உண்டு. ஆனால் இதைக் காரணமாகக் கொண்டு, ஒவ்வொரு மொழியைப் பேசும் மக்களும் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களை, சுயாட்சி மாகாணங்களாக வகுப்பதற்குத்தடை ஏற்படக்கூடாது. சமஷ்டி அரசியலால் ஒருவரும்நஷ்டமடையப்போவதில்லை. நிச்சயமாகச் சிங்கள மக்கள் நஷ்டமடையவே மாட்டார்கள். ஏனென்றால், இது பெரும்பான்மையோருடைய பிரதி நிதித்துவத்தைக் குறைத்து, சிறுபான்மையோருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் அளிக்கும் திட்டத்தைப் போன்றதன்று, ஆதலால், சமஷ்டி அரசியல் எல்லோரும் விரும்பவேண்டிய ஓர் இலட்சியமாகும்.

*சுயாட்சி தமிழரசு*

சுயாட்சித் தமிழரசை நிறுவவேண்டுமென்று யாம் கோருவதற்குப் பல காரணங்களுண்டு. முஸ்லிம்கள், தமிழர்களாகிய தமிழ்பேசும் மக்கள் எல்லோரும் இப்பொழுதே, தாங்கள் - தாழ்ந்தவர்கள் - என்ற மனப்பான்மையைப் பெற்று வருகிறார்கள். ஒரு மனிதனின் பூரணமான மனோவிருத்திக்கு, அவன், ''தானிருக்கும் நாடு தன்னுடையதே'' என்றும், ''நாட்டின் அரசாங்கமும் தனதே'' என்றும் கருத வேண்டியது அவசியமாகும். இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களிடையே இன்று இவ்வுணர்ச்சி இல்லாதிருக்கின்றது. அவர்கள், தங்கள் பிரதேசங்களைத் தாங்களே ஆளுவதன்மூலம், அவ்வரசாங்கம் தங்களுடையதே என்று கருதுவதற்கு உரிமை இருக்க வேண்டும். இன்று கூட, தமிழ்ப்பகுதிகளில் வசிக்கும் தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்களப் பகுதிகளில் வசிக்கும் தமிழ்பேசும் மக்களுக்குமிடையே, இவ்வுணர்ச்சியைப் பொறுத்த வரையில் ஒரு வேற்றுமை இருப்பதைக் காணலாம். சிங்களப் பகுதிகளில் வசிக்கும் தமிழ்பேசும் மக்கள், தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் வசிப்பவரிடையே சுதந்திர உணர்ச்சி, இன்னும் நிலவுகிறது. தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு சுதந்திர அரசு வேண்டுமென்ற இந்த இயக்கங்கூட, தமிழ்பேசும் பகுதிகளில் வசிக்கும் மக்களாலும், அப்பகுதிகளுடன் இன்னும் தொடர்புடையவர்களாலுமே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. கிழக்கு மாகாணத் தமிழர்கள் இத்திட்டத்தை ஆதரிக்கும் அளவுக்கு, [illegible]னர். கிழக்கு மாகாணம் முழுவதையும் தமிழ் அரசின் பகுதியாக்க வேண்டுமென்றால், தமிழ் பேசும் அவ்விரு சாகியத்தாரும் ஒன்றுசேர வேண்டும். ஆனால் எங்களுடைய இயக்கம் முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகள் தமிழ்ப்பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா? அல்லது சிங்களம் பேசும் பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு, முஸ்லிம்களுக்கே பூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். தமிழ் மாகாணங்கள் என்று அழைக்கப்படும் பகுதிகள், இந்நாட்டில் மிகவும் குறைவாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. இலங்கையில் பரப்பில் முப்பது விகிதத்தையும், மொத்தச் சனத்தொகையிற் பத்து விகிதத்தையும் இம் மாகாணங்கள் கொண்டிருக்கின்றன. இவை நன்றாக அபிவிருத்தி செய்யப்படக்கூடியன. போதிய நீர்ப்பாசன வசதிகளுடன் - சமதரையுள்ள இப் பிரதேசங்கள், தமிழ்பேசும் மக்களுடைய அரசாங்கத்தினாலன்றிச் சீரிய முறையில் அபிவிருத்தி செய்யப்படமாட்டா. சிங்கள அரசாங்கத்தினால் இப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டால், அங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்படுவார்கள் என்பதும் எதிர்பாக்கப்பட வேண்டியதே. கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், கிழக்கு மாகாணத்தில் என்ன நடைபெற்று வருகின்றதென்பதை, அங்குள்ள மக்கள் இப்பொழுதே உணர்ந்துவிட்டார்கள்.

எங்களுடைய ஒரேயொரு நோக்கம்: ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் அங்கமாக, ஒரு சுதந்திர அரசை நிறுவுவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் விடுதலையைப் பெறுவதேயாகும். செய்யவேண்டிய வேலை எவ்வளவு கஷ்டமானதென்பதை நாம் உணர்ந்தேயிருக்கின்றோம். ஆயினும் அப்பணியைச் செய்து முடிக்க எம்மால் இயலும். அதைச் செய்தே தீரவேண்டும். எமக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பல விஷயங்கள் உள்ளன. நான் முன்னர் குறிப்பிட்டதைப்போல, எமது மக்கள் தம் எதிர்காலத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் 'உறுதியான அரசியற் கொள்கையே' எமக்குச் சாதகமான பெரிய சக்தியாகும். நாம் சிறந்த முறையில் நம்பிக்கைக்குரிய ஊழியர்களுடன் ஒரு கட்சியை அமைப்போமானால், எமது மக்கள் எம்மைக் கட்டாயம் ஆதரிப்பார்கள். சென்ற காலங்களில் தலைவர்களின் உறுதியற்ற நிலையே எமது பலவீனத்துக்குக் காரணமாயிருந்தது. இக் குறையை நிவர்த்திசெய்தாலன்றி, எமது கட்சியும் தோல்வியுறும். ஐரிஷ் தேசியவாதிகளைப் போல, சுதந்திரத் தமிழ் அரசு நிறுவப்படும்வரை, ''பதவி ஏற்கவே மாட்டோம்'' என்று வாக்குறுதி அளிக்கும் உண்மை ஊழியர்களே எமது கட்சியில் இருத்தல் வேண்டும். உள்ளத்தில் ஒரு நோக்கமும் பேச்சில் ஒரு நோக்கமுமாக நாம் இருத்தலாகாது.



## தந்தை செல்வா அன்று சொன்னவை 3

## தான் வாழும் நாடும் அதன் அரசும் தன்னுடையது என்ற உணர்வே மனிதனுக்கு மனோவிருத்தி தரவல்லது

செல்வத்திற் குறைந்த எங்களுக்கு, வலிமை பொருந்திய நண்பர்களும் இல்லை. நேர்மையையும் - மன உறுதியையும் - இலட்சியத் தூய்மையையுமே நாங்கள் ஆயுதங்களாகக் கொள்ளவேண்டும். இந்திய விடுதலை இப்படியான தார்மீக சக்திகளினாலேயே பெறப்பட்டது. எமது விடுதலை வெளிச் சக்திகளில் மாத்திரம் தங்கியிக்கவில்லை.நாம் வெற்றி பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாக வேண்டுமானால், நமது சமூகத்திலிருக்கும் குறைகளைக் களைந்து, அதைத் தூய்மைபெறச் செய்யவேண்டும். தமிழ் மக்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் தாங்கள் மற்றவர்களால் ஒடுப்படுவதாகக் கருதுகின்றனர். நாம் ஒருவருக்குக் கொடுமை செய்தால், தர்மநீதியின்படி எமக்கும் பிறரொருவர் அதையே செய்வார். தமிழ் மக்கள் அரசியற் சுதந்திரம் வேண்டுமேயானால், தம் சமுதாயத்திலே உரிமையற்றவர்களாய் இருக்கும் மக்களுக்கு, அவ்வுரிமைகளை வழங்க வேண்டும்.

மலைநாட்டில் வாழும் தமிழ்தொழிலாளர்களுடைய நிமைமையானது, இங்கு கூறிய தாழ்த்தப்பட்டோருடைய நிலையிலும் பார்க்கக் கேவலமானதாய் இருக்கின்றது. அவர்கள், அரசியலில் தீண்டாதவர்களாகிவிட்டார்கள். அவர்களுக்குப் பிரஜாவுரிமை இல்லாமலிருப்பது மாத்திரமன்றி, தமக்கென ஒரு நாடுமற்ற அகதிகளாகவுமிருக்கின்றார்கள். ஏகைய தமிழ்பேசும் மக்கள் இவர்களுக்கு வந்திருக்கும் இன்னலைத் தங்களுக்கு வந்ததாகவே கருதுதல் வேண்டும். அவர்கள் உதவிக்கு எதிர்பார்ப்பது இந்தியாவையல்ல; சுதந்திரம் விரும்பும் இலங்கைவாழ் மக்களிடமிருந்தே அவ்வுதவி வருதல் வேண்டும். இவ்விரண்டு விஷயங்களும் - நீங்கள் ஆரம்பிக்க வந்திருக்கும் இக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் இடம்பெறுதல் வேண்டும்.

[முற்றும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மாணவருக்கு சைக்கிள் கையளிக்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜன.17

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கீழ்க்குறிப்பிட்ட மாணவர்களை பாடசாலை அதிபருடன் நேரில் சமுகமளித்து சைக்கிளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

மாணவர்களின் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாண வலயம்

எஸ்.தாட்சாயினி-செங்குந்தா இந்துக் கல்லூரி, பி.விஜயநாதன்-கனகரத்தினம் ம.ம.வி, கே.கவிரஞ்சினி-அத்தியார் இந்துக் கல்லூரி, ரி.கலைச்செல்வி- இடைக்காடு ம.வி, எஸ்.றொக்சி-இந்து மகளிர் கல்லூரி, கே.கமலேஸ்வரி-அத்தியார் இந்துக் கல்லூரி, எஸ்.டஜனி-செங்குந்த இந்துக் கல்லூரி, கே.நிஷாந்தன்-இடைக்காடு ம.வி, எம்.சுதர்சன்-கோண்டாவில் பரம்சோதி வித்தி, கே.டினோஜா-உரும்பிராய் சைவத் தமிழ், கே.அஜித்தா-இந்து மகளிர் கல்லூரி,

எஸ்.இராஜேந்திரன்-அத்தியார் இந்துக் கல்லூரி, ரி.தனலக்ஸ்மி-செங்குந்த இந்துக் கல்லூரி, இ.சஜீவன்-செங்குந்த இந்துக் கல்லூரி. ரி.கிருத்தியா- சென்.திரேசா மகளிர் கல்லூரி, இ.கஜநிதி-சென்.திரேசா மகளிர் கல்லூரி, ரி.கமிஸ்கா-சென்.திரேசா மகளிர் கல்லூரி, யு.சிறிகுமார்-சன்மார்க்க வித்தியாலயம், இ.கம்சிகா-அச்செழு சைவப்பிரகாச, பி.சனந்தன்-இடைக்காடு மகாவித்தியாலயம், கே.மாதவன்- கனகரத்தினம் ம.ம.வி, எஸ்.தர்சிகா- கனகரத்தினம் ம.ம.வி,

எல்.ஜக்சிகா-கந்தர்மடம் சைவப்பிரகாச, ரி.கஜீபன்-கந்தர்மடம் சைவப்பிரகாச, எ.ஜெனிகன்-நாவாந்துறை றோ.க, எஸ். யுகிறிஸ்ரா-நாவாந்துறை றோ.க, இ.கனுசிகா-அச்செழு சைவப்பிரகாச, கே.விதுனன்- இடைக்காடு மகாவித்தியாலயம், எஸ்.வளர்மதி-கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், ஆர்.சாளினி- கோண்டாவில் இந்து ம.வி,

வலிகாமம் வலயம்

பி.கஜிதா-யூனியன் கல்லூரி, ரி.கஜகரன்-யூனியன் கல்லூரி, எஸ்.மோகனப்பிரியா-ஸ்கந்தவரோதயக் கல்லூரி, என்.தர்சினி-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, கே.நிவேதா-இணுவில் இந்துக் கல்லூரி, கே.சிவாஜினி-வட்டு இந்துக் கல்லூரி, எஸ்.பிரேமினி- வசாவிளான் ம.ம.வி, கே.தனுஜா-விக்ரோறியாக் கல்லூரி, வி.ஜெனிதா-பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, வி.வினுதா- மாதகல் சென்.ஜோசப் ம.வி, வி.மேகலா- இணுவில் மத்திய கல்லூரி, கே.மோகினி- மகாஜனக் கல்லூரி,

சி.கிருஷ்ணராஜி-மகாஜனக் கல்லூரி, எஸ்.சுஜிந்தா-வசாவிளான் ம.வி, எ.இமானுவேல்-இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி, எல்.ஜனசீலி-இளவாலை திருக்குடும்பம், ரி.மேகலை-விக்ரோறியாக் கல்லூரி, எஸ்.துஷ்யந்தன்-சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், பி.நிதர்சன்-தாவடி இந்து த.க.பா, எஸ்.ரோகிணி-மாதகல் சென்.ஜோசப் ம.வி, கே.தமிழரசி-மானிப்பாய் மகளிர் கல்லூரி, என்.சுஜிதா-நவாலி ம.வி, எஸ்.அமிர்தா-கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி, யு.பிரதீபன்-ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி,

ரி.கபில்ராஜ்-மல்லாகம் ம.வி, ஏ.பிரகாஸ்-அருணோதயாக் கல்லூரி, எ.கொன்ஸ்ரைன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி, எஸ்.சாகித்தியா-இராமநாதன் கல்லூரி, எஸ்.கோசலா- அராலி இந்துக் கல்லூரி, ஆர்.ரவிராமன்-மூளாய் சைவப் பிரகாச வித்தி.

வடமராட்சி வலயம்

கே.கௌசிகா-வடமராட்சி மத்திய கல்லூரி, இ.நிரோஜனா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கே.கோபிகா-வடமராட்சி மத்திய கல்லூரி, கே.தினேஷ்குமார்-விக்னேஸ்வராக் கல்லூரி, எஸ்.சுதன்-விக்னேஸ்வராக் கல்லூரி, எஸ்.கஜமுகன்-விக்னேஸ்வராக் கல்லூரி, என்.நிசாந்தன்-தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி, இ.சறோஜனா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஆர்.வேணுசாந்தன்-புற்றளை ம.வி, வை.கோகிலாதரன்-புற்றளை ம.வி, வி.அரவிந்தன்-புற்றளை ம.வி,

கே.சுதர்சன்-தொண்டைமானாறு வீரகத்தி ம.வி, ஜே.சுலக்ஷன்-கலட்டி றோ.க.த.க, எ.திவ்வியா-அல்வாய் வடக்கு றோ.க.த.க, ஆர்.கந்ததீபன்- புற்றளை ம.வி, எ.ஜனனி-புற்றளை ம.வி, கே.பிரபுராஜ்-புற்றளை ம.வி, வை.அனுராஜ்-புற்றளை ம.வி, எம்.வித்தியா- வல்வை சிவகுரு வித்தி, எ.வினிதா- வடமராட்சி மத்திய கல்லூரி, பி.மதுரந்தன்- வல்வை சிவகுரு வித்தி, எல்.கார்த்தியா- விக்னேஸ்வராக் கல்லூரி, எ.யதுர்சன்-விக்னேஸ்வராக் கல்லூரி, எஸ்.பாமினி- விக்னேஸ்வராக் கல்லூரி, பி.பிருந்திகா-விக்னேஸ்வராக் கல்லூரி, கே.பகீதா-வல்வெட்டி உயர்தர த.க.பா, எஸ்.ஹரிகரன்-கரணவாய் ம.வி, எ.ஜெயரூபன்- கரணவாய் ம.வி, வி.சுகன்ஜா- குடத்தனை அ.த.க.பா, கே.முகந்தினி- குடத்தனை அ.த.க.பா,

தென்மராட்சி வலயம்

பி.அகிலாதேவி-சாவ. இந்துக் கல்லூரி, ஜே.நிரோஜினி-சாவ.இந்துக் கல்லூரி, எல்.சதீசனா-சந்திரபுர ஸ்கந்தவரோதயா, கே.தயாகரன்-மிருசுவில் றோ.க.த.க., எஸ்.கனிஷ்டா-மிருசுவில் றோ.க.த.க., ஜே.நிதர்சினி-மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி, கே.சங்கீதா-மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, ஐ.நீரஜா-கைதடி விக்னேஸ்வரா வித்தி, கே.மோகனதாஸ்-கைதடி விக்னேஸ்வரா வித்தி, பி.சதிஜா-உசன் இராமநாதன் ம.வி, கே.மகாறஞ்சிகா-உசன் இராமநாதன், எஸ்.விஜயரூபா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி, எம்.சிந்துஜா-மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி, எஸ்.ஜெயந்தராசா-வரணி ம.வி,

எம்.கர்கிகா-வரணி ம.வி, என்.சுவேந்திரன்-மட்டுவில் கமலாசினி வித்தி, எ.லோகினி-மட்டுவில் கமலாசினி, எஸ்.ஜெயகரன்-கச்சாய் அ.த.க.பா, கே.தர்ஷா- கச்சாய் அ.த.க.பா, எ.நீல்சன்- றெஜினோ- இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி, கே.கனகதாஸ்- கொடிகாமம் அ.த.க.பா, எஸ்.பத்மலோசினா-அல்லாரை த.க.பா, ஆர்.தனுஷா- அல்லரை த.க.பா, என்.சர்மினி-மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி, ரி.தர்சிகா-வரணி ம.வி, வி.ஜனனி - சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி, ஆர். விநோததேவி-கைதடி நாவற்குழி த.க.பா, எம்.பவித்திரா-மட்டுவில் தெற்கு அ.மி.த.க, ரி.நனோசிகா-விடத்தற்பளை கமலாசினி வித்தி, ரி.கஜந்தினி - மீசாலை வீரசிங்கம் வித்தி.

தீவக வலயம்

வி.கமலேஸ்வரன்-கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி, எஸ்.பிரகலாதன்- வேலணை மத்திய கல்லூரி, எஸ்.அயூரன்- அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி, கே.நிரோஜன்- நெடுந்தீவு ம.வி, ரி.ஜலன்- நெடுந்தீவு ம.வி, வி.கிருஷ்ணதாஸ்-கலாநிதி ஆ.தியாகராஜா ம.வி, எம். கார்த்திகா- கலாநிதி ஆதியாகராஜா ம.வி, எஸ்.ததீஸ்குமார்-கலாநிதி தியாகராஜா ம.வி, கே.கௌதமன்-மண்டைதீவு ம.வி, எ.சிவசங்கர்- நயினாதீவு ம.வி, எஸ்.சுரேஸ்குமார்-யாழ்றரன் கல்லூரி, வை.மைதிலி- புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி,

எஸ்.ஸ்ரீகரன்-நெடுந்தீவு ம.வி, ரி.விக்னா- நெடுந்தீவு ம.வி, எ.வருணன்-நெடுந்தீவு ம.வி, எ.நிஷாந்தினி-நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி, கே.லபிதா-கலாநிதி ஆ.தியாகராஜா ம.வி, வி.தனராஜ்- கலாநிதி ஆ.தியாகராஜா ம.வி, எஸ்.உதயகுமார்-நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தி, ஆர்.விதுஷன்-புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி, சி.தர்மஜெயசீலன்-சென்.அன்ரனீஸ் கல்லூரி, பி.மவி- சென்.அன்ரனீஸ், ரி.கஜலா- சென்.மேரிஸ். றோ.க.மகளிர் வித்தி, எம்.குருபரன்-சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி, எஸ். பகீரதன்-கலாநிதி ஆ.தியாகராஜா ம.வி, யு.அறிவினி- கலாநிதி ஆ.தியாகராஜா ம.வி,ரி.நிரோஜா - கரம்பன் சிறிய புஸ்பம் ம.ம.வி. எஸ்.யசிந்தா-நாரந்தனை றோ.க, ஏ.றெஜினா - சென்.மேரிஸ் றோ.க.மகளிர் வித்தி, வை. விதுர்ஷா யாழ்றரன் கல்லூரி.


## வேலை வாய்ப்பு

அதிக வருமானம் பெறக்கூடிய ஒரு தொழில் வாய்ப்பு

யாழ்.குடா நாட்டில் திறமைவாய்ந்த வியாபாரிகளுக்கு, தொழில் ஒன்றைத் தேட இருப்போருக்கும், பக்கத் தொழிலாக செய்யவிரும்புவோருக்கும், திறமை மிக்க வீட்டுப் பெண்களுக்கும் இலகுவான முறையில் அதிக வருமானம் பெறக்கூடிய தரமான முறையில் ஒரு தொழில் வாய்ப்பு பெற இலவச பயிற்சி வழங்கப்படும். நேர்முகத் தேர்வு எதிர்வரும் (22.01.2010) வெள்ளிக்கிழமை மு.ப 9 மணிக்கு இல 33, அம்மன் கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் இடம்பெறும். ஆர்வம் உள்ளோர் நேரில் வரவும்.

மேலதிக விபரங்களுக்கு- 0777562620

(93935) ச.மகேந்திரன்.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 ★ 07 ★ 1950



இறப்பு 10 ★ 02 ★ 2008

(93933)

### அமரர் அரியரத்தினம் பிரபாகரன்

திதி- சதுர்த்தி 19.01.2010

அன்புத் தெய்வமே நீங்கள் இந்த மண்ணை
விட்டுச் சென்று ஈராண்டு சென்றதப்பா
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகத்தைக் காணமால் அப்பா

விமான நிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


## தேவை

Chinese and Western Resturantக்கு Cook, Stewards Cleaner, Baker மற்றும் Office Girls தேவை.

விபரங்களுக்கு:-
இல.20, ஐந்துலாம்புச் சந்தி,
கொழும்பு - 11.
T.P:- 0772578721.


## தவறிவிட்டது

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த குலேந்திரன் கோகிலன் என்பவரது தேசிய.அ.அட்டை(871581185V) லைசென்ஸ் என்பன 15.01.2010 அன்று யாழ். இந்துக்கல்லூரிக்கும் வைமன் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

உதயன் விருந்தினர் விடுதி, 592/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
T.P. 0778942018


## உடன் தேவை

விவேகானந்தா அக்கடமி யாழ். கிளையில் (பலாலி வீதி இல.3, 2nd Lane) பொறுப்புடன் கடமையாற்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் அல்லது நிர்வாகத் திறமையுள்ளவர் தேவை.

தொடர்பு: 0213216928, 0779927117

## VACANCY - PHARMACIST

Fully qualified Pharmacist registered with the Medical Council in Sri Lanka is required for pharmacy in Jaffna Town. Pharmacy management experience desirable. Competitive and salary benefits offered. Please send your CV to open.

Email Address:- vacancies@gmx.com

TELESONIC | SUNDA | FIVE STAR | RICH STAR | MID SUMMER



| | | |
|---|---|---|
| Table Fans | Mixer Grinder | DVD, TV |
| Stand Fan's | Gas Cookers | Blender's |
| Celling Fan's | [illegible] Ware | LED Torches |
| Wall Fan's | [illegible]ware | Iron's, |
| Exuast Fan's | Rice Cookers | Airports Toasters |
| Orbit Fan's | Oven's | Pressure Lantern |

(And MIMI Brand Vacuum Flasks 8 Models)

.......many more items......

Reasonable & Affordable Price | For wholesale & Retail

IZZY ENTERPRISE (PVT) LTD

155/7 Prince Street
colombo - 11

Tel: 0777 814 116
0777 814 117

FORESIGHT


## அறிவித்தல்

Gods Own Children Foundation அராலி வடக்கு, செட்டியார் மடத்தில் 30.01.10 சனிக்கிழமை தைப்பூசம் அன்று முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்பட இருக்கும் பாலர் பாடசாலை, விசேடபாடசாலை, மற்றும் தொழிற் பயிற்சி நிலையங்களை நடத்துவதற்கான பொதுக்கூட்டம் இன்று (17.01.2010) பிற்பகல் 4 மணிக்கு அராலி வடக்கு, கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் Dr.S.பரமசிவம்பிள்ளை தலைமையில் அராலி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் அராலி வடக்கு சமூக நல ஆர்வலர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**Gods Own Children Foundation**
148, TEMPLE ROAD,
JAFFNA. (சி/5641687)

## மரண அறிவித்தல்

### ஞானம்மா அருளானந்தம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியை ஞானம்மா அருளானந்தம் நேற்று (16.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை அருளானந்தத்தின் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை- அன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை- மரியம்மா தம்பதியினரின் மருமகளும், ராணி, தேவி, ஜெகநாதன்(தம்பி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜோச்பிள்ளை, கிளமன்ற் ஜோச், சரோஜினி ஆகியோரின் அன்பு மாமியும், ஹரி, மனோச், ஷாமினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இங்கா, விஷு, சகானா, நயனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் தொடர்பான விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சூராவத்தை, சுன்னாகம்
தொலைபேசி இலக்கம்
0212240676

(93932) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி ஆறுமுகம் வனிதவதி



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் டச்சுவீதி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வனிதவதி நேற்று (16.01.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
மானிப்பாய். T.P:0775291768

(93950) தகவல்: பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் இசைக்கு வசப்படுவான் இறைவன்

இறைவனை வசப்படுத்தும் கருவி இசையே. ஏழிசையாய், இசைப்பயனாகவே இருக்கும் இறைவனின் உள்ளம் இசையின் இன்ப வெள்ளத்திலே திளைத்து மகிழ்கிறது. உருகி நிற்கிறது. இசையிலே மயங்கிய இறைவன் பக்தனோடு சேர்ந்து பாடவும் ஆடவும் செய்கின்றான். பக்தனுக்காகத் தூது செல்லவும், தொண்டாற்றவும், அவனது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி வைக்கவும் தயாராகின்றான்.

திருவாரூர்த் தெருவிலே சுந்தரருக்காகத் தூது சென்றான் இறைவன். ஞானசம்பந்தருக்காக மயிலைக் கபாலீச்சுவரர் கோயில் குடச்சாம்பலை பூம்பாவை ஆக்கினான். அப்பருக்காகக் கடலில் இட்ட பெரும் கல்லையும் தெப்பமாக்கினான்;

இவ்வாறு கல்லையே தெப்பமாக்கி, இறைவனையே தொண்டனாக்கி, மனிதனைத் தெய்வமாக மாற்றிடும் தெய்விகக் கவிகள் தமிழில் ஏராளம். தமிழ் கவி மயம்தான்.

தமிழே இனிமை. படித்தாலும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும், நினைத்தாலும், இத்தனைக்கும் தித்திக்கும் தேவாமிர்தமாகத் திகழ்பவை தமிழ்க் கவிதைகள்.

திருமுறைகளை இயற்றிய நால்வரும், காரைக்கால் அம்மையும், திருமாளிகைத் தேவர், சேந்தனார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் போன்றவர்களும் ஆழ்வார்களும், தாயுமானவர், குமரகுருபரர், வள்ளலார் போன்றவர்களும் நிறைஞானம் கைவரப்பெற்ற அருளாளர்களே ஆவர்.

இவர்களது பாடல் ஒவ்வொன்றும் இறையுணர்விலே தோய்ந்து பாடப்பெற்றவை. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியவை. இறைவனே புதுப்புதுக் கோலங்களில் அவதாரம் எடுத்து அவர்களின் மூலம் தன்னையே போற்றிப்பாடிக்கொண்டான் என்றுதான் கூற வேண்டும்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''
என்ற திருமூலர் திருவாக்கு இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

த.யுகேந்திரன்,
சிவன் பண்ணை வீதி.




# ஒட்டகப் பறவை- நெருப்புக்கோழி



உலகிலுள்ள பறவைகளில் மிகப்பெரியது நெருப்புக் கோழி. இதன் உயரம் ஏறக்குறைய 2 1/2 மீற்றர். அதனது நிறை ஏறக்குறைய 130 கிலோகிறாம் இருக்கும். இது ஆபிரிக்காக் கண்டத்திலும் ஆசியாக் கண்டத்தில் அரேபியாவிலும் வாழ்கிறது.

நெருப்புக் கோழியின் தலை சிறியது. கழுத்தில் சிறகுகள் இருக்காது. கழுத்தும் கால்களும் சிவப்பாக இருக்கும். இப்பறவைக்கு இறக்கைகள் உண்டு. எனினும் இதனால் பறக்க இயலாது. ஆனால் இது மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ஓடக்கூடியது. வேகமாக ஓடுவதற்கேற்ப இதன் கால்கள் மிக நீளமாகவும் உறுதியாகவும் இருக்கும். தன்னைக் காத்துக் கொள்ள இது பகைவர்களைக் காலால் எட்டி உதைக்கும். இதனிடம் உதைபடும் குதிரையோ மனிதனோ உடனே எழுந்திருக்க முடியாது.


நெருப்புக் கோழியின் இறக்கைகளில் வெண்மையான இறகுகள் இருக்கும். இந்த இறகுகளை தொப்பியில் அணிவது முற்கால வழக்கம். இப்போது இப்பழக்கம் மறைந்துவிட்டது.


இலை, விதை, பழங்கள் முதலியவனவும் சிறு பூச்சிகளுமே நெருப்புக்கோழியின் உணவு. ஆனால் கல், ஆணி, கண்ணாடி, எலும்பு முதலியவற்றையும் இது விழுங்கும். இரைப்பையில் உணவைக் கரைத்துச் செரிக்கவைக்க இவை உதவுகின்றன. தண்ணீர் குடிக்காமல் நெருப்புக்கோழியால் பல நாள்கள் உயிர்வாழ முடியும். அதற்காக இதனை 'ஒட்டகப் பறவை' என்றும் சொல்வர். நெருப்புக் கோழி சுமார் 80 ஆண்டுகள் வரை உயிர்வாழும்.

மணலில் பள்ளம் தோண்டி நெருப்புக் கோழி முட்டையிடும். இதன் முட்டை மிகப்பெரியது. ஒரு முட்டை, 12 கோழி முட்டைகளின் அளவு இருக்கும். முட்டை ஓடு கடினமானது. இந்த ஓடுகளை ஆபிரிக்கப் பழங்குடி மக்கள் சிலர் உண்கலமாகப் பயன்படுத்துகிறார்கள்.

து.ஜெயரூபன்,கந்தரோடை.

# மகாத்மாவில் மேஜரும், மைனரும்!





ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தாறாம் ஆண்டில் தனக்கு அளித்த நோபல் பரிசை மறுத்தவர் பேர்னாட்ஷா. ஆனால் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வதிலும் அவர் யாருக்கும் சளைத்தவர் அல்ல. ஒருமுறை காந்தியடிகளை 'மேஜர் மகாத்மா' என்று கூறி விட்டு சற்று நேரம் மௌனமாக இருந்தார். "மைனர் மகாத்மா?'' யார் என்று பக்கத்திலிருந்தவர்கள் கேட்டபோது "தெரியவில்லையா? உங்கள் எதிரிலேயே இருக்கிறேன்'' என்றாராம் பேர்னாட்ஷா.

எ.மேகலநாத்,
யாழ்ப்பாணம்

# ஆகாயத்தில் பறக்க மனிதனுக்கு ஆசை காட்டிய பறவைகள்

விமானப் பயணம் காரணமாக இன்று தூரம் என்ற பிரச்சினையே வெகுவாகக் குறைந்து விட்டது. சிலமணி நேரங்களில் நினைத்த இடத்துக்குப் போக முடிகின்றது. காற்றைவிடக் கனமான ஒரு இயந்திரத்தை இயக்கி வானில் பறக்க முடியும் என்று காட்டிய பெருமைக்குரியவர்கள் ஆர்வில் ரைட், வில்பர் ரைட் ஆகிய சகோதரர்களாவர்.

சகோதரர்கள் அதிகம் படிக்கவில்லை. ஆயினும் ஆர்வமும் அறிவுத்தாகமும், எதையாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பும் அவர்களிடம் இருந்தது. பிழைப்புக்காககப் பல தொழில்களைச் செய்து தோல்வியடைந்தவர்கள் கடைசியாக சைக்கிள் கடையொன்றை நடத்தி வந்தார்கள். இதில் சிறிது பணம் சேர்த்து பறக்கும் இயந்திரத்தைச் செய்ய வேண்டுமென்பதில் கவனம் செலுத்தினார்கள்.

கிளைடர்களைச் செய்து பறந்து பார்த்த அனுபவம் அவர்களுக்கு நிறையவே இருந்தது. அதை இயக்கக்கூடிய ஓர் இயந்திரத்தைச் செய்வது எப்படி என்பது தான் இப்போது அவர்கள் கவலையாக இருந்தது.

உள்ளெரி என்ஜின்கள் பல அப்போது செய்யப்பட்டு வந்தன. அவை கனமாக இருக்குமாதலால் பயன்படுத்த முடியாது. எனவே சகோதரர்கள் தாங்களே 150 இறாத்தல் நிறை கொண்ட ஒரு சிறிய என்ஜினைச் செய்தனர். சுழல் விசிறி, ஓடு பாதைக்கான தண்டவாளம் போன்றவற்றை அமைத்து 1903 டிசெம்பர் 14ஆம் திகதி சோதனை ஓட்டம் நடத்தினார்கள். முதல் முயற்சி தோல்வி. 17ஆம் திகதி மீண்டும் முயன்று ஒரு நிமிட நேரம் பறந்து சாதனை நிகழ்த்தினர்கள். அவர்கள் பறந்த தூரம் 280 மீற்றர் தான். ஆனால் அதுவே பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிகளுக்கு வித்தாக அமைந்தது. சாதனை நிகழ்ந்த அன்று அதைக் கண்டவர்கள் மூன்றே பேர் தான். இதை அவர்கள் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை..பத்திரிகைகளும் செய்தி வெளியிடவில்லை.

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு பிரான்ஸ் சென்று தமது விமானத்தில் பறந்து காட்டினார்கள். பிரான்ஸ் அக்கறை காட்டவே அவர்கள் தாய் நாடான அமெரிக்காவும் கவனம் செலுத்தியது. பின்னர்தான் அவர்கள் புகழ் பரவத்தொடங்கியது.விளம்பரத்தை விரும்பாத அடக்கமான இருவரும் கடைசி வரை திருமணம் செய்து கொள்ளவே இல்லை.

நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இன்று ஒலியை விட வேகமாகச் பயணிக்கத்தக்க விமானங்கள் கூடப் பாவனைக்கு வந்து விட்டபோதிலும் வானத்தில் பறக்க வேண்டுமென்ற ஆவலை - பறக்க முடியும் என்ற நம்பிக்கையை மனிதனது மனதில் உருவாக்கி வைத்தவை. பறவைகளே என்று கூறுவதில் எள்ளளவும் தவறில்லையல்லவா?



இ.ஜோ. ஜெலினா.

# நாணயக்குற்றி பாவனைக்கு வந்தவிதம்

நாணயக்குற்றி என்பது அதனைப் பாவிக்கும் நாட்டின் அல்லது அரசரின் முத்திரை அல்லது அடையாளம் பொறிக்கப்பட்டு அதன் பெறுமதியும் குறிக்கப்பட்ட ஓர் உலோகத் துண்டாகும்.

கிறிஸ்துவுக்கு முன் ஏழாம் நூற்றாண்டில் விதியன்ஸ் என்றழைக்கப்பட்ட நாட்டினரால் முதன்முதலில் நாணயக் குற்றிகள் உருவாக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. இந்த மக்கள் ஏஸியா மைனரில் வாழ்ந்த செல்வந்தர்களாகவும் பலம் வாய்ந்த மக்களாகவும் இருந்துள்ளனர்.

''இலக்ரம்'' (Electrum) என்றழைக்கப்படும் உலோகத்தினால் இந்த நாணயம் உருவாக்கப்பட்டிருந்தது. இது இயற்கையான தங்கம் 75 வீதமும் 25 வீதம் வெள்ளியையும் கொண்டிருந்தது. ஒரு அவரை விதையைப்போல அமைந்திருந்த நாணயங்கள் ''ஸ்ரேட்டர்ஸ்'' அல்லது 'ஸ்ரேன்டர்ஸ்'' (Staters or Standards) என்றழைக்கப்பட்டன.

இதை அவதானித்த கிரேக்கர்கள் தரமான உலோகத்தினால் ஆன பணத்தின் பெறுமதியை உணர்ந்து தாங்களும் நாணயக் குற்றிகளைத் தயாரிக்க ஆரம்பித்தார்கள்.

தங்கத்தினாலான பொற்காசுகளே பெறுமதிமிக்கவையாக மதிக்கக்கப்பெற்றன. அடுத்தபடியாக வெள்ளியும் அதற்கடுத்ததாக செப்புக் காசுகளும் மதிக்கப்பெற்றன.


கிரேக்க நாயணங்கள் சுமார் 500 வருடங்கள் பாவனையில் இருந்தன. ரோமானியர்கள் இதனைப்பின்பற்றி இந்நடைமுறையைத் தாமும் [illegible] பின்னர் [illegible] கி.பி 500 இல் இருந்து 1400 வரை பாவனையிலிருந்த நாணயங்கள் மெல்லியவையாகவும் கவர்ச்சியற்றவையாகவும் இருந்துள்ளன. ஆனால் 15 ஆம் நூற்றாண்டில் நாணய பாவனை மீண்டும் புத்தூக்கம் பெற்றது. உலோக பாவனை மேலும் அதிகரித்தது. உலோக நாணயங்கள் உற்பத்தியில் கலை நுணுக்கங்கள் புகுத்தப்பட்டன. ரோமன் நாணயங்கள் வருவதற்கு முன்பே பிரிட்டிஷ் நாணயங்கள் புழக்கத்துக்கு வந்துவிட்டன. ஜேர்மன் வீழ்ச்சியை அடுத்து பிரிட்டனில் 70 நாணய உற்பத்தி உலைகள் செயற்பட்டுள்ளன.

எமது நாட்டில் புழக்கத்தில் இருந்த பெறுமதி குறைந்த நாணயங்கள் தற்போது பாவனையில் இல்லை. உதாரணமாக ஒரு சதம், இரண்டு சதம், 5 சதம், 10 சதம், என்பன போன்று 25 மற்றும் 50 சத நாணயக் குற்றிகளும் வழக்கொழிந்து வருகின்றன.

ஜெ.ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகால பாவனைக்கேற்ற தரமான
Marble
மின் விசிறிகள்
1 வருட உத்தரவாதத்துடன்!
Exhaust Fans
Size: 22" / 24" / 26" / 30"
12" / 16" / 18" / 20" / 24"
FALCONE
# 23, Keyzer Street, Colombo-11.
T: 2399640-1 F: 2439409
E: falcone@sltnet.lk W: www.falcone.com



தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் உழவர்களின் உற்ற நண்பனான மாடுகளுக்கு பட்டிப்பொங்கல் வைப்பது தமிழரின் மரபு. இம்முறை பட்டிப்பொங்கல் தினத்தன்று இந்தியாவின் தமிழகத்திலுள்ள உலகிலேயே மிகப்பெரிய தஞ்சைப்பெரிய கோவிலில் உள்ள நந்திக்கு பழங்கள், பலகாரங்கள், காய்கறிகள் என்பற்றைக் கொண்டு விசேட அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. பார்ப்போரை வியக்க வைத்த இந்த அலங்காரத்துக்கு 2 தொன் நிறையிலான பழங்களும், காய்கறிகளும் பயன்படுத்தப்பட்டன.

சவப்பிளை
இனிமேல் இல்லை
ஈக்களின் தொல்லை
ZAGRO
CIC

வெகுவிரைவில் யாழ்குடா நாட்டில்
ORCHARD
ORCHARD TEA
BEST QUALITY
தரமான தேயிலை
மிகவும் சுத்தமான முறையில் பொதி செய்யப்பட்டது இலங்கையில் பிரசித்தி பெற்றது போல் ஓர்ச்சாட் தேயிலையின் சுவை உலகமெங்கும் பெயர் பெற்றது. மற்ற தேயிலைகளை விட சுவையும் நறுமணமும் கொண்ட தேயிலை விற்பன்னர்களால் தெரிவு செய்யப்பட்டது.
Packed By
Ocean Impex Marketing
157/1, Bambaradeniya, Kandy., Sri Lanka.
Tel: 075- 7867862
Marketed By
Ocean Impex Marketing

மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய
உணவு பொருட்களை களஞ்சியப்படுத்தும்
மின் உபகரணங்கள் விற்பனைக்கு
GoodWin ADVT
IZUSU
Tipper Lorry
மற்றும்
Toyota Cooler Lorry
விற்பனைக்கு
Toronto Square, No.14, 37th Lane,
Wellawatta, Colombo 06.
011 236 2899 / 077 326 3512

ஜோதிடமணி பிரம்மஸ்ரீ.
சி. ஜகதீஷ்வரசர்மா அவர்கள்
வழங்கும் நாளாந்த சைவ நற்சிந்தனைகள்
உங்கள் மொபைலில்!
செவிமடுக்க 556 ற்கு டயல் செய்யுங்கள்
Dialog

சனச அபிவிருத்தி வங்கியின்
யாழ்ப்பாணக் கிளை
2010 சனவரி 19 ஆந் திகதி
திறந்து வைக்கப்படவுள்ளது.
அன்றைய தினம் கொடுக்கல்வாங்கல்களுக்காக
அனைவருக்கும் அழைப்பு
SDBL
வந்துவிட்டோம்
யாழ்ப்பாணம்
சனச அபிவிருத்தி வங்கி
தேசத்தின் முன்னோடி
2/2, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 077 6449878

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சாணைக்கூறை

அ.ஸ.அப்துல் ஸமது

தமது மாணவப் பருவத்திலேயே ஈழத்துப் புனை கதைத் துறையில் தன்னை இணைத்துக் கொண்ட அ.ஸ.அப்துல் ஸமது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவிருந்து ஓய்வு பெற்றவர். இவரது முதல் சிறுகதை 1950 ஆம் ஆண்டில் "தினகரன்" இதழில் வெளிவந்தது. 1977 ஆம் ஆண்டில் இவரது "எனக்கு வயது பதின்மூன்று" சிறுகதைத் தொகுதி வெளிவந்தது. பனி மலர், கனவுப் பூக்கள், தர்மங்களாகும் தவறுகள் என்பன இவரது நாவல்களாகும். நூற்றுக்கும் அதிகமான சிறுகதைகளை எழுதியுள்ள இவர் தமிழ் இலக்கியத்துறையிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார். இவரது "சாணைக்கூறை" சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

இருபுறமும் இடியப்பத் தட்டுக் களை அடுக்கினாற் போல, இரு காது கள் நிறைய பத்துச்சோடி அல்லுக் குத்துகளும் அசைந்தாட ஹாஜறா உம்மா சொன்னாள். ''ஒண்டி என்ர வயித்தில பொறந்த புள்ள இப்ப இஞ்சினீா் ஆயிற்றான்; என்ர ஆசை தீர அவனுக்கு ஒரு கலியாணம் முடிச் சிற்றனெண்டா, மத்தநாள் கண்ண முடினாலும் கவல இல்லடி பாத்தும்மா''

''எனக்குத் தெரியாதா ராத்தா, நீ பட்ட பாடும் உன் மகனுக்குக் கட்டின காசும்! எப்படியோ காரியத்தில் வெத்தி எடுத்திற்றாய், இண்டக்கி வைரம் அள்ளிக்குடுத்து எடுக்கிற மாப்பிள்ளை உன் மகன்'' -இப்படி பதில் கூறினாள் பக்கத்துவீட்டுப் பாத்தும்மா.

''ஓமோம், இருபத்தைந்தேக்கா் காணி, இருபத்தையாயிரம் காசு, பெரிய கல்வீடு, இவ்வளவும் இல்லாம இந்த ஹாஜரு கிட்ட யாரும் வந்து அணுக முடியாது; மாப்பிள்ளை கேட்டு ஆட்கள் வந்தா ஊட்டுக்கு முன்னால பத்துப் கார் கெடக்க வேணாமா? இவ்வளவெல்லாம் அந்தஸ்து இல்லாத வங்களோட நமக்கென்ன சம்பந்தம்?''

''நம்முட ஊருல இவ்வளவு குடுத்து ஆர் ராத்தா இந்த மாப்புளய எடுக்கப்போறாங்க? எங்க பார்த்தாலும் உப்புத் தண்ணியில இறால் வெளஞ்சமாதிரி குமர்க் கூட்டம். சுத்தி உடுத்த புடைவையும், பின்னிவிட்ட கொண்டையும் தான் மிச்சம். இவளெல்லாம் இந்த மாப்பிள்ளையைக் கனவும் காணமுடியாது; நீ ஒண்டும் யோசிக்காத, காரில காசும் கட்டிக்கி ஆள்வரும். நான் போக்கிற்றுவாறன் ராத்தா'' என்று கூறிக்கொண்டு பாத்துமா நகர்ந்தாள்.

ஹாஜறாவுக்கு முதல் பிறந்தது நான்கும் பெண்கள். ஐந்தாவதுதான் இந்த எஞ்சியனியர் ஸவாஹிர். மகனின் இந்த உயர் நிலையைக்கண்டு சந்தோஷப்பட அவள் கணவர் முஹாந்திர முஹிதீன் போடி கொடுத்துவைக்கவில்லை. பதினைந்து வருஷங்களின் முன்னே அவரை இஸ்றாயில் அழைத்துக் கொண்டார். கொஞ்சம் நிலபுலன்கள் கிடந்ததால் ஹாஜரு அவற்றையெல்லாம் விற்று மகனை மேல்படிப்புக்கு விட்டாள்.

இந்த ஊரில் பெரிய படிப்புப் படித்துப் பட்டம் பெற்றவன் ஸவாஹிர்தான். கைநிறையச் சம்பளம் வாங்குகிறான். இவன்ர தகுதிக்கேற்ற சீதனமும் சீா்வரிசைகளும் வாங்கிக் கொண்டு தானே விவாகம் ஆகணும் என்பது ஹாஜறாவின் தணியாத தாகம். ஒருநாள் அவளுடைய ஆசையும் நிறைவேறத்தான் செய்தது.

பையனோ எஞ்சினியர்; தங்கை என்றும் குடும்பம் என்றும் அல்லுத்தொல்லை இல்லாதவன் என்றால் பெண் பெற்றவர்கள் சும்மா இருப்பார்களா? பக்கத்து ஊர் நெய்ந்தக்கண்டு வட்டாவிதானை, ஹாஜாவின் நிபந்தனைகளுக்கெல்லாம் கட்டுப்பட்டு, அவளது கனவை நனவாக்க முன்வந்தார்.

மாப்பிள்ளையோ, உம்மாவின் விருப்பங்களை அனுசரித்தும், மனிதகோடிகள் அனைவருக்குமே உள்ள பொருளாசைக்கு வசப்பட்டும், தன் மோதிரவிரலை மாமனாரிடம் நீட்டிவிட்டான். அதாவது தனது சம்மதத்தைத் தெரிவித்து மோதிரத்தை ஏற்றுக்கொண்டான். நிச்சயார்த்தம் ஆயிற்று.

ஹாஜறா உம்மாவுக்குப் பூமி மலர் மெத்தையாயிற்று. எண்ண மெல்லாம் இன்பக் கிளுகிளுப்பு. மாப்பிள்ளை கேட்டு வந்தவர்கள் கொண்டு வந்த துதல், மஸ்கத், வாழைப்பழம், இத்தியாதியை, வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற வித்தியாசம் இன்றி ஊரெல்லாம் பகிர்ந்தாள். ஏன் தெரியுமா? கொழுத்த சீதனத்துடன், மகனுக்கு அயலூரிலிருந்து மாப்பிள்ளை கேட்டுவந்த செய்தி எல்லோருக்கும் தெரிய வேண்டாமா? அதற்காகத்தான். பக்கத்து வீட்டுப் பாத்துமாவுக்கு இப்பவே கலியாண வேலை தொடங்கிற்று. இந்த அலுவல் களிளெல்லாம் ஹாஜறாவுக்கு ஒத்தாசையாக இருப்பவள் அவள் தானே.

மறுநாள் பின்னேரம் எஞ்சினியர் ஸவாஹிர் திண்ணையில் கிடந்த சாய்மணையில் சாய்ந்தபடி பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான். அப்போது பத்து வயதுச் சிறுமியொருத்தி ஓடிவந்து, சிறு பொட்டலம் ஒன்றை அவனிடம் நீட்டினாள். அந்தப் பிள்ளையை அவன் இதற்கு முன் கண்டிருக்கின்றான். ஆனால் யாரென்று தெரியாது. கைநீட்டிப் பொட்டலத்தை வாங்கியபடி, ''நீ யாரும்மா?'' என்று கேட்டான். எந்தப் பதிலுமில்லாமல் சிறுமி சிட்டாய்ப் பறந்துவிட்டாள். ஒன்றும் புரியாதவனாக பொட்டலத்தை அவிழ்த்தான் ஸவாஹிர். அந்தப் பொட்டலத்துள் சிறு குழந்தைக் கான இரு பட்டுச்சட்டைகளும்,

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 133

கடிதமொன்றும் இருந்தன. சட்டை கள் மிகப் பழையவை. பாதுகாத்து வைக்கப்பட்டவை. கடிதத்தை விரித்துப் படித்தான் ஸவாஹிர்.

அன்புள்ள மச்சான்!

உங்கள் மாமி மகள் சுபைதாவை இந்த வேளையில் உங்களுக்கு நினைவிருக்க நியாயம் இல்லை. அந்தப் படுபோக்கிரி தான் இதை எழுதுகின்றேன். உங்களுக்குப் பெண் நிச்சயார்த்தம் ஆயிற்று என்று கேள்விப்பட்டேன். என் வாழ்த்துக்கள்!

இந்த மங்களகரமான நேரத்தில் உங்களுடைய நிம்மதி யையும் மகிழ்ச்சியையும் கலைக்க நான் வரவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

---

# தருமாற்றம்

இலக்கியக் காட்சி 24

'கோபம் வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே' என்பது நம்மவர் முதுமொழி. கோபத்தில் சீற்றம் கொண்டு தன்நிலை மறந்த செய்கையால் சரித்திரத்தில் பெரும்பழி சுமந்தவர் பலர் உளர். ஆனால் அத்தகைய கோபத்தை அடக்கி அந்தமில் புகழ் பெற்றவர்களும் இருக்கிறார்கள். கம்பராமாயணம் கைகேயி சூழ்வினைப் படலத்தின் துணை கொண்டு இத்தகு காட்சி ஒன்றைத் தரிசிப்போம்.

நாகம் என்னும் கொடியவளாகக் கைகேயி உருப்பெற்றுவிட்டாள். பாம்பு தனக்கு பால் வைத்தவரைக்கூடத் தீண்டும் தன்மை படைத்தது. கைகேயியும் அத்தகையவளே. தன்னை ஓம்பிய கணவனின் உயிர்கெடக் காரணமாகிறாள்.

இத்தீயவள் கேட்ட வரங்களால் மனம் பதைத்துப்போன தசரதன் பாம்பு தீண்டியமையால் வேகம் தணிந்துபோன யானையைப்போல் வீழ்ந்தான். ஊது உலையில் உள்ள நெருப்புப் போல நெடிதாகப் பெருமூச்சுவிட்டான். நாக்கு வரண்டது; உயிர் கெடத் தொடங்கியது; மனம் தளர்ந்தது; கண்கள் இரத்தம் சிந்தின; அரிய ஐம்புலன்களும் செய்யத்தக்க காரியம் எது? என எண்ணிச் சஞ்சலமடைந்தன. கோபம் உச்ச நிலைக்குப் போய்விட்டது.

இயல்பிலே நல்லவளாகிய இவளா பரதன் நாடாள வேண்டும் என்றும் இராமன் காடேக வேண்டும் என்றும் வரம் கேட்கிறாள். சீச்சீ... யாராவது துர்ப்போதனைகள் செய்திருப்பார்களோ? தசரதன் மனதில் ஐயம் எழுகின்றது. ''நீ திகைத்தது உண்டோ?'' அல்லது பொய்மையாளர்கள் உன் மனதைக் கெடுத்ததுண்டோ?'' நேரடியாகவே கேட்டு விடுகிறான்.

''நான் திகைக்கவும் இல்லை. எனக்கு கொடிய வர்கள் வந்து துர்ப்போதனை செய்யவும் இல்லை. முன்னே நீர் தந்த இரண்டு வரங்களையும் இப்பொழுது கொடுத்தால் பெற்றுக் கொள்வேன். அல்லாவிடின் உமக்குப் பழிச்சொல் ஏற்படும் படியாக இறப் பேன்.'' கைகேயியிடமிருந்து உறுதியான தொனியில் பதில் கிடைக்கிறது.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பான இப்பதிலைக் கேட்ட தசரதனுக்கு கோபம் தலைக்கேறியது. இந்த ஒரு பெண் செய்த பழிக்காக உலகிலுள்ள பெண்குலத்தையே அழித்துவிடலாமா? என எண்ணுகிறான்.

நாரியர் இல்லை இஞ்ஞாலம் எங்கும் என்ன
கூரிய வாள் கொடு கொன்று நீக்கியானும்
பூரியர் எண்ணிடை வீழ்வென் என்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான்

*(கைகேயி சூழ்வினைப்படலம்- 26)*

தசரதனின் நிலையைப் பதிவு செய்ய விழைந்த கம்பன் '' இப்பூலோகம் முழுவதிலும் பெண்கள் இல்லை என்று சொல்லும்படி கொலை செய்து தள்ளிவிட்டு நான் கீழ் மக்களில் ஒருவனாகச் சேர்வேன்'' என்று தசரதன் கோபம் கொள்வதாகக் காட்டுகின்றான். இங்கு அவனிடம் உள்ள உயர் பண்பு ஒன்று வெளிப்படுகிறது. சால்பு என்னும் அருங்குணம் தான் மேற்கொள்ளும் செயல் தன்னை கீழ்மக்களின் இடத்தில் சேர்த்துவிடும் என்பதை உணர்த்துகின்றது.

இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தசரதன் தடுமாறுகின்றான். வரத்தைக் கொடுத்தால் இராமனை இழக்க நேரிடும். வரத்தை எடுத்தால் கைகேயியை இழக்க நேரிடும். பெரும் பழிச்சொல்லும் ஏற்படும். எனவே வரம் கொடுப்பதும் வரத்தை மீளப் பெறுவதும் தசரதனது நிலையில் தீமையையே ஏற்படுத்துமென்பதால் தன் மனைவியின் கால்களில் வீழ்ந்து இரப்பதே வழி என முடிவெடுக்கிறான்.

ஒறுப்பினும் அந்தரம் உண்மை ஒன்றும் ஓவா
மறுப்பினும் அந்தரம் என்று வாய்மை மன்னன்
பொறுப்பினும் இந்நிலை போகிலானை வாளால்
இறுப்பினும் ஆவது இரப்பது என்று எழுந்தான்

*(கைகேயி சூழ்வினைப் படலம் - 28)*

நிலைபெற்ற சத்தியத்தை அழிக்கும் இவளைத் தண்டித்தாலும் தீமை. இவள் கேட்கும் வண்ணம் வரத்தைக் கொடுத்தாலும் தீமை. இரண்டு வழிகளிலும் தீமையே பெறப்படுமாதலால் வாளால் அப் பெண்ணைக் கொல்வதைவிட இரந்து கேட்பதே மேலானது என முடிவு செய்கிறான்.

பெரிய ஒரு சக்கரவர்த்தி - போயும் போயும் ஒரு பெண்ணின் காலில் வீழ்வதா? என்று நாம் எண்ணலாம். தசரதனிடம் இருந்த சால்பு என்ற அருங்குணத்தின் மேம்பட்ட இயல்பே அவனது பொறுமைக்குக் காவலாக அமைந்தது. உலகிலுள்ள பெண்கள் யாவரையும் கொன்று விடுவோம் என மதி மயக்கமுற்றான். ஆயினும் உடனடியாகவே தன்னைச் சுதாகரித்துக் கொள்கிறான். இதனால் அவன் நீண்ட புகழுக்குரியவனாகிறான்.

*சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்*
*என்னும்ஏமப் புணையைச் சுடும்*

என்ற வள்ளுவர் வாக்கும் இங்கு சிந்திக்கத் தக்கது. சினம் என்பதைச் சேர்ந்தாரைக் கொல்லும் நெருப்பாக வள்ளுவர் உருவகிக்கின்றார்.

கோபமானது நமது புத்தியைக் கெடுக்கும் தன்மை படைத்தது. உலகில் பெரும்பாலான குற்றச் செயல்கள் மதிகெட்ட நிலையிலேயே நிகழ்கின்றன.

அன்று தசரதன் தனது நிலையை ஒருகணம் சிந்தித்துப் பார்த்ததனால் பெரும் பழிச் சொற்களிலிருந்து தப்பி னான். படிப்போரின் ஈர நெஞ்சில் பசுமையாகப் பதிந்து விடுகிறான். கோபத்திலும் தன்னிலையை உணரக் கூடிய தன்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். பெரும் அழிவு களைத் தவிர்த்துக்கொள்ள இவ் அருங்குணம் துணையாக அமையும்.



ச.லலீசன்

---

## அகதி

தாங்க முடியாத
வேதனைகள்
தரணியிலே பிறந்தது
ஏனோ என்று
தன்னம்பிக்கை மட்டும்
மனதில் தாண்டவமாடுது
அன்று தரம் ஒன்று படிக்கும்போது
நான் அகதியானேன்
இன்று மகள் தரம் ஒன்று படிக்கிறாள்
அகதி என்ற அந்தஸ்துடன்
தொடர்கின்ற இடப் பெயர்வும்
தொடரமுடியாத பள்ளி வாழ்வும்
எம் வாழ்க்கையின் ஏட்டில்
எழுதப்பட்ட அத்தியாயம்.

கே.தேவன்,
P.R.I. நலன்புரி நிலையம்,
கைதடி.

## தீர்வு தேறுமா? காலம் மாறுமா?

தீர்வொன்று தேவையென்று தேடுகிறோம் தொடராக!
தேர்வுக்கும் தோற்றித் தோற்றித் தோற்றோமே!
நேர்மையுடன் நாடியெம் நிலைமையினை நிமிர்த்திடவே
யார்வருவார்? யாவருமே ஜாலமதன் ஜால்ராவே!

ஞாலம் தானுஞ் சுழன்று ஞாயிற்றுத் தலைவனையுஞ் சுற்றிவரக்
காலச் சுழற்சியது கச்சிதமாய் நடக்கிறது! ஆனால் எந்தக்
காலம் எங்களது வாழ்வினுக்கு ஏற்றதாம் தீர்வதனை
ஞாலம் தந்துவிடும்? நிறைவான மனத்தோடு நாம் வாழ!

– நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூர நோக்கு!
# துணிவான போக்கு!
# நிலையான நிம்மதி!



அவர் சொன்னதைச் செய்பவர். செய்யக்கூடியதையே சொல்பவர். பலம் மிக்க அரசியல் பாரம்பரியத்தில் வந்தவர். நாட்டின் பல பொறுப்புக்களையும் வகித்தவர். நெருக்கடி நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு திடசங்கற்பம் கொண்டவர். போரால் சிதைந்த பிரதேசங்கள் சீரமைய செயற்படுபவர். நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்ற பின்பு அனைத்து இனங்களின் பிதாவாகத் தன்னை எண்ணிச் செயற்படுபவர். வடக்கும் கிழக்கும் தெற்கும் மலையகமும் அவர் பார்வையில் அவர் பிரதேசங்கள்தான். அவரிடம் இலங்கைத் திருநாட்டை மீண்டுமொருமுறை ஒப்படைப்பதே நிலையான நிம்மதிக்கு வழிவகுக்கும். இதுவே எமது தெரிவாகவும் கடமையாகவும் அமையும்.




(சி-5637785)

## அமைதி
## அபிவிருத்தி
## சமத்துவம்
## சுதந்திரம்

## எங்கள் தெரிவு


X

## மஹிந்த ராஜபக்ஷ

## தமிழர்தம் வாழ்வில் வீசட்டும் வசந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 96



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. சிறப்பாக.
4. வேகம்.
6. சிரசு.
7. உடையையும் குறிக்கும். உயிரினத்தையும் குறிக்கும்.
8. மூப்படைதலைக் குறிக்கும் சொல்.
11. பாதம்; அரைவாசியின் அரைவாசியும் கூட.
12. மறு/ மாசு ஆகியவற்றின் அடையாளம்.
13. சிஷ்யன் தேடுவது இவரை.
15. துன்பம் அன்று.
17. தாண்டு.
18. அஃது/ ஆறாவது ஒருமை உருபு.
19. சிறுவர் அஞ்சுவது இதற்கு.
21. இடம்பெயர்ந்து அசைய.
22. பாய்.
23. ஓவியம்.

### மேலிருந்து கீழ்

1. முக்கிய/ மதிப்புக்குரிய நபர்.
2. பெண்கள்.
3. மூத்ததை (குழந்தையை) இப்படிக் கூறுவர்.
4. ஆஸ்திரேலியாவுக்கே உரிய சிறப்பு விலங்கு.
5. பயம், பீதி தரும் நிலை.
9. வரி.
10. செதுக்கப்பட்டது.
14. குத்துவது இப்படி.
15. வலம் அல்ல.
16. நான்கு பக்கங்களும் சமனாகக் கொண்ட வடிவம்.
17. மனதில் வஞ்சகம்.
18. எழுத்தின் முதன்மையாக வள்ளுவர் குறிப்பிடுவது.
19. தந்தை
20. சாப்பிடு.
21. ஆறு.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. இவ்வாரம் தொடக்கம்வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர்விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 96**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 27.01.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.96 இல் வெற்றி பெறுவோர் களது விவரம் 31.01.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 94 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) பாதுகாப்பு (5) ஆயா (7) தயிர் (8)கபடம் (10) கல் (11) வாழ்தல் (12) பாரதம் (14) அண்ணல் (15) பரு (16) வாழிடம் (17) நலம் (18) பாதி (19) கவர்ச்சி (20) ஆடி.

**மேலிருந்து கீழ்**
(1)பாதகம் (2) துயில் (3)கார் (4) புகழ்தல் (5) ஆடல் (6) யாம் (9) பதம் (11) வாரணம் (12) பாண்டவர் (13) வரும்படி (14) அழி (15) பல (16) வாழ்க (17) நதி (18) பாசி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 94 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **வி.பிரசன்னா,** கோள்வை வளவு, தும்பளை, பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு** — **கோ.சங்கீதா,** அல்லின் வீதி, காரைநகர்.

**3 ஆம் பரிசு** — **பா.ஸ்வரசாகித்யா,** 271/7, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு** — **சு.சுதாகரன்,** தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.

**5 ஆம் பரிசு** — **திருமதி சி.சோதிமலர்,** கரணவாய், கரவெட்டி.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **திருமதி த.சாரதாதேவி,** அரசடி வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்.

(2) **ஆ.தர்சிதா,** இல.28, கைலாசபிள்ளையார் கோயில் வீதி, நல்லூர்.

(3) **செல்வி ச.பவந்திவி,** 'அம்பிகை வாசா', கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# சாணைக்கூறை

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எனினும் இந்தக் கல்யாண விஷய மாக எனது உம்மாவுக்கும், உங்களது உம்மாவுக்கும் ஒரு ஆகிறத்துக்கு கடன் உண்டு. இந்தக் கடனை நாமிருவரும் ஒத்து இம்மையிலேயே அழித்துவிடுவது சௌஜன்யமானது என்று கருதி இதை எழுதுகிறேன்.

ஆமாம் நான் தன்னறிவு பெற்றுத் தாய்முகத்தைப் பார்க்குமுன்னமேயே அவள் இவ்வுலகைத் துறந்துவிட்டாள். நான் இம்மண்ணுலகில் மனிதப்பிறவி எடுத்த ஏழாம் நாள் உங்கள் தாயார் என் தாயாரிடம் ஒரு சங்கற்பம் செய்து கொண்டார். அதன் சான்றுதான் இத்துடன் வரும் சட்டைகள். ஆம் நாமிருவரும் விவாகப் பக்குவத்தை அடைந்ததும் என்னைத் தன் மருமகளாக ஏற்பதாகச் சங்கப்பித்து இந்தச் சட்டைகளை உங்கள் சார்பாக சாணைக் கூறையாக வழங்கினார் உங்கள் அன்னை. சாணைக் கூறையாக வழங்கியவற்றை, விவாகக் கூறை வரும்வரை பாதுகாத்து வைக்க வேண்டுமாம் என்று என் மூத்தம்மா, என் உம்மா மவுத்தான பின்பும் இதனைக் கருத்தோடு பௌத்திரப்படுத்தினாள். அனுபவ அறிவும், சம்பிரதாயங்களில் உள்ள நம்பிக்கையும் எவ்வளவு அர்த்த புஷ்டியானவை!

நீலம், பச்சை வர்ணத்தில் அமைந்த இவ்விரண்டு சட்டைகளையும் பாருங்கள், பதினெட்டு ஆண்டுகள் பூரண மாகக் கழிந்தும் அதன் அழகும் ஜொலிப் பும் சற்றேனும் மங்கி விடவில்லையே. ஏனெனில் இது அசல் சீனாப்பட்டு. பூச்சி சில்க் சீலை யொன்றின் வண்ணமும் அழகும் இத்தனை ஆண்டாகியும் இன் னும் மாறவில்லை. மனிதனுடைய சொற் களும், நிலைமைகளும் எவ்வளவு மாறி விட்டன பாருங்கள்.

சாணைக்கூறை என்ற இச் சம்பிர தாயம்; நம்பிக்கை நிறைந்தது. இதில் வாக்குறுதி மீறப்பட்டால் மறுமையில், இறைவன் முன் வழக்காடல் நிகழும் என்பார்கள். இது உண்மையாயின் மறுமையில் என் உம்மா உங்கள் உம்மாவுடன் வழக்காட நாமிருவரும் சாட்சி களாக இருப்போமல்லவா? உங்கள் தாய் வாக்குறுதி மீறினார். நீங்கள் அதற்கு அனுசரணையாக இருந்தீர்கள் என்ற இவ் வழக்கு எவ்வளவு சுவாரஸ்யமானது.

சாணைக்கூறை போட்டவன் தான் சந்தூக்குக் கூறையும் போடவேண்டும் என்பது மற்றோர் ஐதிகம். அதாவது ஒரு பெண் இறந்ததும் அவளுடைய பாடையை மூட, அவளது விவாகக் கூறையைப் பயன்படுத்துவது நம்வழக்கம். ஒரு பெண்ணுக்கு சாணைக்கூறை போட்டிருந்தவர் தானே சந்தூக்குக் கூறையும் வாங்கி இருப்பார்.

மச்சான்! சாணைக்கூறையை நீங்கள் போட விவாகக் கூறையை இன்னொரு வர் கொண்டுவர, சந்தூக்குக் கூறையை மற்றொருவர் கொண்டு வரும்படியான துரதிஷ்டம் என் வாழ்க்கையில் நிகழ்ந்து விட்டால், இந்த முதற் கூறையோடு என் வாழ்வுக்கதையும், முற்றுப் பெற்றுவிடுவது எவ்வளவு சௌகரியம். பதினெட்டு வருடங்கள் என் மனதில், நாற்பது திரியிட்ட குத்துவிளக்காகப் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒருவரை ஒருநாள் திடீரென இழப்பது இதயம் தாங்கமுடியாத ஒரு சோதனைதான். மறப்பதும், மன்னிப் பதும் மனித மனங்களின் இயல்பான தொழிலல்ல. காரணங்களை வருவித்து அவற்றை நாம் செயற்கையாகச் செய் கிறோம் அவ்வளவு தான்.

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் படுவதாக எண்ணுவீர்கள். கூழுக்கு வழியில்லாத ஒருவன் பாற்சோறு தின்னக் கனவு காண்பது எவ்வாறு? நீங்கள் இந்தப் பெரிய படிப்புப்படித்திராவிட்டால், அல்லது நான் இந்த ஏழ்மை நிலைமை எய்தி இராவிட்டால், உங்களுடைய விவாகக் கூறை எனக்குரியதுதானே. அதுவே எனது சந்தூக்கு மூடவும் ஆகி இருக்குமல்லவா?

எனது முற்றத்தில் மலர்ந்தகொடி மல்லிகைப் பூக்கள், மற்றொருத்தியின் கொண்டையில் சரமாகச் சூடி இருப்பதைப் பார்ப்பது துயரமே. வறுமை காரணமாக, அம்மலரை நான் சூடும் திராணியற்று, அதனை மற்றொருத்திக்கு விற்றுவிட்ட எனக்கு, பொறாமை ஏன்? ஆசை ஏன்?

இதோ சாணைக்கூறையான இரு சட்டைகளையும் என் இதயத்தைப் பெயர்த்தளிப்பது போல, உரியவரிடம் ஒப்படைத்துவிட்டேன். இதனை நானே விரும்பிச் செய்தபடியால் மறுமையில் என் தாயும் உங்கள் தாயும் வழக்காட நியாயமில்லை அல்லவா?

இனி உள்ளது, உங்கள் உம்மா என் உம்மாவிடம் கொடுத்த வாக்குறுதிதான். நெல்லைக்குத்தி அரிசியைக் கண்டால் உமியைப் புடைத்துத் தள்ளி விடுவது தானே. உங்கள் உம்மா உங்களை அரிசி யாகக் கண்டபோது, நான் உமியாகி விட்டேன். உமி இப்பொழுது குப்பை யில் கிடக்கிறது. நான் உமியான காரணத் தினால் உங்கள் உம்மா [illegible] உமியாயிற்றா? [illegible] விதானையிடம் கொடுத்த வாக்குறுதி மட்டும் வைரமானதா? இந் நிலையில் உங்கள் பெற்ற தாயை எவ்வாறு விடுவிக்கப் போகிறீர்கள்?

என் உம்மா மவுத்தானதும், என் வாப்பா வேறு விவாகம் செய்ய விரும்பாமல் எனக்காகத் தன் வாழ்வைப் பரித்தியாகம் செய்தார். என்னை எஸ்.எஸ்.ஸி வரை படிப்பித்தார். எனக்காக ஒரு அழகிய வீட்டைக் கட்டினார். நான் கண்கலங்காமல் ஆதரித்தார். அவரால் முடிந்தது இவ்வளவே. இதற்காக அவர் செய்த தியாகங்கள் அதிகம். இந்த அந்தஸ்தில் ஒரு எஞ்சினியரை நான் எப்படிக் கனவு காணமுடியும்...? அந்தக் கூட்டுக் கலவியிலே கவிதை கொண்டுவர வேண்டும்... என்ற பாரதி பாடலைப் போல, நான் கவிதை தரு வேன். காசுதர என்னால் முடியாது! காணி தர என்னால் இயலாது மச்சான்! இந்தப் பிச்சைக்காரிக்கு இனி ஆண் துணையே தேவையில்லை. ஏனெனில் உங்களை மனதில் வைத்துக் கொண்டு மற்றொருவரை மஞ்சத்தில் வைத்துக் கொஞ்சி விளையாடும் விந்தை எனக்குத் தெரி யாது! ஆதலால் உங்களுடைய தாயின் இரண்டாவது வார்த்தையை நிறைவேற்றி இன்பமாக வாழுங்கள்!

அன்பின் சுபைதா.

இரவு கலியாண முற்றாய்ப்புக்காக, பெண் வீட்டிலிருந்து வந்த இனிப்பு வகைகளை ஒரு தட்டில் வைத்து, எடுத்துக் கொண்டு "இதத் திண்டுபார் மகன்!" என்று கூறியபடி ஸவாஹிரிடம் வந்த ஹாஜறா, மகனின் நிலையைக் கண்டாள். கண்கள் கலங்கியபடி எதையோ இழந்து விட்டவனைப்போல உட்கார்ந்திருந்தான் ஸவாஹிர். முன்னால் இருந்த ரீபோவில் இரு சட்டைகளும் கடிதமும் கிடந்தன.

"என்ன மகன் இது! பேயறஞ்சமாதிரி இருக்காய்!" என்று கேட்டபடி சட்டைகளைக் கையில் எடுத்தாள் ஹாஜறா. அவளுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. சொல்லி வைத்தாற்போல பாத்தும்மாவும் வந்து சேர்ந்தாள்.

"அடியே பாத்துமா இஞ்சபாத்தாயா, புதினத்த, இந்த முகாந்திரம் போடியிர பெண்டாட்டி இதுக்கெல்லாம் அசைகிற வளா?" என்று பிரலாபிக்கத் தொடங் கினாள். விஷயம் பாத்து மாவுக்கும் தெரிந்ததுதான். எனவே அவளுக்கும் எல்லாம் விளங்கிவிட்டது. "என்ன தம்பி இது? கழிஞ்சி போன கண்ணறாவிய கழுத் தில் சுத்திக்கி அழுகிறதா? உட்டு வீசிற்று மத்த அலுவலப் பாருங்க!" என்று அவளும் பதிலுக்குப் பாடினாள். ஸவாஹிர் பொங்கிவரும் வேதனையைக் [illegible] பாத்திமாவைப் [illegible]

"என்ன ராத்தா! கதக்கிறயள். பதினெட்டு வருஷமா ஒரு பெண் வச்சிக்கிருந்த நம்பிக்கையை நீங்கஎெல்லாம் சேர்ந்து நாசம் பண்ணிற்றீங்க! நானும் அதுக்கு உடன்பட்டவனாயிற்றன். இதுபோக என் மாமியிடம் என் உம்மா ஒரு சங்கற்ப வாக்குறுதி அளித்திருக்கா, அதை யாவது நான் காப்பாற்ற வேண்டாமா?" "என்ன தம்பி சங்கற்பம்! எல்லாம் சந்தர்ப்பம் தானே! நீ கூட நேத்திராவு உன்ர மாமனாரிடம் விரலை நீட்டி மோதிரத்தை வாங்கிக்கொண்டாய். ஒரு சபையில நாலு பெரியவங்க முன்னால, நீ செய்த சங்கற்பத்தை இப்ப மாத்தப் போறாயா? நீ ஒரு படிச்சபுள்ள- நான் ஒரு மடச்சி பேசுறன். யோசிச்சுப் பாரு..." பாத்திமா இப்படிக்கூறினாள்.

'ராத்தா! நான் படிச்சவன், பெரிய சம்பளம் எடுக்கிறவன். அதனால் தானே என் உம்மா, மாமியிடம் கொடுத்த வாக்குறுதியை அழிக்கிறேன். என் மாமி மகளின் நம்பிக்கையை மோசம் செய்கிறேன். நான் கற்றதன் விளக்கம் இதுதானா? சுபைதா போன்ற பணம் மட்டும் இல்லாத ஒரு பெண், ஒரு எஞ்சினியரைக் கணவனாகப் பெறும் தகுதி அற்றவள் என்று என் தாய் முடிவு செய்த காரணம் என்ன? அவதான் இதே சுபைதாவுக்குச் சங்கற்பம் செய்து சாணைக்கூறை போட்டா! இந்தச் சம்பிரதாயத்தையும் அது வளர்த்த நம்பிக்கையையும் மீற நான் தயார் இல்லை ராத்தா!"

"ஏன் தம்பி! நீ நேத்திரவு கையை நீட்டி மோதிரத்தை வாங்கிக் கொண்டாயே அதுவும் சம்பிரதாயந்தானே! இதனால இன்னொரு பெண்ணின் மனதில் ஒரு ஆசைக் கனலை வளர்த்துவிட்டு தப்பப் பார்க்கிறாய்?"


"என்ர அல்லாவே! என்ர புள்ளக்கி என்னமோ தூள் போட்டுட்டாளுகள். மகுறம் நடந்து போச்ச. யா முஹ்ஹதீன் ஆண்டவரே! கப்பலைக் கரைசேர்த்த நீங்கள் தான் என்ர புள்ளயயும் காப்பத்தவேணும்!" இவ்வாறு கூறிப்பிரலாபித்தாள் ஹாஜறா.

ஸவாஹிறின் தலை சுழன்றது. உலகம் முழுவதுமே அவனை நோக்கிக் கேள்வி கேட்பது போன்றிருந்தது. கல், மண், கட்டடக் கலையில் நிபுணத்துவம் பெற்ற அவன் பொன், மண், பெண் எனும் மூன்றையும் அறியாதவனாகவே நின்றான். ஒரு நிமிஷத்தில் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். கையில் கிடந்த மோதிரத்தைக் கழற்றி உம்மாவின் கையில் கொடுத்தான். அவன் கால்கள் நடந்தன. ஆம்! சுபைதாவின் வீட்டை நோக்கி அவன் கால்கள் நடந்தன. ✱


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
# மணிமண்டப சிறப்பு மலர்
## 17.01.2010



### அகில இலங்கை இந்துமாமன்றத்தின் கௌரவ செயலாளர் கந்தையா நீலகண்டன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



வடமாநிலத்தின் யாழ்.மாவட்டத்தில் வளம்மிக்க கிராமமாகத் திகழ்வது ஊரெழு. இங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு வீரகத்தி விநாயகப் பெருமான் இந்துப் பெருமக்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

தும்பிக்கை நாயகன்மீது நம்பிக்கை வைத்து வழிபாடு செய்துவரும் இந்து மக்களின் நலன் கருதி மணி மண்டபமொன்று அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயச் சூழலில் தெற்கு வீதியிலே எழில்மிகு தோற்றத்துடன் அமையப் பெற்றுள்ள மணி மண்டபம் இந்துப் பெருமக்களது மங்கள வைபவங்கள் மற்றும் கலை, கலாசார, சமய நிகழ்ச்சிகளைச் சிறப்பாகவும், வசதியாகவும் நடத்துவதற்கு மிகவும் பேருதவியாக அமைந்திருப்பதைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

இந்த எழில்மிகு மணிமண்டபம் திறந்து வைக்கப்படுவதையொட்டி அகில இலங்கை இந்துமாமன்றத்தின் சார்பாக, இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மணி மண்டபத்தின் சேவைகள் சிறப்பாகத் தொடரவேண்டும்' இதன் ஊடாக இந்துப் பெருமக் கள் அனைவரும் சகல நலன்களையும் பெறவேண்டுமென அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருள் வேண்டிப பிரார்த்திக்கிறோம்.

### நல்லை குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய அருளாசிச் செய்தி



விநாயக அடியார்களுக்கு

ஊரெழு வீரகத்தி விநாயகருடைய திருவருள் மேலீட்டால் பிள்ளையாருக்கென அமைக்கப்பட்ட வீரகத்தி விநாயகர் மணிமண்டபம் இன்று திறப்பு விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இங்கு அமையப்பெற்றிருக்கும் இம்மண்டபம் ஆலயத்திற்கும், ஊருக்கும் பெருமையைத் தருவதாகும். நீண்ட காலமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆலயங்களிலும், பொது இடங்களிலும் தத்துவம்சங்களையும், கலையம்சம் பொருந்தியதாகவும் அமைத்துத் தந்துகொண்டிருக்கும் கட்டடக் கலைஞர் திரு. சண்முகநாதன் இவர்களுடைய குலதெய்வமாகிய விநாயகப் பெருமானுக்குத் தனது எண்ணத்தில் எழுந்த வடிவத்தை நன்கு அழகுற அமைத்து வீரகத்தி விநாயகருக்கு சமர்ப்பணம் செய்தது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. இம்மண்டபம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமையப்பெற்றமை அனைவருக்கும் பெருமை சேர்க்கிறது. இம் மண்டபத்தை நல்லமுறையில் பயன்படுத்தி, அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வோமாக. திரு. சண்முகநாதன் குடும்பத்தினரையும், உதவி வழங்கிய அன்புள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

### ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களின் ஆசியுரை



பழம்பெரும் திருவூர் ஊரெழு. இத்திருவூரின் மேன்மைக்கு இலக்கணமாக விளங்குவது வீரகத்தி வநாயகப் பெருமான் திருக்கோவில். இத்திருத்தலத்தின் மேன்மையை அறியாதவர்களில்லை. அற்புதம் நிறைந்த வித்தக விநாயகனின் திருவீதியில் மணிமண்டபம் அமைக்கப் பெற்று மங்கலகரமாகத் திறப்புவிழா நடைபெறுவது அறிந்து ஆனந்தமடைகிறேன். கல்வியிலும் சமய வாழ்விலும் நிறைந்த ஊரெழுத் திருவூரின் சிறப்புக்கு இப்புதிய மணிமண்டபம் மேலும் மெருகூட்டுகிறது. சைவத்திருத்தொண்டரும், விநாயகப் பெருமானின் மீளா அடியவரும் தொழில் அதிபருமான மு. சண்முநாதன் அவர்களின் அயராத முயற் சியால் சிற்பம் நிறைந்த மணிமண்டபம் துரிதகதியில் கட்டப்பட்டது. பொறியியல் நுட்பமும் கலை ஆவர்வமும் நிறைந்த திரு. மு. சண்முகநாதன் அவர்கள் எக்காரியத்தைப் பொறுப்பேற்றாலும் அதைப் பூரணப் பொலிவோடு நிறைவேற்றும் திறன் வாய்ந்தவர். அவ்வகையில் அவரது அர்ப்பணிப்பான சேவையில் உருவாகிய இம்மண்டபம் இவ்வூர் மக்களுக்கு மட்டுமன்றி அயலூர் மக்களுக்கும் பெரும் பயன்தரும் என்பதில் ஐயமில்லை.

ஊரெழு விநாயகர் வீதியில் இரவிரவாக கம்பன் விழா நடைபெற்ற நாள் என்றும் பசுமையாகவுள்ளது. மண்டபம் இல்லாத நிலையில் பந்தல் போட்டு விழா எடுத்தார்கள். இன்று எவ்விழாவும் எடுபபதற்கு ஏதுவாக இனிய மண்டபம் உருவாக்கப் பட்டுள்ளது. சூரியன், சந்திரன் நித்தமும் உள்ளது போல் காலமெல்லாம் இப்புனித மண்டபம் நிறைபெற்றுச் சிறக்க எல்லாம்வல்ல விநாயகப் பெரு மானைப் பிரார்த்தித்து அமைகிறேன். இப்புனித பணி சிறக்க வாழ்த்துக்கூறி நிறைவு செய்கிறேன்.

யாவர்க்குமாம் என்றும் இன்னுரை தானே

### ஊரெழு அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிரதம சிவாச்சார்யர் சிவஸ்ரீ வை. தியாகராஜக் குருக்கள் அவர்கள் வழங்கிய ஆசியுரை



லம்போதரம் மஹாகாயம்
ஸர்வவிக்ன நிவாரகம்
ஸர்வ கார்யத்த சித்தியர்த்தம்
த்யாயேத் சித்தி விநாயகம்

உலகமெலாம் உணர்ந்து உய்திபெற வேண்டும் என்ற பெருங்கருணையினால் எல்லையற்ற பரம்பொருள் எடுத்த வடிவங்கள் எண்ணில. இதனை உணரும் வாய்பபு பிறவிகளிலே மேம்பட்ட பிறவியாகிய மானிடப் பிறவி எடுத்த எமக்கே உரியதாகும். ஆதனால்தான்,

துர்லபம் மானு'ம் ஜென்ம
சிவதர்மோபிநுர்லப

என ஆகமங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. இத்தகு வடிவங்களிற் சிறந்து விளங்குவது விநாயக வடிவம் ஆகும். திருவதனமே பிரணவ வடிவமாக அமைந்தமையினால் பிரசன்ன வதனன் என்னும் சிறப்புப் பெயர் விநாயகருக்கு மாத்திரமே உரிய தனிப்பெயர் ஆகும்.

விநாயகர் ஆலயத்தின் தெற்கு வீதியில், மிகக் குறுகிய காலத்தில் பல சிற்பக் கலை அம்சங்களுடன் கூடிய அழகான சகல வசதிகளையும் கொண்ட மணி மண்டபத்தை பெரும் முயற்சி எடுத்துக்காட்டி நிறைவேற்றியுள்ளார். வெளிநாட்டில் வாழும் உறவினர்கள், விநாயகப் பெருமானின் அடியார்கள், அன்பர்களின் பேருதவியுடன் இப்பெருந்திருப்பணி நிறைவேறியுள்ளது ஒரு சிறப்பு.

என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற வாக்கின்படி வாழ்ந்து வரும் திரு. கு. சண்முகநாதன் அவர்களுக்கு இப்பணியில் பங்குபற்றிய கட்டடக் கலைஞர்களுக்கும் சிற்பக் கலைஞர்களுக்கும், பேருதவிபுரிந்த நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவித்து, யாவரும் எல்லா நலன்களும கிடைக்கப்பெற்று, சகல செல்வசிவயோக மிக்கப் பெருவாழ்வு வாழ ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் திருவருள் நிற்கப் பிரார்த்தித்து, இக் கல்யாண மண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியாகும் இவ் விழாமலர், இதழ்கள் தோறும் நறுந்தேனைச் சொரிவதாய், நறுமணங் கொண்டு, இனிமை பயப்பதாய் அமைய வேண்டி ஆசீர்வதிக்கின்றோம்.

சர்வே ஜனாஹஸீ கிநோபவந்து
ஸமஸ்த மங்கலானி பவந்து!

### முகவுரை



ஊரெழு மடத்து வாசல் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர், இற்றைகது 100ஆண்டுகளுக்கு முன்பாக புளியமரத்தடியில் தோன்றி பின் சிறிய மடாலயமாக மாறி இன்று பெரிய கோவிலாக உருவாகியுள்ளது. இவ்வூர் மக்கள் எந்தக் காரியத்தைச் செய்வதற்கு முன்பும் விநாயகர் அருள் பெற்றே செய்து வந்தார்கள்.

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் பாதம் வணங்கி சிறுவயது முதல் கோயில் கும்பிட வைத்து சைவவழிகாட்டிய நம் பெற்றோரை வணங்குகின்றோம். சிறு பராயத்திலேயே ஆலயத் திருத்தொண்டர்கள் செய்து நித்தமும் ஆலய வீதியிலேயே எமது காலத்தைக் கழித்தோம். அதன் பயன் இவ் ஆலயத்தை நிர்மாணிக்கவும் இம் மணிமண்டபத்தை உருவாக்கவும் இது தவிர 150 ஆலயங்களுக்கு மேல் புதிதாக நிர்மாணித்து புனருஸ்தாபனம் செய்து கொடுக்கும் அளவிற்கு எம்மை ஆளாக்கியவர் விநாயகரே.

ஆலய உற்சவ காலங்களின்போது அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு எமக்கு ஒரு மண்பம் இல்லாதது ஒரு பெருங் குறையாக இருந்தது. ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மணிமண்டபம் நிர்மாணிக்க கடந்த வருடம் 2008 பங்குனி 21ம் திகதி அத்திபாரம் இடப்பட்டது.

விநாயகரை நம்புங்கள் விக்கினங்கள் தீரும்

### ஊரெழு கிளானைப்பதி பர்வதவர்த்தனி மனோன்மணி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வாகீஸ்வரக் குருக்கள் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி



பக்ஞக துலாபகம் நித்தியம்
நிர்மலம் நிரு பத்திரவம் தஸ்மை
மகானு பாவாய விக்னேசாய
நமோ நமக!!

யாழ்ப்பாண நகரின் வடபால் ஐந்துமைல் தொலைவில் ஒரு சிறு கிராமமாக ஊரெழு திகழ்கின்றது. ஊரெழுக் கிராமத்தின் நடுநாயகமாக வீரகத்தி விநாயகர் ஆலயம் திகழ்கின்றது. விநாயகர் என்றாலே வி தனக்கு மிஞ்சிய நாயகன் தலைவன் இல்லாத தனிப் பெருங்கருணைத் தனித்தலைமைக் கடவுள் ஆவான். இத்தகைய பெருமை கொண்டவனோ நம் போன்ற சாதாரண எளிய மக்களும் மிக எளிதாக வணங்கத்தக்கவன்.

இவ்வாறு பெருமைக்குரியவர் என்று அறிந்த நம் கிராமத்து முன்னோர்கள் ஏறத்தாழ 500 வருடங்களுக்கு முன்னர் சிறு ஆலயமாக அமைத்து வழிபடத் தொடங்கினார்கள். எமது அறிவுக்கு எட்டிய வரையில் திருவாளர் வல்லிபுரம் இராசா அவர்கள் தனிப்பட்ட முறையில் எஜமானாக இருந்து பலகாலம் ஆட்சி செய்து வந்துள்ளார்கள். காலப்போக்கில் ஊர்மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற முறையில் திருவாளர் கனக சபாபதி அவர்கள் சிறப்பாக நடைமுறைப்படுத்தினார்கள். அவர்களின் பின்பு திருவாளர் க. சண்முகநாதன் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இவர் தன்னுடைய காலத்தில் பல திருப்பணிகளைச் செய்விதது மஹாகும்பாபிசேகத்தையும் பூர்த்தி செய்தார். அதற்கும் மேலாக வீரகத்தி விநாயக கலை,கலாசார மண்டபத்தை கலை அம்சங்களை அடக்கிய சிறப்புப் பொருந்திய மணிமண்டபத்தை எங்கள் கிராமத்திற்கு அன்பளிப்பாகத் தந்துள்ளார் என்றால் மிகையாகாது. இது போன்ற நல்ல திருப்பணிகளை இந்த நிர்வாக சபையினர் மேலும் மேலும் செய்து இந்தக் கிராமம் உயர்வடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல விநாயகனை நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்து ஆசீர்வாதம் செய்கின்றோம்.

ஜெயசஞ்சன் கொன்ஸ்ரக்சன்
நந்தவனம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்
JEYASUNJAN
CONSTRUCTION
Nanthavanam, Urelu East, Chunnakam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் புற்றீசல்களாக முளைக்கும் நடைபாதைக் கடைகளும் இடையூறுகளும்

நல்லூர் முருகன் கோயில்பக்கமாகச் சென்றீர்களானால் கோயில் திருவிழா ஆரம்பமாகிவிட்டதோ என்ற குழப்பத்துக்கு நீங்கள் ஆளாவது சர்வநிச்சயம். பாதாளக் கிணற்றுக்குள் உறுமியபடி பாய்ந்தோடி சாகசம் காட்டும் மோட்டார் சைக்கிள்கள் ஒருபுறம். மலைமலையாய் குவிந்து கிடக்கும் பிளாஸ்ரிக் பொருள்கள், உடுபுடைவை வகைகள் ஒருபுறம். பழமரக்கன்றுகள், சாடிகள், அழகுசாதனப் பொருள்கள், சோளன்பொத்திகள் இன்னொருபுறம். இப்படியாக நிரம்பிவழியும் கடைகளும் வீதியெங்கும் முட்டிமோதும் சனக்கூட்டமுமாக நல்லூர்ப்பகுதி நாளாந்தமும் சனநெருக்கடி மிகுந்த பகுதியாகவே காட்சியளிக்கிறது. இந்த வீதியைக் கடப்பதற்குள் ஒரு யுகமே முடிந்துவிடும்போல் தோன்றுகிறது. அந்தளவுக்கு வாகனங்கள் 'விலத்திக் கொண்டு' செல்லமுடியாத அளவுக்கு நல்லூர்த் தேருக்கு வருவது போல ஒவ்வொருநாளும் நிறைந்த சனக்கூட்டம் இப்போது நல்லூரில் சர்வசாதாரணமாகக் காணப்படுகிறது. எல்லாமே ஏ-9 திறந்துவிடப்பட்டதன் பலாபலன்கள்தான்.



நல்லூரைப்போலவே திடீர் 'பஜார்' பகுதியாக உருமாறிப்போயுள்ள இன்னொரு பிரதேசமாக யாழ்.ஆஸ்பத்திரி வீதியைச் சொல்லலாம். போதனா வைத்தியசாலையின் வீதிப்புறமாக பாதசாரிகளுக்கெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த நடைபாதையெங்கும் நீக்கமற நடைபாதைக் கடைகள் நிறைந்துபோய்க் கிடக்கின்றன. இதனால் இப்போது பாதசாரிகளெல்லாம் நடைபாதையில் பயணிக்க முடியாதவர்களாய் ஏனைய வாகனங்களோடு மல்லுக்கட்டியபடி வீதிகளில்தான் பயணிக்கவேண்டியுள்ளது.

புற்றீசல்களாய் - நாளொரு கடையும் பொழுதொரு பொருளுமாக - யாழ்ப்பாணம் எங்கும் நடைபாதைக் கடைகளின் பெருக்கம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு துரிதகதியில் நிகழ்ந்தேறி வருகிறது. இதுநாள் வரையில் கொழும்பில் புறக்கோட்டையில் மட்டுமே பெறமுடிந்த இந்த வசதி இப்போது குடாநாட்டுக்கும் கிட்டியுள்ளது. இதனால் பல வகையான பொருள்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் குடாநாட்டு மக்களுக்கு வாய்த்துள்ளது. இது ஒருவிதத்தில் வசதியாக அமைந் தாலும் இன்னொரு புறமாக இடையூறுகளையும் ஏற்படுத்தாமலில்லை.

இதுநாள் வரையும் பஸ்நிலையத்தை அண்டிய - கடைக் கட்டடத் தொகுதிகள் அமைந்துள்ள - பகுதிகளிலேயே போக்குவரத்து நெருக்கடி யாழ். நகரில் இருந்து வந்தது. ஆனால் இப்போது அந்தப் போக்குவரத்து நெருக்கடி 'டெங்கு' போல எங்கும் பரவத் தொடங்கியுள்ளது. எங்கு பார்த்தாலும் கும்பல் கும்பலாய் வாகனங்களும், மனித நடமாட்டங்களும்தான். ஏ-9 வீதி திறக்கப்பட்டதன் பின்னர் குடாநாட்டுக்கு வந்து போகின்றவர்களின் எண்ணிக்கை ஒரேயடியாக எகிறிவிட்டது. பஸ்களில் நாளாந்தம் வந்து குவிகின்ற பயணிகளின் எண்ணிக்கையைத் தாங்க முடியாமல் யாழ். நகரம் விழி பிதுங்கி நிற்கின்றது. இப்படி ஏற்கனவே சனநெருக்கடியால் தவித்து நிற்கின்ற யாழ்ப்பாணத்துக்கு இன்னொரு தலையிடியாக புதிதாய் முளைக்கும் நடைபாதைக் கடைகள் மாறிநிற்கின்றன.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் முன்னரை விடவும் இப்போது சனநடமாட்டம் அதிகம்தான். இதற்குக் காரணம் ஏ-9 வீதியல்ல. கடந்த சில வாரங்களாக குடாநாட்டை உலுப்பியெடுத்துவரும் டெங்கு நோய் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நிதமும் ஆயிரக் கணக்கான மக்கள் சிகிச்சைக்காக வந்த வண்ணம் உள்ளனர். இதுதவிர நோய்த் தாக்கத்திற்குள்ளான தமது உறவுகளைப் பார்ப்பதற்காகவும் ஏராளமானோர் வைத்தியசாலைக்கு வருகின்றனர். இதன் காரணமாக வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதி போக்குவரத்து நெரிசல் மிகுந்ததாக மாறியிருந்தது. இது போதாதென்று நடைபாதைப் பகுதி யை வியாபாரிகள் ஆக் கிரமித்துக் கொண்டதால் வேறு வழியின்றி பாதசாரிகளும் வீதிகளூடாகவே பயணிக்க வேண்டியிருப்பதால் இந்த நெரிசல் இன்னமும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால் ஒரு விபத்துப் பிரதேசமாக யாழ். ஆஸ்பத்திரி வீதி மாறியிருக்கிறது.



குடாநாட்டின் அடையாளங்களில் ஒன்றாக நல்லூர் முருகன் ஆலயம் கொள்ளப்படுகிறது. அது மதத்தையும் தாண்டி குடாநாட்டின் குறியீடாகக் கொள்ளப்படுவதால்தான் இன, மத, பேதமின்றி வெளியூரிலிருந்து வருகின்ற பயணிகள் நல்லூர் ஆலயத்திற்கும் வருகின்றனர். ஆனால் இவ்வாறு வருகின்ற யாத்திரிகர்களுக்கும், வழமையாகவே நல்லூர் ஆலய வீதியூடாகப் பயணிப்போருக்கும் நடை பாதைக் கடைகளும் கேளிக்கை விளையாட்டு நிகழ்வுகளும் தேவையற்ற அசௌகரியத்தையே உண்டுபண்ணி வருகின்றன. ஆரம்பத்தில் நல்லூரில் தெற்கு வீதியில் உருப்பெற்ற இந்த நடைபாதைக் கடைகள் இப்போது மெல்ல நகர்ந்து பின்புறமாகத் தளம் அமைத்து விட்டன.



இதனால் எந்நேரமானாலும் இந்த வீதியைப் போக்குவரத்திற்காகப் பயன் படுத்துவது என்பது மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பதுபோல அலுப்பை உண்டு பண் ணும் விடயமாகப் போய்விட்டது.

சாதாரணமாக பழவியாபாரிகள் நடைபாதைக் கடைகள் அமைத்தாலே பதறியடித்துக்கொண்டு அவர்களை அப்புறப்படுத்தும் பொலிஸாரும், மாநகர சபையினரும் இப்போது இந்த நடைபாதைகளின் பெருக்கத்தைக் கண்டும் காணாமல் இருப்பது பொதுமக்களிடையே மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியிருப்பதை பலரின் கருத்துகள் ஊடாக அறிய முடிந்தது. சிலவேளைகளில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் நடைபாதைக் கடைகள் என்பதாலேயே இப்போது இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கிறார்களோ என்ற சந்தேகமும் பலரின் மனதில் எழாமல் இல்லை. இந்த சந்தேகத்தை மட்டுமல்லாது போக்குவரத்துக்கு இடை யூறு செய்யும் நடைபாதைக் கடைகளின் பெருக்கத்தையும் இல்லாதாக்குவதற்கு உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்- மக்கள் நலன்நாடி எடுப் பார்களா?

படங்கள்: நந்தன்

# சக்தி ஒளிபரப்பின் இழப்பு - ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றம்!

யாழ்ப்பாணத்தில் இப்போது 'அன்ரனாவை'ப் பயன்படுத்தி தொலைக்காட்சியைப் பார்த்து வருவோரில் நானும் ஒருவன். அண்மைக்காலங்களில் நவீன முறையிலான சிறியரக 'டிஸ்' அன்ரனாக்களும், கேபிள் ரீ.விகளும் பல்கிப் பெருகியுள்ளன. ஆயினும் அவற்றில் எம்முடைய நாடு சார்ந்த நிகழ்ச்சிகளோ விடயங்களோ இருப்பதில்லை. அவை முற்றுமுழுதாக இந்தியத் தன்மை சார்ந்த கேளிக்கை நிகழ்வுகளையும், தொலைக் காட்சித் தொடர்களையும், சினிமாப் படங்களையுமே ஒளிபரப்பி வருகின்றன. இந் நிலையில் சாதாரண அன்ரனாக்களைப் பயன்படுத்திப் பார்க்கக்கூடிய வகையில் பொதிகை, ரூபவாஹினி, டான் ரீ.வி, சக்தி ரீ.வி என்னும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில அலைவரிசைகளே ஒளிபரப்பப்படுகின்றன. இவற்றில் பொதிகை இந்தியாவிலிருந்து ஒளிபரப்பப்படுகின்றது. ஏனைய மூன்று தொலைக்காட்சி அலைவரிசைகளே இலங்கையிலிருந்து ஒளிபரப்பாகின்றன. இவற்றில் சக்தி ரீ.வி மட்டுமே யாழ்ப்பாணப் பார்வையாளர்களுக்கேற்ற வகையில் நடுநிலைத் தன்மையோடு செய்திகளையும், பல்சுவை நிகழ்ச்சிகளையும் இதுநாள் வரையும் வழங்கி வந்தது. இதனால் யாழ்ப்பாணத்தில் சாதாரண அன்ரனாக்களைப் பொருத்தி தொலைக் காட்சி பார்ப்போர் அதிகளவில் சக்தி ரீ.வியையே கண்டுகளித்து வந்தனர்.

இவ்வாறு அதிகளவான யாழ்.மக்களைக் கவர்ந்து வந்த சக்தி ரீ.வி கடந்த சில வாரங்களாக சொல்லாமல் கொள்ளாமல் யாழ்ப்பாணத்தில் நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் நடுநிலைத் தன்மையோடு இலங்கைச் செய்திகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பினை நாங்கள் இழந்துவிட்டோம். இவ்வாறு திடீரென சக்தி ரீ.வி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதற்குரிய காரணம் எமக்குப் புரியாமல் சிலநாள்கள் தவித்தோம். இதற்கு முன்னரும் ஒருசில தடவைகள் இவ்வாறு தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாகவோ, அல்லது குறித்த ஊடகத்தின் மீதான இனந்தெரியாதோரின் தாக்குதல்கள் காரணமாகவோ யாழ்ப்பாணத்தில் சக்தி ரீ.வி ஒளிபரப்பு இடைநிறுத்தப் பட்டுப் பின்னர் நிலைமைகள் ஓரள வுக்குச் சரிவந்தபின்னர் மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. இதைப் போலவே இம்முறையும் ஒருசில




நாள்களில் திரும்பவும் சக்தி ரீ.வி ஒளிபரப்பாகும் என்று நம்பியிருந் தோம். ஆனால் பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகளைப் படித்தபின்னர், யாழ்ப்பாணத்தில் சக்தி ரீ.வி இனி ஒளி பரப்பாகாது என்பது தெரியவந்தது. அத்தோடு எம்முடைய நம்பிக்கை முற்றாகத் தகர்ந்துபோனது. ஒருவகையில் கேளிக்கை நிகழ்ச்சிகளை அதிகளவில் கொண்டிருந்தாலும் நமக்கு மிகவும் அவசியமானதும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பானதுமான செய்தி, மின்னல் போன்றன காலத்தின் தேவையான விடயங்கள். இவற்றினூடான இலங்கை அரசியலின் பல்வகைப்பட்ட நெளிவுசுழிவுகளையும், ஊழல்களையும், மோசடிகளையும், முன்னேற்றத்தையும் நாம் தெளிவாக அறிய முடிந்தது. ஆனால் அந்த வசதி, சக்தி ரீ.விக்கு யாழ்ப்பாணத்தில் மூடுவிழா நடத்தப்பட்டதோடு இப்போது இல்லாமல் போய்விட் டது.

இதைவிட இன்னுமொரு அவலமும் எங்களுக்குக் கிட்டியிருக்கிறது. சில வேளைகளில் சக்தி ரீ.வி ஒளிபரப்பாகாதா என்ற நப்பாசையில் தொலைக்காட்சியை இயக்கினேன். என்ன ஆச்சரியம்! சக்தி ரீ.வி ஒளிபரப்பாகிய அதே அலைவரிசையில் புதிய படத்தின் பாட லொன்று போய்க்கொண்டிருந்தது. திரும்பவும் சக்தி ரீ.வி இயங்க ஆரம்பித்துவிட்டது என்று எண்ணிய எனக்கு தொலைக்காட்சியின் மூலையில் தென்பட்ட புதியதொரு தொலைக் காட்சி அலைவரிசையின் பெயர் கண்ணில்பட்டது. அண்மையில் யாழ்ப் பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத் தொலைக்காட்சி முன்னர் சக்தி தொலைக் காட்சி இயங்கிய அதே அலைவரிசையில் இப்போது ஒளிபரப்பாகி வருகிறது.

சரி! இப்போது ஒளிபரப் பாகும் புதிய அலைவரிசையையாவது பார்ப்போம் என்று குடும்பத்தோடு தொலைக்காட்சிமுன் அமர்ந்தோம். ஆனாலும் கொஞ்சநேரத்துக்குள்ளேயே சங்கடத்தால் நாங்கள் நெளிய வேண்டி ஏற்பட்டுவிட்டது. குடும்பத்தோடு உட்கார்ந்து பார்க்கமுடியாத அளவுக்கு பாலியல் தன்மைகள் கூடிய சினிமாப் படமொன்று ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. இதே பாணியில்தான் நாள்முழுதும் திரைப் படங்கள் ஒளிபரப்பாவதாக எனது நண்பர் ஒருவரும் குறைபட்டுக்கொண்டார்.

ஒரு தொலைக்காட்சியை குடாநாட்டில் இயங்க விடாது தடைவிதித்ததோடு மட்டுமல்லாது அதே அலைவரிசையில் ஆபாசக் காட்சிகள் நிறைந்த திரைப் படங்களை ஒளிபரப்புகின்ற பரிதாப நிலைமை குடாநாட்டில் ஏற்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் ஒளிபரப்பாகிவரும் தொலைக்காட்சி சக்தி ரீ.விதான். சாதாரண பொருளாதார வசதி கொண்ட எங்களைப் போன்றோர் அன்ரனா மூலம் பார்க்கக்கூடியதாக- ஏழைகளின் தோழனாக-இருந்ததும் இந்தத் தொலைக்காட்சி அலைவரிசை தான். அத்தோடு எம்முடைய நாட்டு நடப்புகளையும் உடனுக்குடன் அறிந்துகொள்ளுவதற்கு எம்முடைய தொடர்பாடல் திறனை விருத்தி செய்வதற்கும் துணை புரிந்தது சக்தி ரீ.விதான். இப்பேர்ப்பட்ட தொலைக் காட்சியை இடைநிறுத்தியதால் ஏராளமான யாழ்.மக்கள் உண்மையிலேயே மனதளவில் பாதிப்புற்றுள்ளனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் மீளவும் எம்மைப் போன்றவர்கள் சக்தி ரீ.வியைக் காண்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

உடுப்பிட்டி அ.ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனை பிரதிநிதி
## Sales Representative

யாழ்ப்பாணத்தில் தேயிலை விநியோகிக்கும் நிறுவனத்திற்கு அனுபவமுள்ள (2வருடம்), சாரதி அனுமதிப்பத்திரம் (A,D) உள்ளவர்களும், ஆங்கில அறிவு உள்ளவர்களும் யாழ் மாவட்டத்தில் எப்பகுதியிலும் வேலை செய்யக்கூடிய வரும் உடன் தேவை. 7நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 3974, மே/பா: உதயன்.


## நவீல்ட் பாடசாலைக்கு ஹற்றன் நஷனல் வங்கி ஒரு லட்சம் ரூபா நிதியுதவி

கைதடி நவீட் பாடசாலை அபிவிருத்தி நிதிக்கு ஹற்றன் நஷனல் வங்கியினால் ஒரு லட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது. சாவகச்சேரி ஹற்றன் நஷனல் வங்கி கிளையின் திறப்பு விழாவின் போது அதன் சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் அறிவித்ததன் பிரகாரம் இத் தொகை அண்மையில் வழங்கப்பட்டது.

கிளை முகாமையாளர் கே.நிஷாந்தன் பாடசாலை அதிபரிடம் ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையை கையளித்தார். சாவகச்சேரி கிளை திறப்பு விழாவின் போது நவீல்ட் பாடசாலை மாணவர்கள் வரவேற்பு நடனத்தையும் வரவேற்பு கீதத்தையும் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (50-207)


## காணி வீடு விற்பனைக்கு

இரு காணிகள் வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தேவாலய வீதி, சாவகச்சேரி.
தொடர்பு கொள்ள: செ.கிருஷ்ணகுமார்,
விதானை வளவு,
பொன்னாலை வீதி, மானிப்பாய்
T.P 0772338084, 021 222 7802
(93891)






Anchor
Air force
The power to blast off heat !

Certified By American Quality Assessors
ISO 9001 : 2000 CERTIFIED COMPANY

Anchor Fans pioneered the use of aero dynamic techonology in India

ANCHOR

Anchor Electrical PVT LTD.
Mumbai, India.
Member of
Panasonic

Imported by:
Abbe (PVT) LTD.
14,1/1, Daya Road, Colombo - 06
Sales Point: 67A, Wolfendhal Street, Colombo -13 T.P: 0112439993



JEYANTHA INDUSTRIAL PARK (PVT) LTD
SCHOOL ROAD, KATCOVALAM,
POINT PERDRO
PHONE ;- 021 567 1027

## கோலாகலத் திறப்பு விழா
## கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை

யாழ்ப்பாண கடற்தொழிலாளர்களினதும், கடலுணவு வியாபாரிகளினதும் நன்மை கருதி.

நாளை (18.01.2010) காலை 9.45மணிக்கு திறந்து வைக்கப்படும்

தலைவர்:
திரு. கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
(முகாமையாளர், யூனியன் வங்கி, யாழ்ப்பாணம், முன்னாள் உதவிப்பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி)

பிரதம விருந்தினர்:
திரு. சிவசரவணபவன் சுந்தரேஸ்வரன்
(முகாமையாளர், ஹட்டன் நஷனல் வங்கி, சுன்னாகம்)

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

தலைமை நிறைவேற்று அதிகாரி,
பணிப்பாளர் சபையினர் மற்றும் தொழிலாளர்கள்,
ஜெயந்தா கைத்தொழில் பூங்கா (தனியார்)
வரையறுக்கப்பட்டது,
கம்பனி பதிவு இல: PV68439

பாடசாலை வீதி,
கற்கோவளம்,
பருத்தித்துறை.
தொலைபேசி: 021 567 1027
(93784)



# MONTESSORI DIPLOMA

at MONTESSORI TEACHER PREPARATION of the US
(approved by Montessori Institute of America (MIA) as a Montessori Training Programme in Sri Lanka for levels 2 ½ to 6 years )

Level – 1 (15 days crash course) Phase – 1 100 hours and internship of 9 months.

Internship schools in USA, Philippines, Taiwan, Korea, China, Canada, Kenya and Sri Lanka

Course Directors
- SHARLET MC CLURKIN
  Director MTP of WA/ former President Montessori Institute of America
- DONALD R MC CLURKIN
  Master Teacher, MTP of WA
- PUSHPA ALUTHGAMAGE
  MIA Diploma(USA) AMI (Sri Lanka)
  Administrative Directress, MTPUS in Sri Lanka,
  Board Director MIA, Directress,
  Brilliant International School



COURSE COMMENCING SOON
KANDY, PERADENIYA, COLOMBO, NEGOMBO, JAFFNA
CONTACT : Pushpa Aluthgamage

TINYTOTS MONTESSORI
Sri Swarnajothy Mawatha, Kiribathkumbura, Peradeniya.
MONTESSORI PLUS,# 65/1,Mulgampola Road, Kandy
MONTESSORI PLUS,# 335, Colombo Road, Negombo
Telephone-081-3829236. 077 3575145
Email-mtpus@sltnet.lk / web:montessoriplus.org

ANGEL INTERNATIONAL SCHOOL, MANIPAY. 0777-238 300


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
1948 * 12 * 29



மண்ணின் மடியில்
2009 * 01 * 28

திதி: துதியை

### அமரர் கந்தையா ஸ்ரீசண்முகராசா

(உரிமையாளர், சிவாஸ் புடைவையகம், பரந்தன்)

ஒரு வேளை உணவையேனும் விருப்போடு
உண்டுவிட்டு ஷெல் மழைக்குள் இருந்த
எம்மை அழைத்து வந்து பாதி வழிதனிலே
பாதுகாப்பாய் விட்டுவிட்டு பாரினிலே
மடிசாய்ந்து எம்மையெல்லாம் துன்பக்
கடலில் ஆழ்த்திவிட்டு கண்டிருந்த
கனவுகள் எல்லாம் காற்றாய் பறந்ததால்
கண்ணீரால் நனைகின்றோம் நாம்
வெந்துபோன எம் மனதில் வேதனையை
விட் சென்ற எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுடன்
மனைவி, மகன், மகள்மார்,
மருமக்கள், பேரன், பேர்த்தி.

வேம்படி,
காரைநகர். (93895)

## தில்லைக்கட்டி வீதியை திறக்கக் கோரிக்கை

சுன்னாகம் மல்லாகம் வீதியில் கடகப்புரம் வீதி தில்லைகட்டி வீதிகளை மக்கள் போக்குவரத்துக்காக திறந்து விட நடவடிக்கைகள் எடுக்குமாறு நேற்று முன்தினம் உடுவில் பிரதேச செயலகத்தில் மக்களைச் சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (1-111)

## தியாகராசா ம.ம.வியில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜன.17

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தின் குருதிக் கொடையாளர் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நடமாடும் முகாம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடை பெறவுள்ளது.

மேற்படி பாடசாலையின் நடராஜா மண்டபத்தில் நடைபெறும் இந்த இரத்த தான முகாமை யாழ்.போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் நடத்து கின்றனர்.

இந்த முகாமில் கலந்துகொண்டு இரத்த தானம் செய்ய விரும்புவர்கள் அன்றைய தினம் தமது குருதியை கொடையாக மாற்றலாம் என மேற்படி குருதிக் கொடை யாளர் கழகம் [illegible]ப்பபு விடுத்துள்ளது. (50-2[illegible])


## சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தேயிலை நிறுவனத்திற்கு A சான்றிதழ் உள்ள சாரதி உடன் தேவை. 02வருட அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: [illegible]
மே/பா: உதயன். (93777)


## மாசித் திங்களில்...

உருவாய்
19 01 1952



ஒளியாய்
17 01 2009

அமரர்
### திரு.கனகரத்தினம் வேலுதாசன்

அதிகாலை ......
வானம் இருண்டிருந்தது.
சூரியனை காணவில்லை.
காற்றும் வீசத் தயங்கியது.
வீதி எங்கும்.
ஆழமான அமைதி.

எல்லாமும் எல்லாமாய்
இருந்த எங்கள்
இறுதிப் பயணம்.

விடையளிக்க முடியா.
விழிகளுடன் நான்.
விருப்பமின்றி நீ.
போக மறுத்த இதயம்.
வெடித்துச் சிதறியது.

ஞானபண்டித வித்தியாசாலை அருகில்,
புதுவீதி, கொக்குவில் மேற்கு.

மனைவி,
சுற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனித் தமிழின் காலடித் தடங்கள்

கணினித்தமிழின் வரலாறு மிக நீண்டது, மிகப் பரந்தது, மிக ஆழமானது. எத்தனையோ ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பயனாளர்களின் பங்களிப்பில் எழுதப்பட்ட கணனித்தமிழ் வரலாற்றின் முக்கிய காலகட்டங்களைச் சுருக்கமாக இங்கு நோக்குவோம்.



### (1). எழுத்துருவும் சொல் செயலாக்கியும்

கணனித்தமிழின் வரலாறு தமிழ் எழுத்துருவில் தொடங்கியது என்பதை மறுப்பதற்கில்லை. கணனிப் பொறியில் தமிழைக்கையாள 'எழுத்துரு' அடிப்படைத் தேவைஆகும். எண்பதுகளின் தொடக்கத்தில் கணிப்பொறிகளில் டாஸ் இயக்க முறைமையே இருந்தது. டாஸில் பயன்படுத்தக்கூடிய தமிழ் உரைத் தொகுப்பிகள் எண்பதுகளின் தொடக்கத்திலேயே வெளியிடப்பட்டன. அவற்றில் தமிழ் எழுத்துருக்களும் உள்ளிணைக்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டில் சில கல்லூரிகளில் 'பாரதி' பயன்படுத்தப்பட்டது.

அமெரிக்கா, ஐரோப்பா, கனடா தமிழர்கள், டாக்டர் சீனிவாசனின் 'ஆதமி'யைப் பயன்படுத்தினர். மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் துணைவன், பாரதி, கணியன், முரசு ஆகியவை உருவாக்கப்பட்டன. வட அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் பணிபுரிந்த தமிழ் அறிஞர்கள் 'யூனிக்ஸ்' முறைமையில் பயன் படுத்தக்கூடிய தமிழ் எழுத்துருக்களை உருவாக்கினர். 'யூஸ்நெட்' செய்திக் குழுக்களில் பயன்படுத்தப்பட்ட 'மதுரை' எழுத்துரு அவற்றுள் குறிப்பிடத்தக்கது.

கணனிப்பொறியில் தமிழ் எழுத்துகள் மென் பொருள் மூலமாகவே சாத்தியப்பட்ட அந்தக் காலகட்டத்தில், இந்தியாவில் புனேயில் இருக்கும் இந்திய அரசு நிறுவனமான -, கணனிப்பொறியில் வட்டார மொழிகளைப் பயன்படுத்த என்னும் வன்பொருள் கார்டினை அறிமுகப்படுத்தியது. சிங்கப்பூரிலும் இது போன்ற கிராஃபிக்ஸ் கார்டு மூலமாக ஆப்பிள்- கணனிப் பொறிகளில் தமிழ் எடுத்தாளப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.1985 முதல் 1995 வரையிலான பத்தாண்டுகளில் டாஸ், யூனிக்ஸ், மேக் இயக்க முறைமைகளில் செயல்படக்கூடிய ஏராளமான தமிழ் எழுத்துருக்களும் அவற்றைப் பயன்படுத்தி ஆவணங்களை அச்சிடக்கூடிய ஏராளமான சொல் செயலாக்க மென் பொருள் களும் தமிழ்நாட்டிலும் தமிழர்கள் வாழும் வெளிநாடுகளிலும் ஏராளமாக உருவாக்கப்பட்டன. அஸ்திரேலியாவில் 'கம்பன்', மலேசியாவில் 'நளினம்', சிங்கப்பூரில் 'தாரகை' ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

தமிழ்நாட்டில் பல்வேறு பத்திரிகை நிறுவனங்கள் தத்தமக்கெனத் தயாரிக்கப்பட்ட மென்பொருள்களைப் பயன்படுத்தினர்.

தமிழ் நாளிதழ்கள், வார, மாதப் பத்திரிகைகள் இத்தகைய மென்பொருள்களைப் பயன்படுத்தி அச்சேற்றப்பட்டன.

### (2) விண்டோஸ் பயன்பாடுகளில் தமிழ்

உலகம் முழுவதிலும் கணனிப் பொறியின் பரவல் அதிகரித்தது. சாதாரண மக்களுக்கான பயன்பாடுகள் அவரவர் தாய்மொழியில் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால், உலக மக்கள் தத்தம் தாய்மொழிக்கான எழுத்துருக்களையும் பயன்பாடுகளையும் உருவாக்கிக்கொண்டனர்.

இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் பலவும் ஏராளமான தமிழ் எழுத்துருக்களையும் பயன்பாடுகளையும் உருவாக்கினர். வட்டார மொழி எழுத்துருக்களை உருவாக்க உலகெங்கும் என்னும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

இவற்றுள் எளிமையானவை 7-பிட் எழுத்துருக்கள். இவற்றில் 128 எழுத்துக் குறிகள் இருக்கும். அக்காலத் தமிழ் எழுத்துருக்கள் பெரும்பாலானவை இத்தகைய 7-பிட் குறியாக்கத்தைக் கொண்டவை. இவை பெருமளவு தமிழ்த் தட்டச்சின் வடிவமைப்பை ஒத்தவை. இத்தகைய எழுத்துருக்களை உள்ளீடு செய்யத் தனிச் சிறப்பான நிரல்கள் எதுவும் தேவையில்லை. இவற்றைக் கணனிப் பொறியில் நிறுவிய பின் நேரடியாகச் சொல் செயலாக்கி ,விரிதாள், தரவுத்தளம் போன்ற எந்தப் பயன்பாட்டிலும் கையாள முடியும்.

### (3) இணையத்தில் தமிழ்:

இணையத்தின் வருகை, கணிப்பொறி வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பு முனையாக அமைந்தது. உலகத் தமிழர் தமக்குள்ளே கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள மின்னஞ்சல் வழிவகுத்தது. விண்டோஸ், யூனிக்ஸ், மெக்கின்டாஷ் என எந்தக் கணனிப் பொறியாக இருந்தாலும் இணையவழி எவ்வித இடையூறும் இன்றித் தகவல் பரிமாறிக்கொள்ள முடியும் என்ற நிலை உருவானது. மேற்கண்ட இயக்க முறைமைகளில் செயல்படக்கூடிய ஒரே மாதிரியான குறியாக்கம் கொண்ட எழுத்துருக்கள் தேவைப்பட்டன. மூன்று பணித்தளங்களிலும் செயல்படக்கூடிய தமிழ் எழுத்துருக்கள் இணையம் வழி இலவசமாக விநியோகிக்கப்பட்டன. மயிலை, இணைமதி, தமிழ்ஃபிக்ஸ் போன்றவை அவற்றுள் சில.




தமிழ்நாட்டில் அச்சில் வெளிவந்த பல்வேறு நாளேடுகள், வார, மாத இதழ்கள் இணையத்தில் இடம்பிடித்தன. தினபூமி, தினமணி, தினத்தந்தி, தினமலர், ஆனந்த விகடன், குமுதம், கல்கி, கணையாழி ஆகியவை அவற்றுள் சில.

இவை தவிர இணையத்தில் மட்டுமே வெளியிடப்பட்ட மின்னிதழ்கள் பலவும் தோன்றலாயின. தமிழ்சினிமா, மின்னம்பலம், ஆறாம்திணை, திண்ணை ஆகியவற்றை முன்னோடிகளாகக் கூறலாம். மின்னிதழ்கள் இணையத்தில் வெளியிடப்பட்டபோதும் அவை கணிப்பொறியின் பல்லூடகத் தொழில் நுட்பத்தின் சிறப்புக் கூறுகளைப் பயன் படுத்திக்கொள்ளவில்லை; அச்சுப் பத்திரிகைகளின் உள்ளடக்கத்தையும் முன்வைப்பு முறையையுமே பின்பற்றின. எனினும் அவை கணினித் தமிழின் வளர்ச்சியை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றன என்பதை மறுப்பதற்கில்லை.




### (4) எழுத்துரு, விசைப் பலகைதரப்படுத்துதல்

மின்னஞ்சல், அஞ்சல் குழுக்கள், மின்னிதழ்கள், வலையகங்கள் வாயிலாகத் தமிழில் தகவல் பரிமாற்றம் உச்சகட்டத்தை எட்டியபோதுதான் தரப்படுத்தப்பட்ட தமிழ் எழுத்துருக் குறியாக்கத்தின் தேவை உணரப்பட்டது.

உலகெங்கிலுமுள்ள தமிழ் ஆர்வலர்கள் இது குறித்துப் பரவலாக விவாதித்தனர். 1996இல் கலிஃபோர்னியாவின் பெர்க்கிலியில் பேராசியர் ஜார்ஜ் ஹார்ட் இது பற்றிய கருத்துப் பரிமாற்றத்துக்கு ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார். அதனைத் தொடர்ந்து, கணித்தமிழ் முன்னோடிகளில் ஒருவரான நா. கோவிந்தசாமி 1997இல் சிங்கப்பூரில் இணையத்தில் தமிழ்த் தகவல் பரிமாற்றத்துக்கான முதல் சர்வதேச மாநாட்டை நடத்தினார். 'தமிழ்நெட் 97' என்றழைக்கப்பட்ட இந்த மாநாட்டில் உலகெங்கிலுள்ள கணனித்தமிழ் ஆர்வலர்களும் அறிஞர்களும் கலந்துகொண்டு, தமிழ் எழுத்துருக் குறியாக்கத்தரப்பாடு பற்றி விவாதித்தனர். 'தமிழ்நெட் 97' மாநாட்டுக்குப் பின் இணையம் வழித் தமிழ்த் தகவல் பரிமாற்றத்தில் பங்குபெற்ற தமிழ் ஆர்வலர்கள் 'அஞ்சல் குழு' வழியே விவாதங் களை நடத்தி ஓர் எழுத்துருக் குறியாக்கத்தை வடிவமைத்தனர். அது டிஸ்க்கி என்றழைக்கப்பட்டது.





இதனடிப்படையில் அமைந்த தமிழ் எழுத்துருக்கள், மென்பொருள்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. பிற குறியாக்க முறைகளிலுள்ள ஆவணங்களை டிஸ்க்கிக்கு மாற்றுவதற்கான மென் பொருள்களும் கருவிகளும் உருவாக்கப்பட்டன. 'தமிழ்நெட் 97' மாநாட்டுப் பரிந்துரைகளின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட ஓர் எழுத்துருக்குறியாக்க முறையை வடிவமைப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது. இதற்கென ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. நடைமுறையில் இருந்த அனைத்துக் குறியாக்க முறைகளையும் அக்குழு அலசி ஆய்வு செய்தது.1999 பெப்ரவரியில் சென்னையில் நடைபெற்ற 'தமிழ்நெட் 99' உலகத் தமிழ் இணைய மாநாட்டில் இக்குழுவின் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. மாநாட்டின் இறுதியில் இரண்டு நகல்கள் குறியாக்க முறையில் வெளியிடப்பட்டன. மற்றும் [illegible]படுத்தப்பட்ட விசைப்பலகை [illegible]மைப்புக்கான மாதிரியும் முன்வைக்கப்பட்டது. 'தமிழ்நெட் 99' மாநாட்டை ஒட்டித் தமிழ் மென்பொருள் தயாரிப்பாளர்களும் கணித்தமிழ் ஆர்வலர்களும் இணைந்து 'கணினித் தமிழ்ச்சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கினர்.



மு.சிவலிங்கம்- ([illegible])

'தமிழ் நெட் 99' மாநாட்டில் முன்வைக்கப்பட்ட, குறியாக்க முறைகளை இச்சங்கத்தினர் ஆய்வுகளையும் சோதனைகளையும் மேற்கொண்டு அவற்றில் இருந்த குறைகளை நீக்கினர். தமிழ் விசைப் பலகை வடிவமைப்பில் இருந்த சிக்கல்களைத் தீர்த்தனர். / ஆகிய இருமொழி/ஒரு மொழிக் குறியாக்க முறைகள் முன்வைக்கப்பட்டன. 'தமிழ் 99' என்கிற விசைப்பலகை வடிவமைப்பும் பரிந்துரைக்கப்பட்டது. கணனித் தமிழ்ச்சங்கத்தின் பரிந்துரைகளைத் தமிழ் நாடு அரசு ஏற்றுக் கொண்டு அரசாணை வெளியிட்டது. இனி வெளியிடப்படும் தமிழ் மென்பொருள்கள் இத்தரப்பாடுகளுக்கு உட்பட்டுள்ளனவா என்பதைப் பரி சோதித்துச் சான்றளிக்கும் பொறுப்பையும் தமிழ் நாடு அரசு கணினித் தமிழ்ச்சங்கத்துக்கு வழங்கியது.



### (5) இயக்க முறைமைகளில் தமிழ்

கணனித்தமிழின் முக்கியத்துவத்தை முதன்முதலாக மைக்ரோசாஃப்ட் நிறுவனமே உணர்ந்தது எனக் கூறலாம். உலகம் முழுவதும் 90%க்கும் அதிகமான கணினிப்பொறிகளில் மைக்ரொசாஃப்ட்டின் விண்டோஸ் இயக்க முறைமையே செயல்படுகிறது. மைக்ரொசாஃப்ட் தனது விண்டோஸ் 2000 இயக்க முறைமையில் இந்தியையும் தமிழையும் இடம்பெறச் செய்தது. ஆவணங்களைத் தமிழில் உருவாக்கிய நிலை அடுத்த பரிமாணத்தை எட்டியது. ஆவணங்களுக்குத் தமிழிலேயே பெயரிட முடியும். கோப் புறைகளின் பெயர்கள் மற்றும் கணிப்பொறியில் அனைத்து வகைத்தகவல்களையும் தமிழிலேயே கையாள முடியும்.மின்னஞ்சல் மற்றும் பிற தகவல் பரிமாற்றங்களையும் மிக இயல்பாகத் தமிழ் மொழியிலேயே மேற்கொள்ள விண்டோஸ் இடம் தந்தது. விண்டோஸ், எம்எஸ் ஆஃபீஸ் ஆகியவற்றைத் தமிழ் மட்டுமே அறிந்த ஒரு பயனாளர் பயன்படுத்த முடியும் என்பது கணனித் தமிழ் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு. அடுத்து வந்த விண்டோஸ் எக்ஸ்பியில் பதினொரு இந்திய மொழிகள் இடம்பெற்றன.விண்டோ ஸைத் தொடர்ந்து லினக்ஸிலும் தமிழ் இடம்பெறத் தொடங்கியது. விண்டோ ஸைப் போலன்றி, லினக்ஸ் இயக்க முறைமையை எவர் வேண்டுமானாலும் தம் விருப்பப்படி மாற்றியமைத்துப் புதிய பெயரில் வெளியிட முடியும். அவ்வாறு வெளியிடப்பட்டுள்ள பல்வேறு லினக்ஸ் பதிப்புகளில் தமிழ் உள்ளிணைக்கப் பட்டுள்ளது. கணினித்தமிழ் வரலாற்றில் இது ஒரு முக்கிய மைல்கல்.

### (6) கலைச் சொல்லாக்கம்

கணனிப் பொறியியலின் கலைச் சொற்களை உரு வாக்கியதில் பலரது பங்களிப்பு உள்ளது. கணித் தமிழ் ஆர்வலர்கள், இணையத்தில் இயங்கும் சமூகக் குழுக்கள், தமிழ் நாளிதழ்கள், வார, மாதப் பத்திரிகைகள், நூலாசிரியர்கள், அரசு மற்றும் பல்கலைக் கழகங்கள் அமைத்த கலைச் சொல்லாக்கக் குழுக்கள், சங்கங்கள் ஆகிய அனைவருமே கணனித் தமிழ்க் கலைச் சொல்லாக்கத்தில் கணிசமாகப் பங்காற்றியுள்ளனர். எழுத்தாளர் சுஜாதா பத்திரிகைகளில் எழுதியதோடு ஆயிரம் கணினிப்பொறி வார்த்தைகள் என்னும் நூலை வெளியிட்டார். அண்ணா பல்கலைக்கழகத்தின் வளர் தமிழ்மன்றம் கலைச்சொல் தொகுப்பை வெளியிட்டது. 1993-94ஆம் ஆண்டுகளில் தினமலர் நாளிதழில் கணிப் பொறிப் பாடங்கள் தமிழில் விளக்கி எழுதப்பட்டன.

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனித் தமிழின்.......

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1994இல் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு வட்டார மொழியில் கணனிப்பொறித் தொழில் நுட்பத்துக்கெனத் தனியாக ஒரு மாத இதழ் (இப்போது மாதமிரு முறை) - தமிழ் கம்பியூட்டர் - தமிழில் வெளியிடப்பட்டது. அனைத்து நவீனக் கணினிப் பொறித் தொழில்நுட்பங்களும் ஆங்கில இதழ்களில் எழுதப்படுவதற்கு முன்பே தமிழில் எழுதப்பட்டன. சி, சி++, சி, நெட்ஒர்க், ஆரக்கிள், ஜாவா, விஷுவல் பேசிக், ஏஎஸ்பி, விண்டோ ஸ், லினக்ஸ், ஹெச்டிஎம்எல், ஹார்டுவேர், ஆட்டோ கேட், டேலி, டிடிபி, கிராஃபிக்ஸ், அனிமேஷன் ஆகிய அனைத்துமே தமிழில் எழுதப்பட்டன.

தமிழ் இணையம், கம்பியூட்டர் உலகம், கம்பியூட்டர் நேரம், கணிமொழி போன்ற இதழ்களும் வெளியாயின. இவற்றில் கலைச் சொல்லாக்கப் பகுதிகளும் இடம்பெற்றன. மனோரமா இயர்புக்கில் 1995 முதல் ஆண்டு தோறும் வெளியிடப்படும் நவீனத் தகவல் தொழில்நுட்பங்கள் தொடர்பான கட்டுரைகளையும் இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டும்.

'தமிழ்நெட் 99' மாநாட்டைத் தொடர்ந்து, எம்எஸ் ஆஃபீஸ் தொகுப்பிலுள்ள சில நூறு சொற்களைத் தமிழ்ப்படுத்த சுஜாதா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. பலத்த விவாதங்களுக்குப் பின் ஒருமனதான பட்டியல் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. மணவை முஸ்தபா முதல் கலைச்சொல் தொகுப்பை 1999இல் என்னுடைய மேற்பார்வையில் வெளியிட்டார். இரண்டாம் பதிப்பு எனது முழுமையான பங்களிப்பில் 2001இல் வெளியிடப்பட்டது. இலங்கை அரசின் அரசகரும மொழிகள் ஆணைக்குழு 2000இல் கலைச் சொல் அகர முதலியை வெளியிட்டது.

2001இல் முனைவர் மு. ஆனந்த கிருஷ்ணன் தலைமையில் தகவல் தொழில்நுட்பக் கலைச் சொல்லாக்கக் குழுவைத் தமிழ்நாடு அரசு அமைத்தது. எட்டாயிரம் கலைச் சொற்கள் கொண்ட தொகுப்பு 2001 ஏப்ரலில் அரசிடம் வழங்கப்பட்டது. இப்பணியில் குழுவின் உறுப்பினரான என்னுடைய பங்களிப்பு கணிச மானது. இக்கலைச்சொல் தொகுப்பு தமிழ் இணையப்பல்கலைக்கழக வலையகத்தில் உள்ளது. தமிழ் இணைய மாநாடுகளில் கலைச் சொல்லாக்கத்துக்கெனத் தனிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கென அமைக்கப்பட்ட பணிக் குழுவில் நானும் உறுப்பினராக இருந்துள்ளேன். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கலைச்சொற்களின் தொகுப்பு தமிழ் இணையம் சார்பாக வெளியிடப்பட்டது. மைக்ரொசாஃப்ட் நிறுவனம் தன்னுடைய விண்டோஸ் எக்ஸ்.பி., ஆஃபீஸ் எக்ஸ்.பி. ஆகியவற்றுக்காக என்ற பெயரில் கலைச் சொற்களைப் பொதுமக்களிடமிருந்து பெற்றுச் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொண்டது. ஏராளமான கணிப்பொறி நூல்கள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை தமிழில் எழுதப்பட்ட ஆங்கில நூல்கள் என்றே கூற வேண்டும். அவற்றுள் சில கணினிப் பொறி அறிவும் தமிழறிவும் இல்லாதோர் மொழிபெயர்த்தவை. இவற்றை வெளியிட்ட பதிப்பகங்களின் நோக்கம் காற்றுள்ளபோதே காசு பார்த்துவிட வேண்டும் என்பதே. இவற்றில் பெரும்பாலான நூல்கள் கலைச் சொல்லாக்கத்துக்குக் கடுகளவும் பங்களிக்கவில்லை. இடைமுகங்களால் கணினித் தமிழுக்கு ஏற்பட்ட சங்கடங்களையும் இங்குக் குறிப்பிட வேண்டும். ஏற்கெனவே பயனாளர்களிடம் செல்வாக்குப் பெற்று விளங்கும் மென் பொருள்களின் ஆங்கில இடைமுகத்தைத் தமிழில் வடிவமைக்கும்போது மிகுந்த கவனம் தேவை.

## (7) பிற மின்னணுச் சாதனங்களில் தமிழ்

கணிப்பொறியில் மட்டுமின்றி மின்னணுச் சாதனங்கள் எதிலும் இடம்பெறும் தமிழையும் கணினித்தமிழாகவே கருதுவதில் தவறில்லை. அந்த வகையில் இன்றைக்கு ஏடிஎம் பொறிகளில் தமிழைக் காண்கிறோம். பல்வேறு நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு அமைத்துக் கொடுத்துள்ள தொடுதிரைகளில் தமிழைக் காண்கிறோம். சிம்ப்யூட்டர் எனப்படும் கையடக்கக் கணிப்பொறியில் தமிழ் உண்டு. எல்ஜி நிறுவனம் முதன்முதலாக செல்பேசி களில் தமிழைப் புகுத்தியது. நோக்கியா நிறுவனமும் தனது செல்பேசிகளில் தமிழை இடம் பெறச் செய்துள்ளது. செல்பேசி மெனுக்கள் தமிழிலேயே இருக்கும். தமிழிலேயே குறுஞ் செய்தி அனுப்பலாம். செல்பேசி/பி.டி.ஏ. கையகக் கணினிப் பொறிகளில் செயல்படும் விண்டோஸ் சிஇ/ எக்ஸ்.பி., மொபைல் மற்றும் அவற்றில் இயங்கும் வேர்டு/ எக்சல் ஆகியவையும் கணினித் தமிழ் பேசும் நாள் வெகு தொலைவில் இல்லை.

## (8) கணனித்தமிழ் ஆய்வுக் களங்கள்

'கணினித்தமிழ்' என்பது எழுத்துருக்கள், இடைமுகங்கள், கலைச் சொற்கள், இவற்றில் மட்டுமே அடங்கிப்போய்விடவில்லை இதன் களங்கள் பரந்துபட்டவை. கால் பதிக்க வேண்டிய துறைகள் பலப் பல. கண்டெடுக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் ஏராளம். இவை ஒவ்வொன்றாய்ச் சாத்தியப்பட்டுவருகின்றன. கணினித்தமிழின் ஆய்வுக்களங்கள் [illegible] பார்ப்போம்.

சொல் / இலக்கணப் பிழை திருத்தம்

எம்.எஸ். வேர்டில் ஓர் ஆவணத்தில் ஆங்கில உரையை உள்ளீடு செய்யும்போதே சொற்பிழை, இலக்கணப் பிழைகளைச் சுட்டிக்காட்டும்; பிழை திருத்தத்துக்கான வழிமுறைகளைக் கூறும். 'பொன் மொழி' போன்ற பல சொல் செயலாக்கிகளில் இன்றைக்குச் சொற்பிழை திருத்த மென்பொருள் கருவிகள் உள்ளிணைக்கப்பட்டுள்ளன. இதை இலக்கணப் பிழை திருத்தத்துக்கு நீட்டிப்பதற்கான ஆய்வுகளும் நடைபெற்றுவருகின்றன.

சொல் பிரித்தல்

'பேஜ்மேக்கர்' போன்ற டிடிபி மென்பொருள்களில் நூல்களைப் பதிப்பிடும்போது, பக்க வடிவமைப்பு மேற்கொள்ளும்போது, வலப்பக்க ஓரங்களில் சொற்களைப் பிரிக்க வேண்டிய கட்டாயம் நேரும். நாமாக வலிந்து பிரித்தால், வடிவமைப்பு மாறும்போது சொல்லின் இடையில் இடவெளிகள் உருவாகும். இதனைத் தவிர்ப்பதற்கான செயல்நுட்பமே 'ஹைஃபனேஷன்' எனப்படுவது. டிடிபி மென்பொருள்களில் ஆங்கில மொழிக்கு இவ்வசதி முன்னியல்பாக அமைந்துள்ளது. தமிழ் மொழிக்கு ஹைஃபனேஷன் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன ★

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிவஞானம்

(பிரதம எழுதுநர், காரைநகர் பிரதேச சபை, தலைவர், கரைநகர் ப.நோ.கூ.சங்கம்)



காரைநகர், விளானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சு.சிவஞானம் நேற்று (16.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் (ஆசிரியர்) மற்றும் பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் கபிலன், நிசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகலிங்கத்தின் (அமெரிக்கா) அன்புச் சகோதரரும் உமாதேவி, அம்பிகைபாகன், காலஞ்சென்ற வைத்தியநாதன் மற்றும் பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற குகதாஸன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2010) திங்கட்கிழமை மு.ப. 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் தில்லை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளானை, களபூமி, காரைநகர்.* (93962) தகவல்: மனைவி, பிள்ளைகள்.



எமது மைந்தன்
யுவீந்திரா ஹரிபிரணவனின்
நினைவில் நீங்கா
ஓராண்டில்

தோற்றம்: 06.08.1987
மறைவு: 17.01.2009

வாயில் கடந்து எப்படி நீ போனாய்
தாயின் வயிறு எரிவது
தான் தெரியாதோ
பாயிற் படுத்தும் உறக்கம் தீண்டவில்லை
கோயிலெங்கள் மனமுனக்கு
குடியிருப்பாய் என்றும் நீ

உன் நினைவுகளோடு நாள்தோறும் வாழும்
அம்மா, அப்பா,
அப்பம்மா,

துவாரகை,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். சீக்கோ...

(93943)

## மரண அறிவித்தல்கள்

### அருள்மொழிராணி (சுகுணா) தர்மரத்தினம்



கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கட்டியை வசிப்பிடமாகவும் வாசீமா வீதி அளவெட்டி வடக்கு, அளவெட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருள்மொழிராணி (சுகுணா) நேற்று (16.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தர்மரத்தினத்தின் (ரோசர்) அன்பு மனைவியும், நடராசா தண்டிகை - யாழ் மொழி நாயகி தம்பதியினரின் பாசமிகு சிரேஷ்ட புத்திரியும், தம்பு- சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், கஜனி, மயூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்கந்தராசா (இளைப்பாறிய தொடர்பாடல் அதிகாரி, இரத்மலானை விமான நிலையம்), வேல்ராசா (இளைப்பாறிய பிரதம சிறாப்பர்), நளினா, விசாகப்பெருமாள் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அளவெட்டியில் அவரது இல்லதில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாசீமா வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.* (சி/564174) தகவல்: த. தர்மரத்தினம் (கணவர்).

### முருகேசு சபாரட்ணம்

காரைநகர், களபூமி, குண்டங்கரையைப் பிறப்பிடமாகவும் காரைநகர், விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சபாரட்ணம் நேற்று (16.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - காசுவதிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சற்குணராசாவின் (லண்டன்) பாசமிகு தகப்பனாரும் சற்குணராசா - சசிகலாவின் (லண்டன்) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பாலசிங்கம் (அரச ஒப்பந்தகாரர்), காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கந்தையா (உபதபால் அதிபர்), அபிராமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகசபை - இரத்தினபூபதியின் மாமனாரும் கவிசாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தில்லை மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளானை, காரைநகர்.* (93961) தகவல்: ச.சற்குணராசா (மகன் - லண்டன்).

### பசுபதி பாக்கியம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி பாக்கியம் நேற்று (16.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னர்- செல்லம்மா தம்பதிகளின் மருமகளும், பசுபதியின் அன்பு மனைவியும், சின்னத்தங்கச்சி, நடராசா, அன்னம்மா, நடேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிட்டினர், இன்பராணி, கந்தையா, செல்லையா, நடேசு ஆகியோரின் மைத்துனியும், கந்தசாமி, புஸ்பமலர் (ராசு), பாலா, கிளி, ராணி, சூட்டி, குஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பலீலா, முருகையா, சித்திரா, ரதி, பாண்டி, வசந்தன், மலர் ஆகியோரின் அன்பு மாமியாரும்,நிஷா, கஜா, துசான், துசானி, ஜெனி, சாலி, முரளி, வித்தியாதரன், தீபா, பிறிந்தன், சுகித்தா, சுஜீபன், தர்மிலா, துலா, சிந்து, ஜெனு, அனுஷன், தனுசன், அனுசியா, அபர்ணா, அஜிந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பலாலி வீதி, மடத்தடி, உரும்பிராய். 021 222 3849* (93952) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# குடாநாட்டில் டெங்குப் பேராபத்து

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது. நிமிடத்துக்கு நிமிடம் அது பரவும் வேகம் அதிகரித்துச் செல்கிறது. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம், கடந்த டிசெம்பர் மாதத்தில் 308 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். அவர்களில் ஐந்து பேர் மரணமானார்கள். கடந்த பதினைந்து நாள்களில், இணங்காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையோ 350. அதேபோன்று உயிரிழந்தோர் எண்ணிக்கையும் ஒன்பதாகி உள்ளது. மொத்தத்தில் ஒன்றரை மாதத்தில் 15 பேரின் உயிர்களை காவு கொண்டிருக்கிறது டெங்கு.மேலும், மொத்தம் 2,000 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு ஆளாகி உள்ளனர். இந்தப் புள்ளிவிவரங்கள் குடாநாட்டு மக்களைப் பயமுறுத்தும் பயங்கர நோயாக டெங்கு அசுர வேகத்தில் பரவி வருவதை, குடாநாடு எதிர்கொள்ளும் பேராபத்தை எடுத்துச்சொல்கின்றன.

ஏற்கனவே டெங்கு நோய் வேகமாகப் பரவி வந்த சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகப் பிரிவுகளில் அதன் பரம்பல் குறைந்து வர-

யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில் பிரதேச செயலகப் பிரிவுகளில் வேகமாகப்பரவி வருகிறது என்ற தகவலையும் சுகாதார சேவைப் பணிப்பாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் தகவல் எதனைத் தொட்டுக் காட்டுகிறது? நோய்ப் பரம்பல் குறைந்துள்ள பகுதிகளில் மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வும் அதன் விளைவான செயற்பாடுகளும் நோய்த் தாக்கத்தைக் குறைத்துள்ளன.

நோய் அதிகரித்துவரும் பகுதிகளில் டெங்குவின் ஆபத்து உணரப்பட்டவில்லை- அது குறித்த விழிப்புணர்வு வேண்டிய அளவுக்கு மக்களிடம் உண்டாகவில்லை. டெங்கு தடுப்பில் தமக்கும் பங்குண்டு என்ற மனஉணர்வு குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழும் ஒவ்வொரு பிரஜையிடமும் பிறக்கவில்லை; தடுப்பு நடவடிக்கையில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை என்பது வெளிச்சமாகிறது.

டெங்கு உயிர்க்கொல்லி நோய். நுளம்புப் பெருக்கத்தினால் உண்டாகும் அதனை ஒவ்வொரு தனி மனிதனும் தடுக்கச் உணர்வுபூர்வமாக செயலளவில் ஈடுபட்டால் மட்டுமே தடுக்க முடியும்.

இது தொடர்பில் சமூக மன்றங்கள்,தொண்டர் கழகங்கள் போன்ற மக்கள் சேவை இயக்கங்கள் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டியதும் மிகவும் இன்றியமையாததாகும்.

கூட்டு முயற்சியும், வேகமும் இது விடயத்தில் ஒன்றிக்க வேண்டும். அப்போது மட்டுமே டெங்கு அபா யத்தை விரட்ட முடியும்.

வைத்திய வட்டாரங்கள் தரும் தகவல்களின் பிரகாரம், டெங்கு நோய்ச் சிகிச்சைக்கென நாளாந்தம் சுமார் நூறு பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகின்றனர்.

மக்களின் அசண்டையால், இந்த நோயை 'சீரியஸாக' எடுக்காமையால், காய்ச்சலின் ஆரம்ப நாள்களில் சிகிச்சைகளை நாடாமல், அது முற்றிய பின்னரே ஆஸ்பத்திரியயை, டாக்டரை நாடுகின்ற ஒவ்வாத - ஆபத்து விளைவிக்கும்-போக்குக் காணப்படுகிறது. காய்ச்சல் முற்றிய பின்பு சிகிச்சையை நாடுவதால் உயிரிழப்புகள் அதிகரிக்கக் காரணமாகின்றது.

காய்ச்சல் அது எந்த வகையினதாக இருந்தாலும், உடனடியாக ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்குச் செல்ல வேண்டும். ஆனால் நோயாளர்களில் பலரும் காய்ச்சல் வந்ததும் தாமாக - சொந்த வைத்தியம் செய்து - 'பனடோல்' உட்டுகொண்டுவிட்டு, அது முற்றிய பின்னரே ஆஸ்பத்திரியை நாடுகிறார்கள்.

இது தவிர்க்கப்பட வேண்டும் என்று வைத்தியர்கள் அறிவுறுத்துகிறார்கள். கொடிய, உயிராபத்து விளைவிக்கும் தொற்று நோய் வேகமாகப்பரவி வரும் இவ்வேளையில், மக்கள் சிறுபிள்ளைத்தனமாகச் 'சொந்த வைத்தியம்' செய்வது பல உயிர்களைக் காவு கொள்ளக் காலாகும்.

டெங்குவின் தாக்கம் மிகவும் ஆபத்தானது என்பதை உணர்ந்து ஒவ்வொரு மனிதனும் சமூக மட்டத்திலும் வருமுன் காத்து உயிரிழப்புகளை தவிர்க்க மனங்கொள்வது இன்றைய உடனடித்தேவை . உயிர் அழிவுகளைத் தடுக்க மருந்தைப் போன்று மக்களிடம் முன் எச்சரிக்கைத் தன்மையும் விழிப்புணர்வும் அவசியம்.இதனைக் கருத்தில் கொள்ள மக்கள் பின்னின்றால் அவச் சாவுகள் மலியும்.

ஆகவே டெங்கு ஆபத்தைத் தடுக்க வயது, பால், பிரதேச வேறுபா டின்றி எல்லோரும் மனதில் இருத்தி புரிந்துணர்வுடன் புத்திசாலித்தனமாக செயற்படுவோமாக.

# கிளிநொச்சி சென்றுமக்களுடன் கலந்துரையாடினார் சங்கரி

யாழ்ப்பாணம்,ஜன.17

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் கிளிநொச்சித் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி நேற்று கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்து மீளக்குடியேறிய மக்களுடன் கலந்துரையாடினார்.

பூநகரி, பள்ளிக்குடா, வலைப்பாடு, கடுக்காய்த்தீவு போன்ற பகுதிகளுக்கு சென்ற அவர் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்களுடைய அவசியத் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

பல வருடகால இடைவெளியின் பின்னர் தனது முன்னைய தொகுதி மக்களைச் சந்தித்த போது அங்குள்ள முதியவர்கள் அவருடன் அன்னியோன்னியமாக கலந்துரையாடினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேறிய மக்களின் தேவைகள் தற்போதைய நிலைமை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஆனந்தசங்கரி அந்த மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

(ஒ - 86)

# தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான ஆங்கில பாடநெறிக்கான பரீட்சை

## அனுமதி அட்டைகள் இன்றும் பெறலாம்

யாழ்ப்பாணம்,ஜன.17

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான ஆங்கிலபாட நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற் கான பரீட்சை இன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் இன்று காலை 9 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் என்று பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத மாணவர் விவரம் வருமாறு

ப.சுமிதா, சி.துஸாந்தி, த.கிறிஸோ, தெ.சிவாம்பிகை, த.ஜீவிதா, செள. சங்கீதா, மு. துஸ்யந்தி, ஜெ.நிராசா, மு. துசீலன், த.தர்சிகன்.

இதேவேளை அனுமதி அட்டை கிடைக்காத ஏனைய மாணவர்கள் காலை 9 மணிக்கு பரீட்சை நிலையத்திற்குச் சென்று தமது பெயர்கள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தி பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ-6)

# கைதடி மாணவர் இன்று கௌரவிப்பு

கைதடி , ஜன, 17

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கல்வி அபிவிருத்தி விழாவும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக கல்விக்குத் தெரிவானோர், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.(ஒ - 288)

# யாழ்.குடாக்கடல் நீரேரி ஊடாகவும் 'பாஸ்' இன்றி கடற்றொழிலுக்கு செல்லலாம்

## ஏற்கனவே இருந்த கட்டுப்பாடுகளும் நீக்கம்

வண்ணை,ஜன.17

யாழ்.குடாக்கடல் நீரேரி ஊடாகக் கடற்றொழிலுக்குச் செல்வதற்கும் படையினர் 'பாஸ்' நடைமுறையை நீக்கியுள்ளதாகக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நடைமுறை கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறிப்பிட்ட நேரங்களில் சென்று தொழிலைச் செய்து திரும்ப வேண்டும் என்றும் கட்டுப்பாடும் முற்றாக நீக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனால் மீனவர்கள் எந்த நேரமாயினும் சரி கடலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபடக் கூடியதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-160)

# மக்கள் பணிமனையில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களின் பணிமனையினரால் யாழ். முஸ்லிம் பிரதேசத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பற்றியும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் மற்றும் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள மக்கள் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை உறுப்பினரும் மக்கள் பணிமனைத் தலைவருமான பி.எ.எஸ்.சுபியான் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் அனைவரையும் பங்குபற்றி கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு மக்கள் பணிமனைச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-16)

# கருத்தரங்கு

கைதடி , ஜன, 17

கைதடிப்பிரதேசத்ததில் லயன்ஸ் கழகம் ஒன்றை அமைப்பது தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தில் நடைபெறவிருப்ப தாக சாவச்சேரி லயன்ஸ் கழக தலைவர் லயன் ப.செல்லத்துரை தெரி வித்தார். (ஒ - 288)

# நாளை

| | | |
|---|---|---|
| தை | 5 | 18.01.2010 |
| | | திங்கட்கிழமை |
| திதி: | | திருதியை |
| | | மு.இ. 07.011 வரை |
| நட்சத்திரம்: | | அவிட்டம் |
| | | ந.ப. 12.01 வரை |
| [illegible] | | [illegible] வரை |
| [illegible] | | 08.25-09.55 வரை |

# கோணேஸ்வரத்தின் புதிய பரிபாலன சபை இன்று பொறுப்பேற்பு

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகத்திற்கென தெரிவு செய்யப்பட்ட புதிய பரிபாலன சபை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.35 - 11.05 மணிவரையான சுபவேளையில் பொறுப்பேற்கவுள்ளது.

குறித்த சுபவேளையில் விசேட பூசையோடு பொங்கலுக்கும் நிர்வாகம் ஒழுங்கு செய்துள்ளது.

இன்றைய விசேட பூஜையை பத்திரகாளி அம்மன் ஆலயஆதீனகர்த்த பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக்குருக்கள் நடத்தி வைத்து ஆசீர்வதிப்பார்.

# மிருசுவில் நூலகம் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம் , ஜன, 17

மிருசுவில் உசன் சந்தியில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொதுநூலகம் புதுப் பொலிவுடன் தனது சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

2000 ஆம் ஆண்டு இடம்பெயவுடன் மூடப்பட்ட பொது நூலகம், அதி உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளதால் உசன் மற்றும் [illegible] சந்தி ஆகிய இடங்களில் இதுவரை காலமும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் விதாரண கைதடிக்கு திடீர் விஜயம்

கைதடி , ஜன, 17

கைதடிப் பிரதேசத்திற்கு விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் கலாநிதி திஸ்ஸ விதாரண நேற்று தீடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் ந.தமிழழகன் மற்றும் சகாக்களுடன் அங்கு வந்த அமைச்சர் முதலில் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்திற்குச் சென்று புதிதாக புனரமைக்கப்பட்டு வருகின்ற நிலையக் கட்டடத்தைப் பார்வையிட்டதுடன் அங்குள்ள வீதிகளையும் பார்வையிட்டார்.

பின்னர் கைதடி இராஜபுரிக்கிராமம் மற்றும் கள்ளிநகர் ஆகிய பகுதிகளுக்கும் சென்று மக்களின் குறை நிறைகளைக் கேட்டுஅறிந்து கொண்டார். (ஒ - 16, 288)

# சோளம் சாப்பிட்ட மூவர் மயங்கிய நிலையில் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜன, 17

சோளத்திற்குள் ஒரு வகை மஞ்சள் நிறத் திரவத்தை கலந்து வறுத்துச் சாப்பிட்ட மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சுழிபுரம் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் த. சுபாகரன் (வயது - 26), த. ராஜலக்சுமி (வயது-59), என் .ரவிக்குமார் (வயது - 43) ஆகியோரே சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதானா வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-201-78)

# நீர் இறைக்கும் இயந்திரங்கள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம் , ஜன, 17

மீளக்குடியேறிய விவசாயிகளுக்கும், 'ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர்திட்டத்தின்' கீழ்த்தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கும் நீரிறைக்கும் இயந்திரம் , பழக்கூடை என்பன வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்கராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார் .

இந்நநிகழ்வில் மீளக்குடியமர்த்தப்பட்ட 30 விவசாயிகள் அடங்கிய மற்றொரு தொகுதியினருக்கு விவசாய நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு உதவும் நோக்குடன் 30 நீரிறைக்கும் இயந்திரங்களும் ஒரு கிராமத்துக்கு ஒரு பயிர் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 53 விவசாயிகளுக்கு 53 நீர் இறைக்கும் இயந்திரங்களும் ஐம்பது வீத மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட திராட்சை செய்கையாளர்களுக்கு தலா இரண்டு பழக் கூடைகள் வழங்கப்படவுள்ளன.

(ஒ-16)

# டெங்கு சிரமதானம்

யாழ்ப்பாணம் , ஜன, 17

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி மாணவர்களும் சிவசக்தி வைத்திய நிலையமும், அரியாலை கிழக்கு, நாவலடி மாதர் சங்கமும் இணைந்து நடத்திய டெங்கு பற்றிய விழிப்புணர்வும், சிரமதானப் பணியும் அண்மையில் நடைபெற்றன.

இவர்கள் அத்தியடி, நல்லூர், அரியாலை, கொழும்புத்துறை போன்ற இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஒ-204)

# உதவி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் , ஜன, 17

யாழ்.மாவட்ட உதவி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று மு.ப. 9 மணிக்கு ஆரியகுளம் சந்தயில் உள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து உதவி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பின் வாக்குகளுக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கிறார் ஜெனரல்

## ஜாதிக ஹெல உறுமய ஆலோசகர் கருத்து

கொழும்பு, ஜன. 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 லட்சம் வாக்குகளுக்காக ஜெனரல் சரத் பொன்சேகா நாட்டைக் காட்டிக்கொடுத் திருக்கிறார் - என்று ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும், மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பல தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்களத் தலைவரைத் தெரிவுசெய்யும் ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை தமிழர்கள் எதனையும் செய்யக் கூடாது என முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது. எனினும், அவர்கள் இப்பொழுது ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு நிபந்தனையுடன் ஆதரவு வழங்குகின்றனர். ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாய்நாடே பிரதானம் என்ற நிலைப்பாட்டில் தமது பணியை முன்னெடுத்துச் செல்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த நிபந்தனைகளை ஜனாதிபதி முற்றாகவே நிராகரித்திருக்கிறார்.

எனினும், இந்த நிபந்தனைகளை ஜெனரல் பொன்சேகா ஏற்றுக்கொண்டுள்ளார். ஜே.வி.பியினரின் அரசியல் குறித்து இப்பொழுது கேள்வியெழுந்துள்ளது. விடுதலைப் புலிகள் எங்கு ஆயுதங்களை வைத்திருக்கின்றனர் என்பதை யார் அறிவர். சிறைவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளை விடுவித்தால் அவர்கள் அந்த ஆயுதங்களைக் கையில் எடுப்பர். இருளில் இருந்து வெளிச்சத்தை நோக்கிச் செல்லும் நாட்டை சரத் பொன்சேகா மீண்டும் இருளில் தள்ள முயற்சிக்கிறார்.

சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால் சர்வதேச நாடுகளிலுள்ள விடுதலைப் புலிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அவர்களின் வளங்களைப் பயன்படுத்தி சரத் பொன்சேகா தேர்தலில் போட்டியிடுகிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்கு வங்கி இல்லை. நாட்டைக் காட்டிக்கொடுக்கும் நிபந்தனைகளே அவர்களிடம் இருக்கின்றன - என்றார்.

# ஆஸி. விசாக் கிடைக்காத ஐவரும் இலங்கை வரலாம்

## தூதுவர் ரமேஷ் ஜெயதிலக தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 17

ஆஸ்திரேலியாவில் விசாக் கிடைக்காத 5 இலங்கையர்களும், அச்சமின்றி நாடு திரும்பலாம் என்று ஆஸ்திரேலியாவிற்கான இலங்கைத் தூதுவர் ரமேஷ் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

'த ஆஸ்திரேலியன்' சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

'ஓசியானிக் வைக்கிங்' கப்பலிலிருந்து இறங்கிய நிலையில் இந்தோனேஷியா தடுப்பு முகாமில் இருந்த இலங்கை அகதிகளுக்குப் படிப்படியாக அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு வந்த நிலையில், குறித்த ஐந்து பேரும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் எனக் கருதப்பட்டு, ஆஸ்திரேலியா அவர்களுக்கு விசா வழங்க மறுப்புத் தெரிவித்திருக்கிறது. இந்நிலையிலேயே குறிப்பிட்ட ஐவரும் பாதுகாப்பாக இலங்கை திரும்பலாம் எனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக அரசு செயற்படுகின்ற காரணத்தினால் நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் ஆஸ்திரேலியாவுக்கு அகதிகளாக வருகின்றனர் என சட்டத்தரணி ஒருவர் குற்றம் சுமத்தியிருந்தார். எனினும் இதனை தூதுவர் ரமேஷ் ஜெயதிலக நிராகரித்தார்.

ஏற்கனவே 'ஓசியானிக் வைக்கிங்' கப்பலில் இருந்த 78 பேரில் பலருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு, குடியேற்றத்துக்காகப் பிற நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# வியாழக்கிழமை வரை 473 தேர்தல் வன்முறைகள்

கொழும்பு, ஜன. 17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வன்முறை சம்பவங்களில் அதிகமானவை, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிராகக் கிடைத்துள் ளன என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது.

அரச கட்சிக்கு எதிராக இதுவரையில் 249 முறைபாடுகள் பதிவு செய்யப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் அரசுக்குச் சார்பாகச் செயற்படு கின்ற தேசிய சுதந்திர முன்னணிக்கு எதி ராக 5 முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் கூறப்படுகிறது.

மேற்படி நிலையத்தின் அறிக்கையின்படி வியாழக்கிழமை மாலை வரையில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான 473 வன்முறை சம்பவங்கள் பதிவாகியிருக் கின்றன. அவற்றில் பாரிய 208 சம்பவங் களும், 265 சிறிய சம்பவங்களும், 62 துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

பாரிய தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், பல கொலை முயற்சிகளும், கடும் காயங்களுக்குள்ளான தாக்குதல்கள் மற்றும் தீ வைப்புச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த நிலையில் மொத்தமாக பதிவாகியுள்ள தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் பாதியளவை அரசே மேற்கொண்டுள்ளது என அறியமுடிகிறது.

இந்த அறிக்கையின்படி ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக 24 முறைபாடுகள் பதிவாகியுள்ளதுடன், ஜே வி.பிக்கு எதிராக 10 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அத்துடன் 181 வன்முறை சம்பவங்கள் இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றபோதும், அவற்றில் பெரும்பாலான வன்முறை சம்பவங்களில் எதிர்கட்சி ஆதரவாளர்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்களே ஆகும்.

இதேவேளை அதிக தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற மாவட்டமாக மாத்தறை மாவட்டம் காணப்படுகிறது.

## மதுரங்குளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவின மக்களும் வசிக்கின்ற மதுரங்குளி நகரில் சனிக்கிழமை மாலை நடைபெறவிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கும் கூட்டத்துக்கு முன்பாகவே இந்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

காயமடைந்தவர்களில் மூவர் புத்தளம் வைத்தியசாலையிலும் இருவர் குருணாகல் தேசிய வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த வன்முறைகளின் தொடர்ச்சியாக குறித்த பகுதியை சேந்த ஐக்கிய தேசியக் கட்சி பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் வீடும் வர்த்தக நிலையமும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மாத்தறையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் பத்துப் பேர் காயமடைந்துள்ளனர். என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று நடைபெற்ற இச் சம்பவங்களுடன் நாடுமுழுவதும் 600 க்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் பதிவாகியுள்ளன என்று சுயேச்சையான தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் தெரிவித்தன. (அ-6)

## புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை செய்யப்பட்டவர்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் துப்பாக்கிகளுடன் தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் ஆயுதங்களை கொண்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதால் முழுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும் முடக்கியிருக்கின்றன எனவும் 'கபே' அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரச் செயற்பாடுகளைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் தேர்தல் சட்டங்களை மீறி வருகின்றனர் எனவும் கீர்த்தி தென்னகோன் மேலும் கூறினார். (அ-சி)

## எந்தவிதமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு எவருக்கும் பொலிஸார் அனுமதி வழங்கவில்லை. பொலிஸாரின் பெயரைக் கூறி பணம் வசூலிப்பில் ஈடுபடுப வர்கள் உண்மையில் மோசடிக்காரர்கள் தான்.

எனவே இத்தகைய மோசடிப் பெயர் வழிகள் குறித்து பொது மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். இனிமேல் இவ்வாறு பணம் வசூலிப்பவர்கள் குறித்து தகவல் தெரிந்தால் உடனடியாக 0212222222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கலாம். தகவல் கிடைத்தவுடன் பொலிஸார் விரைந்து வந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார். (ஒ-4)

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம், இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த சேகர் தத்தும் மாநிலம் ஒன்றின் ஆளுநராக நியமிக்கப்படுகின்றார் என்றும் கூறப்பட்டது.

எம்.கே.நாராயணனின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு முன்னாள் வெளிவிவகார செயலாளர்களான சியாம் சரண், சிவ்சங்கர் மேனன் ஆகிய இருவரில் ஒருவரே பெரும்பாலும் நியமிக்கப்படுவர் என்று கூறப்படுகிறது.

கடந்த 2008 நவம்பர் 26 ஆம் திகதி மும்பாய் மீது நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல்களை அடுத், அச்சமயம் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே. நாராயணன் தமது பதவியை துறக்க முன்வந்தார்.

எனினும் அச்சமயம் உள்துறை அமைச்சராக இருந்த சிவராஜ் பட்டீலின் இராஜினாமா மட்டுமே அப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனையடுத்து புதிய உள்துறை அமைச்சராக ப.சிதம்பரம் நியமிக்கப்பட்டார்.

இப்போது உள்துறை தொடர்பான சகல கட்டமைப்புகளையும் புதிய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கையாளத்தக்க விதத்திலான ஏற்பாடுகளையும் ஒழுங்குகளையும் பிரதமர் மன்மோகன் சிங் அரசு செய்து வருகிறது என்று கூறப்படுகிறது.

அதன் ஒரு கட்டமாகவே தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து எம்.கே. நாரயணனை தூக்கி விட்டு அந்த இடத்துக்கு அமைச்சர் சிதம்பரத்துக்கு இணக்கமான ஒருவரை நியமிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறியவந்தது.

நாராயணனை மேற்படி பதவியிலிருந்து நீக்குவதற்கான முடிவை மத்திய அரசுத் தலைமை ஏற்கனவே எடுத்திருந்த போதும், அதற்குப் பொருத்தமான சந்தர்ப் பத்துக்கு காத்திருந்தது என்றும் -

இப்போது பல்வேறு மாநிலங்களுக்கும் புதிய ஆளுநர்களை நியமிக்கும் சந்தடி சாக்கில், அவரை மேற்குவங்காள ஆளு நராக நியமித்து அதன் மூலம் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து அவர் தூக்கப்படுவதை ஆராவாரமின்றி ஒப்பேற்ற வியூகம் வகுக்கப்பட்டது என்றும் - கூறப்பட்டது.

கடந்த வியாழனும் வெள்ளியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நான்கு எம்.பிக்கள் குழு புதுடில்லியின் தங்கியிருந்து இந்திய மத்திய அரசின் உயர்மட்டங்களுடன் பேச்சு நடத்திய சமயம், பிரதமரின் தேசிய பாதுக்காப்பு ஆலோசகரையும் அவர்கள் சந்திக்கின்றமை அவர்களுக்கான நிகழ்ச்சி நிரலில் அடங்கியிருந்தது என்றும் -

எனினும் அச்சமயம் அப்பதவியிலிருந்த நாராயணன் ஓரிரு தினங்களில் அப்பதவியிலிருந்து தூக்கப்படும் நிலைமை இருந்ததன் காரணமாக, அவருடனான கூட்டமைப்பினரின் சந்திப்புரத்துச் செய்யப்பட்டது என்றும் - புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன்.

எட்டு மாநிலங்களுக்குமான புதிய ஆளுநர் பட்டியலை இந்திய மத்திய அரசு இன்னும் ஓரிரு தினங்களில் உத்தியோகபூர்வமாக வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### புதிய ஆளுநர்கள்

உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து முன்னர் இராஜினாமாச் செய்த சிவராஜ் பட்டீல் - பஞ்சாப், எம்.கே.நாராயணன் - மேற்கு வங்காளம், தற்சமயம் சட்டீஸ்கா ஆளுநராக இருக்கும் ஈ.எஸ்.எல். நரசிம்மன் - ஆந்திரா, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மோசினா கிப் வாய் - ஜார்க்கண்ட், பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த சேகர் தத் - சட்டீஸ்கா, முன்னாள் மத்திய அமைச்சர் ஊர்மிளா பென் பட்டேல் - இமாஷல் பிரதேசம் தற்போதைய ஜார்க்கண்ட ஆளுநரான கே.சங்கர நாரயணன் - மகாராஷ்ட, தற்போது இமாச்சல் பிரதேச ஆளுநர் பிரபாராவ் - ராஜஸ்தான் மாநில ஆளுநராக நியமிக்கப்படுகின்றனர். (அ-சி)

ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய்
ஆங்கிலம், சிங்கள விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.
ஆங்கிலம்: BRITTO
திங்கள், வியாழன் - பி.ப. 3.30 - 4.30
சிங்களம்: சிவராசா
திங்கள், புதன் - பி.ப. 5 மணி
O/L எடுத்த மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழில் புரிபவர்களுக்கான விசேட வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மேலதிக விவரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
நிர்வாகி.

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
ஆரம்பமாகிவிட்டது
(Mon, Fri)
TAM - [illegible] 9 - 10
HIC - திரு.N.T.[illegible] 8 - 9
CHI - [illegible] 8 - 9
LOG - திரு.R.S.[illegible] 10 - 11
GEO - [illegible] 10 - 11
HIST - திரு.S.S.[illegible] 11 - 12
PLSC - [illegible] 7 - 8
ECO - திரு.N.B.[illegible] 2 - 3
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

34 ஆவது ஆண்டு கல்விச் சேவை
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
O/L DAY CLASS Mon, Fri. (8.30 - 2)
ஆரம்பமாகிவிட்டது
* வன்னி மாணவர்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களுக்குமான விசேட பிரிவு
* கடந்த ஆண்டு போல் இம்முறையும் பிரிவு 6 மட்டுமே.
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
விடுதி வசதி செய்து தரப்படும்.
[illegible]

தவறிவிட்டது
கந்தசாமி சஜந்தன் தூதாவளை, கரணவாய், கரவெட்டி. மேற்குறிப்பிட்ட விலாசத்தை உடைய எனது தேசிய அடையாள அட்டை இல. 882332080V, சாரதி அடையாள அட்டை மற்றும் வங்கி அட்டைகள் அடங்கிய மணிபர்ஸ் நெல்லியடி பெற்றோல் நிலையத்திற்கும் விக்னேஸ்வரா வீதி, கிராய்பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட முகவரிக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
T.P.: 0779518253, 0778729049 OR
மொடோன் புத்தகசாலை, நெல்லியடி.

பதவி வெற்றிடம்
1. சந்தைப்படுத்தல் முகாமையாளர்
MARKETING MANAGER
எமது நிறுவனத்திற்கு உடனடியாக மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
2. தொழில் நுட்பவியலாளர்கள்
TECHNICIANS
தகுதி வாய்ந்தவர்கள் நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கலாம்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
NALIN
Information Technologies Pvt Ltd
கணனி திருத்தம், பராமரிப்பு சேவைகள் உங்களது இல்லங்கள், அலுவலகங்களுக்கு நேரில் வந்து உத்தரவாதத்துடன் செய்துதரப்படும்.
37,750 ரூபாவில் இருந்து புத்தம் புதிய கணனிகள் 3வருட உத்தரவாதத்துடன்
NALIN Information Technologies Pvt Ltd
195/4 PARAMESWARA JUNCTION TP: 0212221166, 0777667974 email: nitpvt@nalininfotech.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் காய்நகர்த்தல் எதை இலக்கு வைத்து....?

- கொக்கூரான் -

சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இது சிறிலங்காவின் தேர்தல்தான். யார் ஆட்சிக்கு வந்தாலென்ன, அவர்களுடன் தமது அரசுகள் தொடர்ந்து இணைந்து செயற்படும் என அறிவித்துவிட்டு தேர்தல் முடியும்வரை காத்திருக்க சர்வதேச நாடுகள் தயாரில்லை. சிறிலங்காவின் தேர்தல் தற்போது சர்வதேச சக்திகளின் கைகளுக்கும் சென்றுவிட்டதை தெளிவாகக் காணமுடிகின்றது.



இத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ அல்லது சரத் பொன்சேகாதான் ஆட்சிக்கு வருவார் என்பது வெளிப் படையானது. இவ்வாறான பின்புலத்தில், இத்தேர்தலில் சர்வதேச நாடுகளின் வகிபாகம் என்னவாக இருக்கப்போகின்றது? குறிப்பாக இந்தியாவின் பங்கு என்ன? - என்பன தொடர்பில் ஆராய்கிறது இப்பத்தி.

இன்றைய உலகில், ஒரு நாட்டில் இடம்பெறும் அரசியல் மாற்றங்கள், மற்றைய நாடுகளை ஏதோ விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அத்தாக்கங்கள் தங்களுக்கு சாதகமாக இருக்கவேண்டும் என்பதே ஒவ்வொரு நாட்டின் எதிர்பார்ப்பும். அந்தவகையில் சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற வேண்டுமா? அல்லது சரத்பொன்சேகா வெற்றி பெறவேண்டுமா? என்பதில் ஒவ்வொரு நாடுகளுக்குமே விருப்பு வெறுப்புக்கள் இருக்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை சரத் பொன்சேகாவின் தெரிவு என்பது தலையிடியானதாகவே இருக்கும் என மஹிந்தவின் ஆலோசகரும் முன்னாள் இராஜதந்திரியுமான றசீக் சறூக் கடந்த சில நாட்களுக்கு முன்னர் றெடிவ் இணைய சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார். ஒரு முன்னாள் இராணுவ அதிகாரியானவர் ஒரு நாட்டின் அரச தலைவராக தெரிவு செய்யப்படுதல் இராணுவ ஆட்சி முறையொன்றை கொண்டுவரவே வழிவகுக்கும் என கூறுகிறார். அதற்கு என அவர் பங்களாதேசம், பாகிஸ்தான், பர்மா போன்ற நாடுகளை உதாரணமாகக் காட்டுகிறார்.



அவரது எதிர்வுகூறல்கள் சரியானவையாகக் கூட இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களை பொறுத்தவரை, சிங்கள ஆட்சியாளர்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையில் எந்தவித வேறுபாடுகளையும் அவர் கண்டதில்லை. சிறிலங்காவின் அதிகார வர்க்கங்கள் எப்போதுமே தமிழினத்தின் அழிப்பில் அல்லது அதன் உயிர்ப்பை சிதைப்பதில் தான் கவனம் எடுத்துக் கொண்டன. எனவே தமிழர்களை பொறுத்தவரை 1983 ஆம் ஆண்டு தொடக்கம் சிறிலங்காவில் இராணுவ ஆட்சிதான் நடந்து வருகின்றது.

இந்தியாவுக்கு இன்னுமொரு அச்சமும் உண்டென குறித்த இராஜதந்திரி சுட்டிக்காட்டுகிறார். இந்தியாவின் வடக்கே பாகிஸ்தானும் கிழக்கே சீனாவும் இந்தியாவுக்கு எப்போதுமே அச்சுறுத்தலாக இருக்கின்றனவாம். அதனால் தெற்குப்பகுதியை தமக்குச் சாதகமாக வைத்திருக்க வேண்டியது முக்கியமானதாம். சரத் பொன்சேகா வந்தால் அவர் தெற்குப்பகுதியை முன்னையவர்களுக்குத் திறந்துவிடுவாராம். அதனால் தமது தெற்குக்கோடிக்கு பாதிப்பு வந்துவிடுமாம்.

இதே கதையைக் கேட்டுத்தானே ஏராளமான ஆயுதங்களை, இந்தியா சிறிலங்கா இராணுவத்திற்கு அள்ளிக் கொடுத்தது. நாங்கள் கொடுக்கா விட்டால், மஹிந்த சீனாவிடம் போய்விடுவார் என்றுதானே அத்தனை தமிழர்கள் கொல்லப்படும் போதும் பார்த்துக் கொண்டிருந்தது இந்தியா? இப்போதுமட்டும் எப்படி மஹிந்த ராஜபக்ஷ நல்லவர் ஆனார்?

இதேவேளையில் இன்னொரு இராஜதந்திரியான லலித் வீரதுங்கவின் கருத்துக்களை பார்க்கலாம். அவரும் மஹிந்தவுக்கு செயலாளராக இருக்கிறார். அவரின் கருத்துப்படி, இந்தியாவில் அண்மையில் தேர்தல் நடைபெற்றபோது, இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில், காங்கிரஸை வெற்றி பெறச் செய்ததே மஹிந்த ராஜபக்ஷ தான் என கூறியுள்ளார்.

தமிழர்கள்அழிந்து கொண்டிருக்கும்போது அந்த உணர்வலைகள் காங்கிரஸுக்கு எதிராக திரும்பகூடியக் சூழல் இருந்ததாகவும், அதனால் மஹிந்தவும் இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனும் இணைந்து ஆலோசித்து போட்ட திட்டமே கனரக ஆயுதங்களை பயன் படுத்துவதில்லை என்ற அறிவிப் பாகும் எனவும் கூறப்பட்டுள்ளது. வெறும் பேச்சளவில்விடப்பட்ட அறிவிப்பை இந்திய அரசு தனக்கேற்றவகையில் பயன் படுத்தியிருந்தது. அதனால் தப்பிப்பிழைத்துக்கொண்டது.

இப்போது தமிழர்கள் விழிப்பாக இருக்கவேண்டிய வேளை இது. மஹிந்த ராஜபக்ஷதான் ஆட்சிக்கு வரவேண்டுமென்பதில் இந்தியா பல்வேறு காய்களை நகர்த்துகின்றது. அதற்கான காரணங்கள் அனைத்தும் இந்திய நலன்கள் சார்ந்த சிந்தனையே அன்றி தமிழர்களின் நலன்கள் சார்ந்த சிந்தனை அல்ல. சிறிலங்கா மீது போர்க்குற்றசாட்டுகள் தொடர்பான விசாரணைகளுக்கான கோரிக்கை வந்தபோதும், அதன்பின்னர் பொருளாதார அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டபோதும் சிறிலங்காவுக்கு சார்பாக செயற்பட்டு சிறிலங்காவை காப்பாற்றிவிட்டது இந்தியாவே. இந்தியாவின் அவ்வாறான ஒவ்வொரு முயற்சிகளுக்கு பின்னாலும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் இரத்தமும் சதையும் கரைந்து போனதே வரலாறு.

மேற்குலகைப் பொறுத்தவரை மஹிந்தவுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாகவே கருதப்படுகிறது. போர்க்காலத்தில் மேற்குலகின் கருத்துக்களை அசட்டை செய்து சீனா, ரஷ்யா, ஈரான், லிபியா, பாகிஸ்தான், பர்மா போன்ற நாடுகளின் உதவியுடன் மட்டுமே தன்னால் தாக்குப்பிடிக்க முடியும் என மஹிந்த செயற் பட்டார். அவ்வாறே மேற்குலகால் கொண்டுவரப்பட்ட அனைத்து அழுத்தங்களையும் முறியடித்தார்.

இப்போது மேற்குலகைப் பொறுத்தவரை தனது பலத்தை நிலை நிறுத்துவதற்கான சந்தர்ப்பம் வந்திருக்கிறது. சரத்பொன்சேகா அண்மையில் அமெரிக்கா சென்றபோது, அவரிடம் கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பாக விசாரித்ததும், அதன்பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் வரிச்சலுகையை வழங்கமுடியாது எனத்தேர்தல் சமயத்தில் கைவிரித்து நிற்பதும் அதன் குறியீடுகளாகவே பார்க்கப் படவேண்டும். அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒரு அணியில் நின்று ஆட்சிமாற்றத்தை எதிர் பார்த்திருக்க இந்தியா மட்டும் ஏன் மஹிந்த பக்கம் சாயவேண்டும்? அவ்வாறான நிலைப்பாட்டுக்கு முன்னர் குறிப்பிட்டது போல - இந்தியாவின் ஆட்புல வல்லாண்மை ரீதியான காரணங்கள் இருந்தாலும் அதற்காக மட்டும்தானா இந்தியா மஹிந்தவுக்கு ஆதரவாக செயற் படுகின்றது? போர்க்குற்றங்களுக்காக மஹிந்த விசாரிக்கப்பட்டால் மன்மோகன் சிங்கும் விசாரிக்கப்பட வேண்டி வரும் என்பதாலா? போரை நடத்தியவன் போர்க் குற்றம் செய்தமை நிறுவப்பட்டால் எரியும் வீட்டுக்கு நெருப்பு எடுத்து கொடுத் தவன் என்ற அடிப்படையில் இந்தியாவின் காந்தீய முகமூடி கிழிக்கப்பட்டுவிடும் என்பதாலா? கூட்டமைப்பை குலைத்து மஹிந்த வுக்கு ஆதரவாக - சிவாஜி லிங்கத்தை நிறுத்திய இந்தியா, தற்போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பையும் இந்தியாவுக்கு அவசரமாக அழைத்துள்ளது. இந்தியாவின் நலன்கள் என்பவை தமிழர்களின் உடலங்களுக்கு மேல்தான் எழுதப்பட வேண்டுமென இந்தியா இன்னமும் நினைக்குமாகவிருந்தால் வரலாற்றுப் பழியிலிருந்து இந்தியா எப்போதும் மீளப்போவதில்லை.



நன்றி: 'ஈழநேஷன்' இணையம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோதிராசா மனோன்மணி



யாழ்ப்பாணம், திருநெல்வேலி தெற்கு, மாரியம்மன் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சோதிராசா மனோன்மணி 14.01.2010 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான R.P. சிதம்பரநாதன் (Revenue inspecterJ/Municipalty ) சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் சோதிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு (இராசையா)- தங்கம்மா தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற குலசிந்தாமணி (ஆசிரியர்) அவர்களின்அருமை மைத்துனியும், இராசமனோ, தர்மினி(ஜேர்மனி), உத்தரதர்சினி (ஜேர்மனி), கோபிநாத் (கனடா), மயூரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும் பரமநாதன் (சிவன் ஸ்ரோஸ்), சிவகுமாரன், நிர்மலன் (ஜேர்மனி), அஜந்தினி(கனடா), கேசினி (கொழும்பு), ஆகியோரின்அருமை மாமியும் நிரோசன் (சிவன் ஸ்ரோஸ்), விசாகன், துவாரகன், பகிரேகா, கோபிகா, சசிரேகா, நிதர்சன், நிதுசா, சுதர்சன், மதீபன், சுகித், மயூஷிகா ஆகியோரின் பேர்த்தியும் தவமணி, சிவமணி ஆகியோரின் மூத்த சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக, கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34.மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
T.P. 0213737307,
0773667441, 0778096442

தகவல்
குடும்பத்தினர்
(சிவன் ஸ்ரோஸ் உரிமையாளர்
பரமநாதன் -மருமகன்).

(சி/5641158)

## சின்னையா திருநாவுக்கரசு (சின்ராசு)



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா திருநாவுக்கரசு 14.01.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய சின்னையா- சின்னி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னர்- சின்னம்மா (திருநெல்வேலி) தம்பதியரின் மருமகனும் பூமணியின் பாசமிகு கணவரும் ரவீந்திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வவீந்திரன் மற்றும் வவீந்திரா, இந்திரா, சசீந்திரா, சுசீந்திரா, சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோசேப் வில்சன், அன்ரனி, விஜயகுமார், சுபாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும் நாகமணி, தேவி, சின்னமணி, தெய்வேந்திரம் ஆகியோரின் சகோதரரும் இலட்சுமி, சின்னத்தங்கம், பாலசிங்கம், சரஸ்வதி, காலஞ்சென்ற தவமணி மற்றும் பாலசிங்கம், தங்கராசா, செல்வராணி (சாந்தி) ஆகியோரின் மைத்துனரும் ராகுலன், ரஜீந்தன், நிமாலினி, நிதுசன், நிதர்சன், நிதர்சனா, டெனுசியா, அதுர்சனா, அபிசாந் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஊரெழு பொக்கணை இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்-ரவீந்திரன் (பிரான்ஸ்)
தொ.பே: 0033605451038

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (93912)

## கனகசபாபதி தங்கம்மா (சங்கானை)



அல்லையம்பதி, துன்னாலையைப் பிறப்பிடமாகவும் சங்கானை, சிங்கப்பூர் ஆலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபல வர்த்தகர் அமரர் A.T.V.கனகசபாபதி (A.T.வேலுப்பிள்ளை அன்சன்ஸ் - உரிமையாளர், சங்கானை) அவர்களின் அன்பு மனைவி தங்கம்மா 14.01.2010 வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை- பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் வீரவாகு (இளைப்பாறிய அரச உத்தியோகத்தர், உரிமையாளர், Uni Lanka Tea Traders, MI Grounf Mezzanine floor Centre, Suppermarket Complex, Colombo-11, உதவியாளர், Polo Traders, சங்கானை), இரத்தினேஸ்வரன் (ஓய்வுபெற்ற அதிபர், பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை, தற்போது யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்), ஆறுமுக ராஜா (இத்தாலி, ஓய்வுபெற்ற ஆசிரியர், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்), தவதேவி, செல்வராணி, செல்வரத்தினம் (உரிமையாளர், சங்குசக்கரம் வியாபார நிலையம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயும் புவனேஸ்வரி, இராஜேஸ்வரியம்மா, இந்திராணி (இத்தாலி, ஓய்வுபெற்ற ஆசிரியை, சித்தங்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்), சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற உதவி அத்தியட்சகர், நில அளவையாளர் திணைக்களம்), விஜயநாதன், பூவர்ணமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான இ.செல்லம்மா, வே.தம்பிராசா, வே.கார்த்திகேசு மற்றும் வே.கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும் அரவிந்தன் (Q.A Consultant, Virtusa Indian Ltd, India), ஜெயந்தன் (Accounting Assistant VDO Partners Colombo), சுகிர்தராஜ் (இத்தாலி), சிந்துபாரதி (2nd Physical Education, University of Jaffna), மிதுனராஜ், திருமதி அன்ரன் யூனியஸ் இந்துஷா (இத்தாலி), சர்மிலா (4th Ayurvedic College, Jaffna), ஜெயமோகன் (G.C.E.- ஓமான்), ஜெயகீதன் (கணனித்துறை Meddle Sex University England), ஜெயராகன் (Queen land University of Technology, Australia), சுருதிகா (பயிற்சி ஆசிரியர், தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), வீணுகா (முதலாம் வருட கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), அகிபன், சயந்தி ஆகியோரின் பேர்த் தியும் கெனிஷாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.01.2010 வெள்ளிக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(நேற்றைய உதயனில் வெளியான இவ்விளம்பரத்தில் விடுபட்ட சில சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளது. இதனைச் சேர்ந்து வாசிக்கவும்).*

சிங்கப்பூர் ஆலய வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

# கால்கோள் விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.17

நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் கால்கோள் விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வணபிதா அ.அன்ரனி அமலராஜன் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக ஆர்.யோன் செல்வம் அடிகளாரும் மற்றும் கௌரவ விருந்தினராக பிரம்மஸ்ரீ பா. சிவக்குருக்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (50-9)

* * *

யாழ்ப்பாணம், ஜன.17

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் கால்கோள் விழா நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையினை பிரம்மஸ்ரீ குகதாசக் குருக்களும், வாழ்த்துரையினை வலிகாம கல்விவலய ஆசிரிய ஆலோசகர் திருமதி ரூபா உதயரட்ணம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். பாடசாலையின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி எம்.சிவபாலன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார். (50-9)

* * *

கோண்டாவில், ஜன.17

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய கால்கோள் விழாவும், சிறுதோழியர் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் க.கனகராசா தலைமையில் பாடசாலை ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக கிராமசேவையாளர் எஸ்.விக்னேஸ்வரன், ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் த.தங்கராசா ஆகியோர் கலந்து கொள்வர். (50-49)

* * *

நவாலி,ஜன.17

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் தரம் 1இன் கால்கோள் விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் த.சிவகடாட்சம் தலைமையில்நடைபெறும். பிரதம விருந்தினராக முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ச.சிவசக்தி தேவி கலந்துகொள்வார். (50-100)





புதியதொரு அறிமுகம்

Karizma Album, Storybook Album மற்றும் Digtal Album,Duro frame போன்ற உங்கள் அனைத்து நிஜமான நிழல்களையும் நீண்ட காலம் பேணிப்பாதுகாப்பதற்கு என தனித்துவமாக அதிகூடிய தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட U.V. Laminating இயந்திரத்தினை யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக

சிறிநதியா கலர் லாப்

நிறுவனத்தார் ஆகிய நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

சிறிநதியா கலர் லாப்
லக்ஷன் பிளாசா கட்டடம், 108 நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

FREE COMPUTER SCHOLARSHIP

75% வரை கட்டகணக்கழிவு பெறும் வாய்ப்பு

பரீட்சை நாள் JANUARY 31st SUNDAY

அனுமதிகளுக்கு முந்துங்கள்

* Free கொம்பியூட்டர் ஸ்கொலர்ஷிப் இற்கு கட்டணம் எதுவும் இல்லை.
* 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்ட பரீட்சை.
* பரீட்சை ஒரு மணிநேரம் கொண்டது.
* 15 வயது நிரம்பிய எவரும் பங்குபற்றலாம்.
* O/L தகமை உடயவராக இருத்தல் வேண்டும்.
* பரீட்சை அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.



TECHNO WORLD
Studies (Pvt) Ltd
344, Kasthuriyar road,
Jaffna 021 4921124


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பிரகாசம் வீதி பெயர் சூட்டும் தீர்மானம் உள்ளூராட்சி சபையில் நிறைவேறியது

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!**

19.01.1929 அன்று யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபையின் கூட்டம் யாழ்ப்பாணம் கச்சேரியில் சிவகுருநாதர் தலைமையில் நடைபெற்றது.

(ஆரம்பத்தில் கச்சேரியிலேயே யாழ்ப்பாண நகர சபையின் கூட்டங்கள் நடைபெற்று வந்தன.)

இக் கூட்டத்தில் காங்கேசன்துறை வீதி - ஐயனார் கோயில் வீதிக்கு சிவப்பிரகாசம் வீதி என பெயர் சூட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை சோமசுந்தரம் பிரேரித்ததுடன் வீதி திருத்த வேலைக்கென ஆயிரம் ரூபாவையும் வழங்கினார்.

இதே கூட்டத்தில் நூறு ரூபா வீதம் பத்து மின் விளக்குகளைக் கொள்வனவு செய்து வீதிகளில் பொருத்துவது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. யாழ்ப்பாண நகரசபைப் பகுதிக்கு மின் சாரம் வழங்குவதற்கு இருபத்தெட்டு லட்சம் ரூபா தேவையென்ற பிரேரணை முன்வைக்கப்பட்டது. தீ விபத்துக்குள்ளான வீரசிங்கம் பட மாளிகை லேடிறிட்ஜ்வே மண்டபம் என்பவற்றைத் திருத்துவதற்கு சிறு தொகைப்பணம் வழங்குவதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

**தாண்டவன்**


## HOUSE FOR RENT

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

SDC – Swiss Agency for Development and Cooperation is a government organisation of the Swiss Ministry of Foreign Affairs. We are looking for a house around Jaffna Municipality area for the residence of expatriate staff with the following conditions:

Should contain at least three to four rooms, a kitchen, two or more toilets and be able to park two vehicles

- Water & electricity available
- House should be in a good condition
- Availability of Air Conditioner and fans are most preferred

**Please contact: 021 222 3928 from Monday to Friday 9.0 Am till 5.0 Pm**

*Head of Field Office*
**Swiss Agency for Development andCooperation**
**521/11, Point Pedro Road,**
**Nallur, Jaffna**

(93916)


# யார் இந்த இயேசு?

இயேசுக் கிறிஸ்து பிறந்து 2010 ஆண்டுகள் ஆகிவிட்டன. உலக சரித்திரத்தையே கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என்றாக்கி உலக சரித்திரத்துக்குள் நாயகனாக வாழ்பவர் இவரே.மனித உய்வுக்காகஇறைவனால் வாக்குப்பண்ணப்பட்டவர் இவரே. இவர் வழியாகவேஇவ்வுலகமும் அண்ட சராசரங்களும் படைக்கப்பட்டன.ஆதிப் பெற்றோருடன் சிங்காரத் தோப்பில் உலா வந்தவர் இவரே. தன் கைகளையும் கால்களையும் ஆணிகளினால் துளையிடவும், தன் ஜீவனையே மனித உய்விற்காக மனமுவந்து ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கவும், வானில் இருந்து இறங்கி வந்த தேவ ஆட்டுக்குட்டி இவரே. உலக மக்களின் உய்வுக்காக ஞானிகளினாலும், சித்தர்களினாலும் எதிர்பார்க்கப் பட்ட மீட்பர் இவரே.உலக மக்களின் உய்விற்காக பலியாக் கப்பட வேண்டிய மாசற்ற ஆட்டுக் குட்டியின்ஒன்பது இலட்சணங்க ளும் கொண்டவர் இவரே. மனிதன் தூய்மையாக வாழலாம் என்று வாழ்ந்து காட்டியவர் இவரே. சொல், செயல் என்பதற்கும் ஒருபடி மேலே போய் உண்மையுடன் கூடிய உளத் தூய்மையால் மட்டுமே இறைவனைக் காண முடியும் என்று ஞானஒளி தந்தவர் இவரே.






ஒருவரை இச்சையுடன் நோக்கி னால் அவர் மனதால் விபச்சாரம் செய்தாயிற்று என்பது போல் ஒருவரை நாம் மனதால் வெறுத்தாலே கொலை செய்தாயிற்று என்று மெய் ஞானத்தைக் கற்பித்தவர் இவரே. பாவம், சாபம், நோய், மரணம் போன்ற கட்டுக ளில் இருந்து விடுதலை அளித்து பஞ்சபூதங்களை அடக்கிச் சர்வவல்லமையை வெளிப்படுத் தியவர் இவரே. இத்தனை வல்லமை இருந்தும் தாழ்ச்சியையும், தொண்டாற்றுதலையும் முதன்மைப்படுத்தியவர் இவரே.

விசுவசி; என் மகிமையைக் காண்பாய் என்று வாழ்வின் சூட்சுமத்தை விளங்க வைத்தவர் இவரே. வாழ்க்கையில் வரும் சோதனைகளில் இருந்து வெற்றி பெற்று வாழ தனது திருச் சரீரத்தையும் திருஇரத்தத்தையும் பரலோக உணவாகத் தந்து "நானே உயிருள்ள உணவு, இதை யாராவது தகுதியுடன் உண்டால் என்றுமே உயிர் வாழ்வான்" என்று நித்திய வாழ்வளித்தவர் இவரே. "நான் உங்கள் உள்ளக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கின்றேன், யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், நான் உள்ளே வந்து அவர்களோடு உணவருந்துவேன்" என்று பாவிகளான எமக்கு நம்பிக்கையூட்டுபவர் இவரே. தன்னுடைய சீடர்களுக்காக மட்டும் அவர் வேண்டவில்லை, அவருடைய சீடர்களின் வழியாக தம்மில் நம்பிக்கை கொள்ளும் நம் ஒவ்வொருவருக்காகவும் பரமபிதாவிடம் அவர் வேண்டிக்கொண்டதன் மூலம், தன்னிடம் தஞ்சமடைந்தவர்களைக் கைவிடமாட்டார் என உறுதி தருபவர் இவரே.

இயேசு சிலுவையில் மரணித்தபோது, இறைமக்கள் பலர் உயிருடன் கல்லறைகளில் இருந்து எழுப்பப்பட்டனர். இதன் மூலம் சிலுவைச் சாவு ஒரு தோல்வியல்ல; தனது சிலுவைச் சாவு,விசுவாசிகளுக்கு உயிர்ப்புத்தரும் என்று கோடி காட்டியவர் இவரே. தாம் வாக்குப்பண்ணிய படியே மரித்த மூன்றாம் நாள் உயிர்த்து எழுந்ததன் மூலம் தாம் தேவகுமாரன் என்று எண்பித் தவர் இவரே. உயிர்த்த இயேசு, பகிரங்க பாவியான மதலேன்மரியாவுக்கு முதலில் தோன்றி யதன் மூலம், பாவிகளை நோக்கியே தாம் இப்பூவுலகிற்கு வந்தார் என்று மீட்பின் நோக்கத்தை உணர்த்தியவர். சந்தேகம் நீங்கிய தோமா "என் ஆண்டவரே,என் கடவுளே" என்று இயேசுவை நோக்கிக் கதறியழுதபோது, தானும் பரமபிதாவும் ஒன்றே என்பதனை வெளிப்படுத்தியவர் இவரே.

பரம பிதாவுக்கும் எமக்குமிடையில் பரிந்து பேசுபவர் இவர் ஒருவரே. இந்த இயேசுவே பரிசுத்த ஆவியாகி நம்மிடையே வாசம் செய்கின்றார். எதனை அடைந்தால் நாம் பூரணமாக முடியுமோ, அந்த மெய்ப்பொருள் இந்த இயேசுவே. உண்மையும், வழியும், உயிருமானவர் இவரே. இவரால் ஆகாதது ஒன்றுமில்லை. இவரால் எமக்கு விடுதலையுண்டு,நல்வாழ்வுண்டு,அமைதி யும், சமாதானமும் பேரின்ப வாழ்வுமுண்டு. இந்த மெய்ப்பொருள் இயேசுவில் நம்பிக்கை கொள் வோம்.இவரில் நம்பிக்கை கொள்வதன் மூலம் நமக்கு அடுத்திருப்பவரை மதிப்போம். அன்பு செய் வோம். இதன் மூலம் சுதந்திரத்தைக் கைப்பற்றிக்கொள்வோம். இயேசுவுக்குப் புகழ் சேர்ப்போம்..

கிறிஸ்து இயேசுவே உமக்குப் புகழ்.

**சேவியர் ஜோசன்**

# நலன்புரி நிலையப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.17

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளிலிருந்து தற்காலிக இணைப்புப் பெற்றுவரும் ஆசிரியர்களில் குறைந்தது 35 ஆசிரியர்களை தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையப் பாடசாலைகளுக்கு நியமிக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் மேலதிக கல்விப் பணிப்பாளரைக் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

இராமாவில் நலன்புரி நிலையப் பாடசாலைக்கு 20 ஆசிரியர்களும், கைதடி நலன்புரி நிலையப் பாடசாலைக்கு 15 ஆசிரியர்களும் நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்த நலன்புரி நிலையப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் தமது நிரந்தரப் பாடசாலைகளுக்குச் சென்றுள்ளதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்புறுவதாக உதயனில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

(50-207)


## 60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.Iயின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)

60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

இலவச T.Shirt ஒன்றும் Tigo Sim English Book என்பன இலவசம்

இலவச Phone Sim



பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy ways English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு பெயர்,முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**The ENGLISH LANGUAGE INSTITUTE**
**P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002**



## ஐங்கரன் திருமண சேவை

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம், UK Citizen 24.05.1972 இல் பிறந்தவர். அனுச நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமில்லை, கம்பனி ஒன்றில் வேலை பார்க்கின்றார். A/L படித்த மணமகளை எதிர்பார்க் கின்றார். லண்டன் தொடர்பு: 00447961159759

## நூபதி காட்சியறையில்.....

- பேக்கரி மிசின்
- எலக்ரோனிக் தராசு

5000 ரூபா தொடக்கம் விசேட விலைகளில்

- இலகு முறைக்கட்டண வசதி
- இன்றிலிருந்து 7 நாள்கள் விசேட விலைக்கழிவு.

தொடர்பு: 0777427777


## தவறிவிட்டது

கோகுலவீதி, கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த திருமதி சரோஜினிதேவி கனகரட்ணம் என்பவரது தேசிய அடையாளஅட்டை (417501231V) யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் தந்துதவவும்.


இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
**Sithara Products**
*Puttalam, Road, Chilaw.*
*(Reg No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்,
(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அண்மையில்)



# STUDY IN UK

Colombo, நகரில் UK VISA க்களைப் பெற்றுக்கொடுத்துச் சாதனை படைத்துக்கொண்டிருக்கும் எமது நிறுவனம் யாழ்.மாணவர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.நகரில் கிளைக் காரியாலயம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

- UK பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கு உடனடியாக அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்
- UK VISA சம்பந்தமான இலவச ஆலோசனைகள்
- நான்கு வாரத்தில் London பயணமாக அரிய வாய்ப்பு.

## நீங்கள் ஏன் எமது நிறுவனத்தை தெரிவுசெய்யவேண்டும்

- ஆகக் கூடுதலான விசாக்களைப்பெற்றுக்கொடுத்து சாதனை படைத்துக் கொண்டிருப்பதால்
- UK யில் உள்ள பிரபல சட்டத்தரணிகளால் உங்கள் Visa Document தயாரிக்கப்படுகின்றன.
- Free IELTS Classes
- UK இல் பகுதிநேர வேலைவாய்ப்பு
- Admission within 12 hours
- Degree முடிவில் 2 வருட Work permit பெற்றுத்தரப் படும்.
- யாழ்.மாணவர்களுக்கு விசேட விசா ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படுகின்றன.


University of Portsmouth | University of Hertfordshire | University of Plymouth | The City College | College of Technology London

Jaffna Office:No.102 2/2, Navalar Road, Jaffna.
Web : www.expogroup.lk
T.P : 0117555511, 0714150995

(Group of Exponet (Pvt) Ltd.)

Colombo Office : No.379,1/2,Galle Road, Colombo - 06
T.P : 0117555511,12,13,14
London Office : No.56, The Gardens, Harrow Middlesex Ha 1 4EY UK.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “சகலரும் ஒற்றுமையாய் வாழக்கூடிய நாட்டினுள் உங்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பது எனது கடமையாகும்”

**உங்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கான எனது உத்தேச நடவடிக்கைகள்:**

- யுத்தம் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை, அவர்கள் விட்டுச் சென்ற சொந்த இடங்களில் உரிய முறையில் குடியேற்றி அவர்களுக்கான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து கொடுப்பேன்.
- உங்களையும் நாட்டையும் செழிப்படைய செய்யும் விவசாயத்தை உரிய முறையில் தொடர்வதற்கு, உங்களின் விவசாய நிலங்களை உரிய முறையில் பெற்றுக் கொடுத்து அதற்கு தேவையான சகல உதவிகளையும் உரிய முறையில் மேற்கொள்வேன்.
- பாரிய அழிவுகளை சந்தித்துள்ள நகர்களையும், கிராமங்களையும் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து கட்டியெழுப்புவதுடன், மக்கள் எதுவித பயமுமற்ற, சுதந்திரமாக வாழக்கூடிய ஓர் சூழலை உருவாக்குவேன்.
- கொடிய யுத்தத்தினால் உயிரிழந்த, ஊனமுற்ற மற்றும் பாதிப்புற்ற சகலருக்கும் நிவாரண உதவிகளை வழங்குவேன்.
- சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சட்டரீதியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பதுடன், யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த முன்னாள் புலி உறுப்பினர்களை உரிய முறையில் சீரமைத்து, தொழிற்பயிற்சிகள் வழங்கி இச்சமூகத்திற்கு ஏற்ற பிரஜைகளாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பேன்.
- மீனவ சமூகத்தின் பிரச்சினைகளை கண்டறிந்து, அவர்களின் தொழிலை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான வழி வகைகளை மேற்கொள்வேன்.
- ஆயுத மிரட்டல்கள் அற்ற, கப்பம் அற்ற வியாபார சூழலை உருவாக்குவதுடன், இதுவரை காலமும் வியாபாரத்திற்கு தடையாகவிருந்த போக்குவரத்து உட்பட்ட பல சேவைகளை மெருகேற்றுவேன்.
- ஜனநாயகத்தை நிலைநாட்டி, சிவில் நிர்வாக வாழ்க்கை நடைமுறையை செயற்படுத்துவேன்.
- சகல துறைகளிலும் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்துவதுடன், சிறந்த ஓர் சமூகத்தை உருவாக்கி நாட்டின் வளர்ச்சியை அதிகரிப்பேன்.

## ஜெனரல் சரத் பொன்சேகா

**நம்பிக்கை மிக்க மாற்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

தருபவர் - வித்யா

### மேடம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். சந்தோஷமான அனுபவங்களைப் பெறுவீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, வாக்குவாதம், வேலை நெருக்கடி, மன அமைதி பாதித்தல் போன்றவற்றை எதிர்கொள்ளலாம். குரு மற்றும் சனி சாதகமாக இருப்பதால், எந்த வேலையையும் தங்கு தடையின்றி சுலபமாக முடித்துக் கொள்வீர்கள். பதவி உயர்வை எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாள்களாகத் தடைப்பட்ட பணவரவுகள் வரலாம். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வழக்கு விவகாரங்களில் வெற்றிகிட்டும். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் நல்ல பலன் உண்டு. எதிர்ப்புகள், போட்டிகள் விலகி ஏற்றம் பெறுவீர்கள். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்களால் சந்தோஷம், மகிழ்ச்சி உண்டு. சூரியனுடன் ராகு சேர்ந்திருப்பதால், அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள் தொடர்பான விஷ யங்களில் அனுகூலம் இருக்காது. அதன்பின் அரச காரியங்கள் வெற்றிகரமாக முடியும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குக் கூடும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகிப் பாசம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் சிரமங்கள் நேரும். கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். காரிய வெற்றி உண்டு. பணவரவுகளைப் பெறலாம்.

### இடபம்

இந்த வாரம் பணவரவுகளைப் பெறலாம். திட்டமிட்ட காரியங்கள் தங்கு தடையின்றி நடக்கும். நண்பர்கள், சக ஊழியர்கள் உங்களைப் பாராட்டலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். நண்பர்களுக்காக உதவி செய்வீர்கள். பல நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம். மனதில் குதூகலம் அதிகரிக்கும். ஐந்தாம் இடத்தில் சனி இருப்பதால், தொழில், உத்தியோகம் மற்றும் விவசாயம் போன்ற விடயங்களில் எதிர்பார்த்தது நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். சிலர் உங்களை ஆசைகாட்டி மோசம் செய்துவிடலாம் என்பதால் கவனம் அவசியம். பிள்ளைகள் வழியிலும் எதிர்பாராத செலவுகள் நேரும். கடன் விவகாரங்களில் கவனம் அவசியம். செவ்வாய் மூன்றாம் இடத்தில் இருப்பதால், உடன் பிறப்புக்கள், பங்காளிகள் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. அவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். நிலம், பூமி விவகாரங்கள் சாதகமாக அமையும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பத்தாம் இடத்தில் குரு இருப்பதால், பணிபுரிவோர் வேலையில் அதிக கவனமாகச் செயற்பட வேண்டும். வீண் பழிகளைத் தவிர்க்க அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. இரண்டாம் இடத்தில் கேது இருப்பதால், உத்தரவாதம் இல்லாத விடயங்களில் மற்றவர்களுக்கு வாக்குக் கொடுக்க வேண்டாம். கொடுக்கல் வாங்கல்களிலும் கவனம் அவசியம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். சந்திராஷ்டமம் என்பதால், எதிலும் பொறுமையோடு செயற்படவேண்டும். எதிர்பாராத சந்திப்பு, செலவுகள் நேரும்.

### மிதுனம்

இந்த வாரம் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் அல்லது நண்பர்கள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். கடன் பாக்கிகள், கட்டண பாக்கிகளை செலுத்துவீர்கள். குடும்பத்தில் கலகலப்பு அதிகரிக்கும். நான்காம் இடத்தில் சனி இருப்பதால், தொழில், உத்தியோகம் மற்றும் விவசாய ரீதியான விடயங்களில் சிரமங்களையும், தடை, தாமதங்களையும் சந்திக்கலாம். ஜீவன காரியங்களை நினைத்த வேகத்திற்கு செயற்படுத்த முடியாமல், பிரச்சினைகளுக்கு ஆட்படலாம். பணிபுரிவோர் சக ஊழியர்கள் ஒத்துழைப்புக் கிடைக்காமல் அவதிப்படலாம். அதிக நேரம் வேலை பார்த்தாலும், குறை வான ஆதாயமே கிடைக்கும். ஒன்பதாம் இடத்தில் குரு இருப்பதால், மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். ஏழாம் இடத்தில் சூரியன், ராகு, சுக்கிரன், புதன் இருப்பதால், அரசியல், மருத்துவம், அரசாங்கம், தகப்பனார், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் தொந்தரவுகளேயன்றி, அனு கூலம் இல்லை. இவர்கள் வகையில் மனக்கசப்புகள் வரவும் வாய்ப்பு உண்டு. வாகனங்கள் திடீர் செலவு வைக்கலாம். சகோதரிகளுக்காகவும் கணிசமான பணத்தைச் செலவிடலாம். தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். சந்திராஷ்டமம் என்பதால் கவனம் அவசியம்.

### கடகம்

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆட்படலாம். உறவினர்கள் வகையில் செலவுகள், சிரமங்கள் நேரும். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். கேளிக்கை, பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகள் நேரும். சனி சாதகமான நிலையில் இருப்பதால், ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். பதவி உயர்வு, சம்பள உயர்வை எதிர் பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். வேலையாள்கள் அனுசரணையாக இருப்பர். நிலம், பூமி வாங்கப் போட்டதிட்டங்களில் முன்னேற்றம் காணலாம். குரு பாதகமான நிலையில் இருந்தாலும், இரண்டாம் இடத்தைப் பார்ப்பதால், தேவையான பணத்தை புரட்டிக் கொள்வீர்கள். சுபகாரிய விடயங்களில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பது கடினம். ஜென்ம ராசியில் செவ்வாய் சஞ்சரிப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான வகையில் அனுகூலத்தை விட அல்லல்களே அதிகம். சுக்கிரன் பாதகமாக இருப்பதால், கணவன் மனைவி இடையே மனக்கசப்புகள் உருவாகும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். சூரியன் சாதகமாக இருப்பதால், அரசியல், மருத்துவம், அதிகாரிகள் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக அமையும். 13, 14ஆம் திகதிகளில் பண வரவுகளைப் பெறலாம். 15, 16ஆம் திகதிகளில் சுறுசுறுப்பு, உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

### சிங்கம்

இந்த வாரம் புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். வெறுப்பு, விரக்தி ஆட்கொள்ளும். மற்றவர்களுக்காக உங் களின் கைப்பணத்தை செலவு செய்யலாம். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். குரு சாதகமான நிலையில் இருப்பதாலும், உங்களின் ராசியை பார்ப்பதாலும், செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும். மற்றவர்கள் மத்தியில் உங்களை முன்னிலைப்படுத்திக் கொள்வீர்கள். கூட்டுத் தொழிலில் பங்காளிகள் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி, சுமூக நிலைமை காணப்படும். மனைவி வழி உறவுகளால் அனுகூலம் பெறலாம். பிள்ளைகளின் செயற்பாடு உங்களை பெருமைப்பட வைக்கும். இரண்டாம் இடத்தில் சனி இருப்பதால், பணம் வந்த வேகத்தில் கரைந்து கொண்டிருக்கும். குடும்பப் பொறுப்புகள் கூடும். சொல் வாக்கை காப்பாற்ற முடியாமல் அவ்வப்போது தடுமாற்றங்களுக்கு ஆளாகலாம். விரய ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், நிலம், பூமி தொடர்பான வகையிலும், வீடு பராமரிப்பிற்காகவும், சகோதரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கவும் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். லாப ஸ்தானத்தில் கேது இருப்பதால், மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். நீண்ட நாள்களாக இழுத்தடித்த விடயங்கள் திடீரென முடிவுக்கு வரலாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் ஆறுதல் உண்டு. குழப்பம், தடுமாற்றம் அதிகரிக்கும். பணவரவுகளைப் பெறலாம்.

### கன்னி

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வழக்கமான பணிகளில் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். நினைத்தபடி காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகளைப் பெறலாம். செவ்வாய் லாப ஸ்தானத்தில் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். அவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்வுக்கு வரும். நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீங்கள் எதிர்பாராமலேயே சில நல்ல விடயங்கள் நடக்கலாம். சுக்கிரன், புதன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தாய் வழி உறவினர்கள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். கலைஞர்கள் எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். அதேநேரத்தில், தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். அரசியல், மருத்துவம், அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வகையில் ஆதாயத்தை விட தொல்லைகளே அதிகம். தொழில் ரீதியான விடயங்களில் கவனம் அவசியம். மாற்று மதத்தினர் தொடர்பான வி[illegible] நடந்து கொள்ளவும். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆ[illegible] வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

### துலாம்

இந்த வாரம் கைமாற்றாக, கடனாக கொடுத்த பணம் வரும். சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். நண்பர்கள் உதவி கிடைக்கும். திட்ட மிட்ட வேலைகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்லலாம். ஒரு செலவை நினைத்து கவலைப்படும் நேரத்தில், மற்றொரு செலவு ஏற்படலாம். குரு சாதகமான நிலையில் இருப்பதால், தடைபட்ட சில காரியங்கள் நடக்க ஆரம்பிக்கும். உங்களை நம்பி சிலர் பணப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். பூர்வீக சொத்துக்கள் தொடர்பாக உருவான பிரச்சினைகள் தீரும் வாய்ப்பு உண்டு. சனி விரய ஸ்தானத்தில் இருப்பதால், மற்றவர்களை நம்பி காரியங்களில் இறங்குவதை விட, நீங்களே அனைத்துக் காரியத்தையும் செய்வது நன்மை தரும். மேலும், எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். சூரியன், சுக்கிரன், ராகு சாதகமாக இருப்பதால், தந்தை, அரசியல் வாதிகள், அதிகாரிகள், உறவுப் பெண்கள், சகோதரிகள், மாற்று மொழி பேசும் நண்பர்கள் வகையில் ஆதாயம் உண்டு. அவர்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் கடன் அல்லது உதவி கேட்கலாம். நல்ல செய்திகளைக் கேட்கலாம். சந்தோஷமான அனுபவம் உண்டு. வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும்.

### விருச்சிகம்

இந்த வாரம் செலவு, அலைச்சல்களுக்கு ஆட்படலாம். பிடிவாதமான செயற்பாடுகளால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். பல நாள்களாக இழுத்தடித்த பணவரவுகள் வரலாம். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். உங்களுக்காக மற்றவர்கள் செலவு செய்யலாம். குரு நான்காம் இடத்தில் இருப்பதால், உடல் ரீதியான விடயங்களுக்காகவும், தாய் தொடர்பான வகையிலும் செலவுகள் நேரும். உறவினர்களுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். அதேநேரத்தில், தொழில் ரீதியான விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். சனி சாதகமாக இருப்பதால், கடந்த கால இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்பு உருவாகும். பல நாள்களுக்கு முன் வாங்கிப் போட்ட நிலம், பூமியை நல்ல விலைக்கு விற்கும் சூழ்நிலை உருவாகலாம். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டமும் கை கூடி வரும். இழுத்தடித்த வழக்குகள் முடிவுக்கு வரும். குடும்ப ஸ்தானத்தில் சூரியன், ராகு, சுக்கிரன், புதன் இருப்பதால், பணப்புழக்கத்திற்கு குறைவிருக்காது. இருந்தாலும், சர்ச்சைக்குரிய பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். அரசியல், மருத்துவம், அதிகாரிகள், தந்தை தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. தடைபட்ட அரச காரியங்கள் விறுவிறுப்பாக நடக்கும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு வி டயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் கைகூடும். எதிர்பாராத செலவுகள் நேரும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள்.

### தனுசு

இந்த வாரம் பணவரவுகளைப் பெறலாம். கடன் மீதிகள் வசூலாகும். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்பாராத செலவுகளால், பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம். நீங்கள் சிலரிடம் உதவி கேட்கலாம் அல்லது சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். ஜென்ம ராசியில் சூரியன், ராகு இருப்பதால், அடிக்கடி கோபதாபங்களுக்கு ஆட்படலாம். மன அமைதியை பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆரோக்கிய குறைவு, வீண் அலைச்சல் உண்டாகலாம். அவசரப்பட்டு சில காரியங்களைச் செய்துவிட்டு, பின்னர் அதற்காக வருந்துவீர்கள். புதன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், மாமன், மைத்துனர்கள், உறவினர்கள், நண்பர்கள் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். அவர்கள் வழியில் தொல்லைகளுக்கு ஆளாகலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வருவது தள்ளிப்போகலாம். மூன்றாம் இடத்தில் குரு இருப்பதால், பொருளாதார ரீதியான விடயங்கள் திருப்தி தரும் வகையில் இருக்காது. முயற்சிகளில் முட்டுக் கட்டைகளையும், தடைகளையும் சந்திக்கலாம். பிள்ளைகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் கோபதாபங்களுக்கு ஆட்படலாம். அஷ்டமத்தில் செவ்வாய் இருப்பதால், வாகனப் பயணங்களின் போது எச்சரிக்கை அவசியம். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் சிறு மனஸ்தாபம் ஏற்படலாம். நிலம், பூமி விடயங்களும் சாதகமாக இருக்காது. ஏழாம் இடத்தில் கேது இருப்பதால், கூட்டுத் தொழிலில் கவனம் அவசியம். மாற்று மதத்தினரால் சிரமங்கள் நேரும். உற்சாகமாக செயற்படுவீர்கள். செலவுகள் கூடும்.

### மகரம்

இந்த வாரம் காரிய வெற்றி உண்டு. தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். நல்ல செய்திகளைக் கேட்கலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடி கொள்ளும். நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். ஆசைப்பட்ட சில பொருட்களை வாங்குவீர்கள். பிள்ளைகளால் சந்தோஷம் அடைவீர்கள். குரு பகவான் குடும்ப ஸ்தானத்தில் வீற்றிருப்பதால், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். சண்டை போட்ட கணவர் மனைவியர் சமாதானமாகி ஒன்று சேருவர். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். பிள்ளைகள், மனைவி கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுத்து அவர்களை மகிழ்விப்பீர்கள். சனி ஒன்பதாம் இடத்தில் இருப்பதால், கடன் பிரச்சினைகளால் சிலர் அவதிப்படலாம். சொத்து விற்பனை முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். சூரியன், புதன், சுக்கிரன், ராகு போன்ற கிரகங்கள் விரய ஸ்தானத்தில் இருப்பதால், தந்தை, மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், சகோதரிகள், மாற்று மதத்தினர் வழியில் சிரமங்களையும், செலவுகளையும் சந்திக்கலாம். சூரியன் ராசி மாறி ஜென்மத்திற்கு வருவதால், கோபம், வேகத்தை குறைத்து எதிலும் பொறுமையாக செயற்பட வேண்டும். ஆரோக்கிய குறைவுகளையும் சந்திக்கலாம். செவ்வாய் ஏழில் இருப்பதால், சகோதரர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் நேரும். செலவு, அலைச்சல் உண்டு. உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். திட்டமிட்ட வேலைகளை எப்பாடு பட்டாவது முடிப்பீர்கள்.

### கும்பம்

இந்த வாரம் கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். பொழுது போக்கு, கேளிக்கை விடயங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். தம்பதியர் இடையே பாசம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். எட்டாம் இடத்தில் சனி சஞ்சரிப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்றவை தொடர்பான விடயங்களில் அடிக்கடி இடையூறுகளையும், சிக்கல்களையும் சந்திக்கலாம். உங்களிடம் நல்லவர் போல நடந்து கொள்பவர்கள், மறைமுகமாக விமர்சிக்கலாம். எதிலும் அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். ஐந்தாம் இடத்தில் கேது இருப்பதால், எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களுக்கு ஆட்படலாம். பிள்ளைகள் தொடர்பான காரியங்களிலும் எடுத்தோம், கவிழ்த்தோம் என, எதையும் செய்வது நல்லதல்ல. செவ்வாய் சாதகமாக இருப்பதால், நிலம், பூமி தொடர்பான விடயங்கள் அனுகூலமாக முடியும். உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். லாப ஸ்தானத்தில் சூரியன், ராகு, சுக்கிரன், புதன் சஞ்சரிப்பது அனுகூலமே. தேவையான பணத்தை புரட்டிக் கொள் வீர்கள். ஆடை, அலங்காரப் பொருட்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். அரச காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழி உறவுகள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்வர். சகோதரிகள் மீதான பாசத்தில் அவர்கள் கேட்டதை செய்வீர்கள். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். செலவு, அலைச்சல் உண்டு.

### மீனம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், எதிலும் அவசரப்பட்டு செயற்படக் கூடாது. மறதி, தண்டச் செலவு, காரியத்தடை, பயணத்தடை போன்றவற்றை எதிர்கொள்ளலாம். சோர்வு, சோம்பல் ஆட்கொள்ளும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம். சில விடயங்களை நினைத்து பயம் கொள்வீர்கள். ஏழாம் இடத்தில் சனி இருப்பதால், அடிக்கடி ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படலாம். உடன் பணிபுரிவோர் உங் களின் தலையில் வேலைகளை சுமத்தி விட்டு, அவர்கள் தப்பித்துக் கொள்ளலாம். மனைவி உடல் நலன் தொடர்பான வகையிலும் கவனம் அவசியம். குறிப்பிட்ட தொகையை அவருக்காக செலவிடலாம். இதைச் செய்தால் ஆதாயம் பெறலாமா, அதைச் செய்தால் ஆதாயம் பெறலாமா என, மனம் அல்லாடும். வியாபாரத்தில் ஏற்படும் மந்த நிலையாலும், சிரமப்படலாம். ராசிக்கு அதிபதி மற்றும் பத்தாம் இடத்திற்கு அதிபதி குரு விரய ஸ்தானத்தில் இருப் பதால், செலவுகள் கட்டுக்கடங் காமல் செல்லும். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். ஆதாயமில்லாத அலைச்சல் களுக்கு ஆட்படலாம். பத்தாம் இடத்தில் சூரியன், புதன் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் தொடர்பான வகையில் அனுகூலம், ஆதாயம் பெறலாம். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். சண்டை [illegible] உறவினர்கள் சமாதானமாகலாம். சுக்கிரன் பாதகமாக இருப்பதால், பெண்கள் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். காரிய வெற்றி உண்டு. சுபச் செய்தி கேட்கலாம். பணவரவைப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரைக் கலசம் நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.17

ஸ்ரீ தயாளனின் "கட்டுரைக் கலசம்" நூல் வெளியீட்டு விழா கொழும்பு உருத்திரா மாவத்தை தமிழ்ச் சங்கத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது.


இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

நூலாய்வுரையினைபலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் முதல்வர் ஆர்.எஸ். நடராஜா நிகழ்த்தவுள்ளார். (50-9)

# மரண அறிவித்தல்

## மத்தியாஸ் யோண்பின்ரன்

(டில்லிக்குமார்)



இல.136, பாங்சால் வீதி, குருநகரைச் சேர்ந்த மத்தியாஸ் யோண்பின்ரன் 11.01.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மத்தியாஸ்- நீற்றம்மா தம்பதியரின் அன்பு மகனும், அமிர்தநாதர்- றோசம்மா தம்பதியரின் மருமகனும், நசறேத்தம்மாவின் நல்துணைவரும், யோண்சன் (கனடா), யோண்சி (கனடா), யோண்கெனடி (டோகா), யோதினி, யோணியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், றொணிசா, யேசுராஜ் (கனடா), ரூபலதா, கென்ஸ்மன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜென்சன் (கனடா), ஜெக்சன் (கனடா), ஜெலினி (கனடா), பிரசன்னா, அர்ச்சனா, றினோசிக்கா, கெஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் இறுதிச்சடங்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

136, பாங்சால் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (93923)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கக் கலந்துரையாடல்

வலி.வடக்கு. ஜன.17

யாழ்ப்பாணக் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் தலைவர் ஆர்.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

தற்போது பாடசாலைகளில் 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பித்துள்ளமையால் போட்டிக்கான மத்தியஸ்தர்களை நியமணம் செய்தல் மற்றும் வசதிகள் சம்பந்தமாகவும் இங்கு கலந்துரையாடப்படவுள்ளது.

அனைத்துக்கிரிக்கெட் சங்க மத்தியஸ் தர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி செயலாளர் எஸ்.றொபேசன் அறிவித்துள்ளார். (50-86)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம். ஜன.17

திருகோணமலையில் அண்மையில் இடம்பெற்ற கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்துபேர் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு- என்.சிவராஜா, எ.செல்வராஜா, எஸ்.றொபேசன், எ.சிறிரமணன், எஸ்.நாதர். (04-23)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
## யாழ்.பல்கலைக்கழகம்

அங்கத்தவர்கள் அனைவருக்குமான முக்கிய அறிவித்தல்

1. பிரிவுபசார விழா - (Farewell)
2. வருடாந்த ஒன்றுகூடல் - மதிய உணவு (Annual Lunch)
3. வருடாந்தப் பொதுக்கூட்டம் (AGM)

என்பன 20.01.2010 புதன்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை முகாமைத்துவபீட மண்டபங்களில் நடைபெறுமென ஒவ்வொரு அங்கத்தவருக்கும் தனித்தனியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மதிய உணவில் பங்குபற்றுவதற்கான தங்களின் உறுதிச்சீட்டினை நாளை (18.01.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் சிரேஸ்ட பொது அறையில் அல்லது சங்க அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கலாநிதி செ.இளங்குமரன்
தலைவர்/ப.ஆ.ச.

கலாநிதி செ.சிவசுப்பிரமணியம்
செயலாளர்/ப.ஆ.ச.

(சி/564154)




STUDY IN UK
USA, AUSTRALIA, MALAYSIA & SINGAPORE

VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்! NO NEED IELTS

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)



HIGHER NATIONAL DIPLOMA
In collaboration with PARK Hospital Colombo 05



- MLT
- NURSING
- PHARMACY
- PHYSIOTHERAPY

PRACTICAL TRAINING CONDUCTED IN AFFILIATION WITH MAIN HOSPITALS IN COLOMBO
Official Internship providers : Apollo Hospital, Sir Anton Jayasooriya Memorial Hospital & Park Hospital

- PATHE possesses hostel & library facilities, equipped technical lab & modern computer centers which enable to disseminate modern global knowledge.
- Lecturers include medical officers & professors who have more than 20 years of experienc in teaching
- Programmes are conducted in English Medium for a duration of 2 years. Part-Time or Full-Time Basis *
- All courses are provided with audio, video visuals, multimedia presentation, DVD/CD-ROM, overhead projector through which modern teaching aids are utilized & all classes are provided with relevant study materials.
- Students sucessfully completing the HND will be provided with employment opportunities locally & in foreign lands.
- Students who are weak in English Language, courses will be provided free of charge.
- The Higher National Diploma is recognized world wide and is accepted by Diplomatic Missions for the purpose of migration.
- Those who complete the course successfully will be offered Direct admission to Degree level in 2nd or 3rd year in Universities & Colleges in UK, INDIA, Australia, Belarus & Maldives degree level on SEMI-scholarship basis.
- Curriculum structure has been compiled in accordance with international standards on the recomendation of Tertiary and Vocational Education Commission and conducted aiming at foreign employment
- Our diploma holders are employed in France, Italy, Germany, Spain, Portugal, Saudi, Australia, UK & USA
- Classes are conducted @ PARK Hospitals - Narahenpita

HOTLINE 0773171300

Worldwide Registrations & Accreditations
- Government of Sri Lanka
- Maldives Accreditation Board
- Maldives Nursing Council
- British NOV level 2

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Liberty Plaza (2nd Floor, Hall No 1/2), 250, R.A. De Mel Mawatha, Kollupitiya. Tel: 2575861



தைப்பூசத்தன்று வித்தியாரம்பம்

8th Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்
பாலர் பாடசாலை

கற்பித்தல் முறை:
Play Group 2-3 Years | Montessori 3-4 Years
Pre School 4-5 Years

அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பாடநெறிகள் பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமையவும், சர்வதேச தரத்திற்குமேற்ப G.C.E (O/L), G.C.E (A/L)

சிறார்களிற்கு படிப்படியாக ஆங்கில அறிவை விருத்திசெய்யும் 6 மாதகால பாடநெறிகள்.....

PRE FOUNDATION
FOUNDATION
LEVEL 1-2-3-4

வெளிநாடு செல்ல விரும்புவோரிற்கு, வெளிநாடு, உள்நாட்டு தொழில் வாய்ப்புக்களிற்கு, சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கு....

- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பாடநெறிகள்

விசேட நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா, ஒளிவிழா, பட்டமளிப்பு விழா, மாணவர் சித்திரம், கைவேலை, கணகாட்சி, Sports Meet.

IELTS
DIPLOMA IN ENGLISH
CERTIFICATE IN ENGLISH

Contact : 0773627055

BRITISH BUSINESS SCHOOL

நல்லூர் : NO: 140, Temple Road, Nallur, Jaffna. Tel: 021-222-5796

சுன்னாகம் : Lakshmi Cottage ( Near the New Court), K.K.S Road, Mallakam.

மானிப்பாய் : 252, ஆலடிச் சந்தி, Jaffna Road, Manipay.

புலோலி : Sri Pathmanat...

எமது நிறுவனத்திற்கு வேறு எந்தப் ... இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம்



# புகைப்படம்

கல்லூரிக் காதல்களையும், காதல் இல்லாத நல்ல நட்பையும் படம் பிடித்துக் காட்டியிருக்கும் திரைப்படம் புகைப்படம்!

நான்கு ஆண் நண்பர்கள், மூன்று பெண் தோழிகள், இவர்களுக்குள் பொறியியல் கல்லூரியில் சேர்ந்த நாள் முதல் ஏற்படும் நெருக்கமான நட்பையும், நான்கு ஆண்டுகள் முடிவதற்குள் உருவாகும் கிறக்கமான காதலையும், அது ஏற்படுத்தும் பாதிப்பையும் அழகாக பதிவு செய்திருக்கும் புகைப்படத்தில் நட்பு, உதவி, கோபம், ஏமாற்றம், துக்கம், காதல், காதலையும் தாண்டிய அன்பு என ஏகப்பட்ட விஷயங்கள் ஒரு கோர்வையாக இந்தக் காலத்துக்கு இதமான போர்வையாகச் சொல்லப்பட்டி ருக்கும் விதம் அற்புதம்.

நிஜத்திலும் கிருஷ்ணனாக, பார்க்கும் பெண்களிடம் எல்லாம் வழியும் கிருஷ்ணாவாக அம்ஜத், கோபக்கார, குடிகாரக் குருவாக சிவம், நக்கலும் நையாண்டியுமான நந்தாவாக நந்தா, தஞ்சாவூர் மாணவர் பாலாவாக ஹர்ஷ், அலட்டல் இல்லாத ஆந்திரப் பெண் கே.கே.வாக யாமினி, கிருஷ்ணாவின் காதலி ஷைனியாக ப்ரியா ஆனந்த், குரு மீது ஒரு கண்ணுடன் திரியும் மிருணாளினி என ஏழு பாத்திரங்களும் நடிப்பால் நம்மையும் நம் கல்லூரி நாட்களுக்கு அழைத்து போகின்றன.

மேற்படி ஏழுபேர் மாதிரியே சண்முகசுந்தரம், கல்லூரி அதிபர் - பேராசிரியர் கு.ஞானசம்பந்தம், அனிதா ஆசிரியையாக வரும் நீலிமா ராணி, அவரது காதல் கணவராகும் சின்னத்திரை வெங்கட் உள்ளிட்ட அனைவரும் பாத்திரம் அறிந்து நடித்து படத்தை தூக்கி நிறுத்த ஒத்துழைத்துள்ளனர்.

கரகாட்டக்காரன் கனகாவின் அப்பாவும், கரகர குரலுக்கு சொந்தக்காரருமான சண்முக சுந்தரத்தை துணிந்து கோர்ட்டும் - சூட்டும் போட்டு கல்லூரி நிர்வாகியாக்கி, ஆங்கிலம் பேச வைத்திருப்பதும், இளம் நாயகி ஷைனியின் அப்பாவாக்கியிருப்பதற்காகவுமே இயக்குனரைப் பாராட்டலாம். என்ன துணிச்சல்!

இயக்குனர் ராஜேஷ்லிங்கம், செல்வராகவனின் சிஷ்யர். அதற்காகக் காதலர்களைப் பிரிக்க வேண்டும், எதிர் மறையான முடிவினைக் காட்டிட வேண்டும் என்று ஏதாவது கட்டாயம் இருக்கிறதா என்ன?

படத்தின் ஆரம்பக் காட்சிகளில் எல்லாப் பாத்திரங்கள் பேசிக் கொண்டே இருப்பதையும், இறுதிக் காட்சிகள் இழுவையாக இருப்பதையும் தவிர்த்திருந்தால் கங்கை அமரனின் இசையும், விஜய் ஆம்ஸ்டராங்கின் ஒளிப்பதிவும், பி.லெனின் படத்தொகுப்பும் மேலும் பளிச்சிட்டிருக்கும்! எனினும் ராஜேஷ்லிங்கம் எதிர்பார்ப்பிற்குரிய இயக்குனர்களின் வரிசையில் இடம் பிடித்து விட்டார் என்றால் மிகையல்ல!

# கோரிக்கை

இசைஞானி இளையராஜா பொதுவாக அரசிடம் கோரிக்கை எதுவும் வைக்காதவர். அறப்பணி உதவிகளென்றால் கூட, தானே தன் சொந்த பணத்தில் செய்துவிடுபவர்.

ஆனால், அவர் அரசுக்கு வைத்த ஓர் கோரிக்கை, இசைக்கென்று தனியாகப் பல்கலைக்கழகம் ஒன்று தொடங்க வேண்டும் என்பதுதான்.

தனது இந்தக் கோரிக்கை விரைவில் நிறைவேறும் என்ற நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்தார் இளையராஜா.

சென்னை வைஷ்ணவாக் கல்லூரில் மாணவிகள் நடத்திய பொங்கல் திருவிழாவுக்கு சிறப்பு விருந்தினராக வந்தார் இசைஞானி. அப்போது நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் பங்கேற்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.

சில கால கட்டங்களில் உலக இசை மேதைகளைப் பற்றி தெரிந்துகொள்ள அவர்கள் வாழ்ந்த இடங்களுக்கு சென்றிருக்கிறேன். சுற்றிப் பார்த்திருக்கிறேன். இசை மேதை பீத்தோவனின் பியானோவைத் தொட்டுப் பார்த்திருக்கிறேன். அவர்கள் அந்த அளவு பாதுகாத்து வைத்திருக்கிறார்கள்.

ஆனால் நம் முன்னோர்களின் இசைக் கருவிகள் எங்கே போயின? இது பற்றி முதல்வரிடமும் பேசியிருக்கிறேன். இசைப் பல்கலைக்கழகம் பற்றியும் பேசியிருக்கிறோம். அந்த அமைப்பு உருவாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது- என்றார் இளையராஜா.





தமிழில் கல்லுக்குள் ஈரம், வைஜெயந்தி ஐபிஎஸ், மன்னன் உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ள விஜயசாந்தி, தமிழில் வாய்ப்புகள் குறைந்ததால் தெலுங்கு சினிமாப் பக்கம் போனார்.

தெலுங்கில் முன்னணி நாயகியாக இருந்த விஜயசாந்தி, பின்னர் நடிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு முழுநேரமாக அரசியலில் ஈடுபட்டு வந்தார். இப்போது நீண்ட இடைவெளிக்கு பிறகு நடிக்க வருகிறார். காக்கத்தியா அரசியான ராணி ருத்ரமா தேவியின் வாழ்க்கை வரலாற்று படத்திலேயே விஜயசாந்தி மீண்டும் நடிக்கவிருக்கிறார்.



# வேண்டாம் பட்டம்



ஜாதகத்தைப்பார்த்துத்தான் சாதகமான திட்டத்தையே வகுப்பார் அஜீத். நின்றால் ராகு காலம், நிமிர்ந்தால் எமகண்டம் என்று எல்லாவற்றும் ஜாதகம் பார்ப்பதில் இவர் இன்னொரு ராஜேந்தர்.

இப்படியெல்லாம் நேரம் பார்க்கும் இவர், தனது பட்டப் பெயரையே விட்டுத்தள்ளும் முடிவுக்கு வந்திருக்கிறார்.

தனக்கு தமிழகம் முழுவதும் இருக்கிற 46 ஆயிரம் ரசிகர் மன்றங்களை ஒருங்கிணைக்கும் வேலைகளில் தனது அலுவலக ஊழியர்களை முடுக்கி விட்டிருக்கிறார் அஜீத். இந்த மன்றங்கள் எப்போது தொடங்கப்பட்டன? இப்போதும் அவை செயற்படுகின்றனவா? ஒவ்வொரு மன்றத்திலும் எத்தனை பேர் இருக்கிறார்கள்? போன்ற முக்கியமான கேள்விகளுடன் மன்றத்தைப் புதுப்பித்து வருகிறார்கள் இந்த ஊழியர்கள்.

இந்த நேரத்தில்தான் தனது 'அல்டிமேட் ஸ்டார்' பட்டத்தை யாரும் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார் அவர். இப்படிப் போடத் துவங்கிய பின்புதான் வெற்றிகள் அரிதாகிப் போனதாகச் சொல்லப்பட்டதாம் அவரிடம். இதையெல்லாம் கருத்தில் கொண்ட அவர், அசல் படத்தில் வெறும் அஜீத்குமார் என்று மட்டும் போட சொல்லியிருக்கிறாராம்.

# புதிய நாயகி



'போடா போடி' படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக சரத்குமாரின் மகள் வரலஷ்மி நடிப்பதாக இருந்தது. பின்பு என்ன நினைத்தாரோ தெரியவில்லை வரலஷ்மி, அந்தப் படத்திலிருந்து கழன்று கொண்டார்.

அதிஷ்டவசமாக அந்தப் படம் இன்னமும் தொடங்கப்படவே இல்லை. இந்த நிலையில் வரலஷ்மி 'மமாமியா' என்னும் நடன நாடகத்தை அரங்கேற்றம் செய்தார். அதற்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்த அவர் அந்த நாடகத்தை உலகம் முழுக்க நடத்தி அந்தக் கலையை வளர்க்கப் போவதாகக் கூறினார். அந்தத் திட்டத்தையும் இடைநிறுத்திவிட்டு இப்போது ஆர்யா, விஷால் நடிக்க, பாலா இயக்கும் புதுப்படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகி இருக்கிறார். இந்தப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது. இதில் விஷாலுக்கு ஜோடியாக நடிக்கிறார் வரலஷ்மி. படம் முடியும்வரை வேறு படங்களில் தலை காட்ட கூடாது என்று நிபந்தனை போட்டு விட்டாராம் பாலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.டி.எம் நிறுவனமும் கனேடிய 'புறூன்ஸ் விக்' பல்கலைக்கழகமும் இணைந்து யாழ்.மாவட்டத்தின் மூன்று வருட பட்டப்படிப்பு பாடநெறிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களே இவை.

விழாவுக்கு வருகைதந்த விருந்தினர்கள் ஆரத்தி எடுக்கப்பட்டு வரவேற்கப்படுவதையும், ஐ.டி.எம். நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி காமினி ஹெட்டியாராய்ச்சி, 'புறூன்ஸ் விக்' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி அல்டர்சன், யாழ்.பல்கலைக்கழக வணிகபீடப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் ஷிரானி மில்ஸ், ஐ.டி.எம் நிறுவன யாழ்.பிராந்திய முகாமையாளர் சுதானந்த சர்மா, ஐ.டி.எம். நிறுவன சாவகச்சேரி கிளை இணைப்பாளர் ஆதவன் ஆகியோர் உரைநிகழ்த்துவதையும், விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா, உமா)


புதுக்கடைத் திறப்பு விழா

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் தைமாதம் 5 ஆம் நாள் (18.01.2010) திங்கட்கிழமை பகல் 9.45 மணிமுதல் 11.33 மணிவரையுள்ள மீன லக்கினமும் அவிட்ட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

இல.388, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில்

பரகத் ரேடிங்கொம்பனியும் ஏக விநியோகஸ்தரும்

எனும் வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவிருப்பதால் அத்தருணம் அனைவரும் வருகைதந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்



எங்களிடம் பாடசாலைக்குரிய காகிதாதிகள், காரியாலயத்திற்குரிய அச்சகத்திற்குத்தேவையான பலவர்ண காகிதாதிகள் மாணவமணிகளின் மனம் கவரும் சிறந்த அப்பியாசக் கொப்பி வகைகள், எழுது கோல்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்.

பரகத் ரேடிங்கொம்பனி
இல.388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விஸ்வநாதம் எங்கள் ஆத்ம கீதம்



தோற்றம் 14.05.1925

மறைவு 04.01.2010

நவாலியூர்
'பிரதிஷ்டா சிரோன்மணி'
கலாநிதி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் J.P
(பிரதமகுரு, நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானம்)

கர்மகர்த்தா சபையினர், வழிபடுவோர் சங்கத்தினர் மற்றும் திருப்பணிச் சபையினர்
நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானம்



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 ★ 04 ★ 1928



உதிர்வு 28 ★ 01 ★ 2009

அமரர் கதிர்காமத்தம்பி கனகலட்சுமி
திதி-பூர்வபட்ச துதியை

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் வாழும்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலடி, ஆனைக்கோட்டை.
(93930)
நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்.